விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-4835)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 30 ஞாயிற்றுக்கிழமை (12.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 176

## அமைச்சரவையின் ஒப்புதலைவிட

# பாதிக்கப்பட்டவரின் கருத்து முக்கியம்



## மனித உரிமை கண்காணிப்பகம் விடாப்பிடி

(கொழும்பு)

**அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ள காணாமல் போனோர் தொடர்பிலான அலுவலகம் குறித்து மீண்டும் கேள்வியெழுப்பியுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகம் காணாமல்போனோரின் உறவினர்களது கோரிக்கைகளும் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டே இந்த அலுவலகம் அமைக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.**

காணாமல் போனவர்கள் விவகாரம் குறித்து மனித உரிமை கண்காணிப்பகம், இலங்கையின் நல்லிணக்கப் பொறிமுறைமை குறித்த இணைப்புச் செயலகத்தின் செயலாளர் நாயகம் மனோ தித்தவல்லவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

காணாமல் போனவர்கள் அலுவலகம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகள் நியாயமானதே என மனித

15 ஆம் பக்கம் பார்க்க....

## புகையிரதம் மோதி வயோதிபர் பலி



(யாழ்ப்பாணம்)

புகையிரதம் மோதியதில் வயோதிபர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் மருதனார்மடத்திற்கும் இணுவிலுக்கும் இடைப்பட்ட புகையிரதப் பாதை பகுதியில் இடம்பெற்றுள்ளது.


யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கி புகையிரதம் பயணித்து கொண்டிருந்த வேளை, புகையிரத பாதைக்கு அருகில் நின்ற நபர் புகையிரம் வந்த வேளை அதன் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் உயிரிழந்தவர் தொடர்பான பெயர் விபரங்களை நேற்று இரவுக்குள் உறுதி செய்து கொள்ள முடியவில்லை. (செ-12)



ராஜிவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 25 வருடங் களுக்கு மேலாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 7 பேரின் விடுதலையை வலியுறுத்தி நேற்று சென்னையில் பேரணியொன்று இடம் பெற்றது. இதில் நடிகர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

## யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கஸ்ரன் ஸ்ரனிஸ்லஸ் நேற்று கடமையேற்பு





15 ஆம் பக்கம் பார்க்க....

## பாதுகாப்பு குறித்து நேற்று ஆராய்வு


(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாடரங்கை திறந்து வைப்பதற்காக இம்மாதம் 18ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழுக்கு உத்தியோகபூர்வமான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ள நிலையில், அது தொடர்பான பாதுகாப்பு கலந்துரையாடல் ஒன்று நேற்று சனிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் யாழ்

15 ஆம் பக்கம் பார்க்க....

# வடக்கின் எந்தவொரு நிதியும் மீள திறைசேரிக்கு அனுப்பப்படவில்லை!

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் கடந்த 2015ஆம் ஆண்டு நிதிச் செயற்பாட்டில் எந்தவொரு நிதியும் மீள திறைசேரிக்கு அனுப்பப்படவில்லை' என வட மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

2015ஆம் ஆண்டின் வட மாகாண சபைக்கான நிதிச் செலவீனங்கள் தொடர்பான முன்னுக்குப்பின் முரணான செய்திகள் பொதுமக்களி

15 ஆம் பக்கம் பார்க்க....

## நில அதிர்வு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் தெற்கு கடற்பரப்பில் 1000 கிலோ மீற்றர் தொலைவில் கண்டத்தகட்டு இயக்கவியல் செயற்பாட்டின் விளைவாக இலங்கையில் நில அதிர்வு ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை பேராதனைப் பல்கலைக் கழகத்தின் மூத்த பேராசிரியரும், முன்னாள் உப வேந்தருமான

15 ஆம் பக்கம் பார்க்க....

## விருசர நலன்புரித் திட்டத்தை இராணுவம் யாழில் ஆரம்பிப்பு

(யாழ்ப்பாணம்)

விருசர எனும் நலன்புரி திட்டத்தை இராணுவம் நேற்றைய தினம யாழில் ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்தினை யாழ்.மாவட்ட இராணுவ பாதுகாப்பு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியை அண்டிய இராணுவ முகாம் திறந்த வெளியரங்கில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இராணுவத் தளபதி முதன முதலாக இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இத்திட்டத்தில் 100க்கு அதிகமான பல அணி இராணுவத்தினர் மற்றும் ஏனைய பாதுகாப்பு

15 ஆம் பக்கம் பார்க்க....

## புதைக்கப்பட்ட திமிங்கிலத்தை தோண்டியெடுக்க முயற்சி!

### முல்லையில் 11 பேர் கைது

(முல்லைத்தீவு)

சில மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கி புதைக்கப்பட்ட திமிங்கிலத்தின் உடற்பாகங்களைத் தோண்டியெடுக்க முற்பட்ட 11 பேர் முல்லைத்தீவில கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு தூண்டாய் கரையோரத்தில் புதைக்கப்பட்டிருந்த திமிங்கிலத்தின் பாகங்களை சந்தேகநபர்கள் தோண்டியெடுக்க முற்பட்டபோது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சந்தேக நபர்கள்

15 ஆம் பக்கம் பார்க்க....

## மீனவர் ஒருவரை காணவில்லை!

(கரணவாய்)

கடலுக்கு சென்ற மீனவர் ஒருவர் கரை திரும்பவில்லை என வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை 3.00 மணியளவில் தொழில்நிமிர்த்தம் கடலுக்குச் சென்ற பொலிகண்டிப் பகுதியைச் சேர்ந்த அன்ரன்

15 ஆம் பக்கம் பார்க்க....

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி ஸ்ரேசன் வீதியில், சாவகச்சேரி நகர சபை கலாசார மண்டபத்திற்கு மேற்குப் புறமாக (A9 வீதியிலிருந்து 50M தூரத்தில்) நாலு பரப்புக் காணி நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. மண்டபம் மற்றும் பெரிய அளவிலான கட்டிடங்கள் அமைப்பதற்குகந்தது.

தொடர்புகளுக்கு:-0774162296 (4930)

A9 வீதியில் நுணாவில் சந்தி பருத்தித்துறை வீதி, மட்டுவில் தெற்கு துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 24 பரப்பு காணி விற்பனைக்குண்டு. 3, 5, 7, 10 என வீட்டுத் திட்டத்திற்கு அமைய பிரித்தும் கொடுக்கப்படும்.

0778730129

(4930)

## இலவச ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி

A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்காக மட்டுமே ஒழுங்குபடுத்தப்படுகிறது.

ஆர்வமுள்ளோர் 13.06.2016 அன்று மு.ப 10.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

இடம்: NALTC - 116, Adiyapatham Road, Thirunelvely.

Hotline - 0766901516 (சி-4871)

## வீடு வாடகைக்கு உண்டு

இருபாலைச் சந்திக்கு அருகில் பெரிய அனெக்ஸ் வீடு ஒன்று இணை குளியலறையுடன் வாடகைக்கு உண்டு. (இன்று முதல் தொடர்பு கொள்ளவும்)

தொடர்பு:- 077 992 7146 (4931)

## கார் விற்பனைக்கு.

HB XXXX இலக்கமுடைய FN15 NISSAN PULSAR விற்பனைக்குண்டு

தொடர்பு:- 0777 078292 (4926)

## Wanted

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் தேவை. கிளிநொச்சி,முல்லைத்தீவு பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு 0766901516 (சி-4871)

## உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

5Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்குறைப்பு

- UK, Canada, India போன்ற நாடுகளுக்கான Online Visa Application உட்பட சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து பெற்றுக் கொள்ளலாம்.
- அனைத்து நாடுகளுக்குமான விமான பயணசீட்டுக்கள்.

தொடர்புகளுக்கு:-

Kannathasan Global Cargo & Courier

பலாலி வீதி,கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

Hot line - 0766901516 (சி-4871)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வலிகாமம் மேற்கு பகுதியில் வசிக்கும் வயோதிபர் தம்பதிகளைத் தங்கி நின்று பராமரிப்பதற்கு போதிய அனுபவமுள்ள, திடகாத்திரமான (குடும்பப் பொறுப்பற்ற) பணிப்பெண் தேவை.

வேலை விபரங்கள் மற்றும் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு 021 225 1124 (4927)


# பரீட்சார்த்திகள் அனைவரும் சித்தி!

(கொழும்பு)

அடுத்த வருடம் தொடக்கம் சாதாரணதர பரீட்சைக்கு தோற்றுவோர் அனைவரையும் சித்தியடைய வைப்பதற்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துக் கொண்ட போது கல்வி அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அனைத்து மாணவர்களுக்கும 13 வருட பாடசாலை கல்வியை பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மனித மூலதனத்தை முன்னேற்றுவதற்கு எதிர்காலத்திற்கு பொருத்தமான கல்வி மாற்றத்தை இலங்கையில் ஏற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் அகிலவிராஜ்காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அனைத்து மாணவர்களும் 13 வருட கல்வியை பெறுவது கட்டாயமானது என பிரதமரும் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)


## வேலைவாய்ப்பு

♦வடக்கு-கிழக்கு விற்பனை அதிகாரி

பிரபல்யமான நீர் சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு 30 வயதிற்கு உட்பட்ட ஆங்கிலம், சிங்கள மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் கணனி, இரசாயன அறிவு என்பவற்றுடன் மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் எம்முடன் தொடர்பு கொள் ளுங்கள்.

LILY AQUA (PVT) LTD
info@lilyaqua.lk
TP:077 400 4729
077 328 4757

(சி-4872)

## காணி விற்பனைக்கு

யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில் கிராமக்கோட்டுக்கு அருகில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :- 077 911 5974 (4922)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532



ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

DMI COMPUTER EDUCATION

ஆங்கிலத்தில் சரளமாக பேச ஒரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி

Spoken English
Veta Fluency Diploma

# Foundation
# Dip in English
# Part - 1
# Part - 2

இம் மாதத்திற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் ....

| யாழ் நகர் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Sat, Sun 4.00 p.m.<br>Mon, Wed 9.30 a.m. | Tue, Thu<br>11.00 am. | Sat, Sun<br>8.00 a.m. | Mon, Wed,<br>11.30 a.m. | Sat, Sun<br>10.00 a.m. |

IELTS சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.

IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

DMI BRITISH COUNCIL இன் அங்கிகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்.

DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயல்ஸ் ஹோல் அருகாமை) | M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி. NSB வங்கி அருகில் | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

(சி-4869)

## ஏல விற்பனை

இடம் : விளையாட்டுத் திணைக்களம், வடமாகாணம். இல.25 செம்மணி வீதி, நல்லூர்.

காலம் : 15.06.2016 காலை 10.30 மணி

| S.No | Items | Total Unit |
|---|---|---|
| 01 | Camera sony with cover | 01 |
| 02 | Fan stand and table | 01 |
| 03 | Computer note book Toshiba | 01 |
| 04 | Knife forest | 01 |
| 05 | Oil Lamp small | 02 |
| 06 | Pc track | 01 |
| 07 | Phone Hand | 01 |
| 08 | Water dispenser | 01 |
| 09 | Track book self | 01 |
| 10 | Tire | 08 |
| 11 | Monitor | 04 |
| 12 | Ups | 05 |

பணிப்பாளர் விளையாட்டுத் திணைக்களம், வடமாகாணம்.

## ஜீவகவாத ஒத்தட பத்து

முதுகுத்தண்டு,கழுத்து, கணுக்கால், முழங்கால், இடுப்பு மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய இடங்களிலும் கார்ட்டிலேஜ் எனப்படும் எலும்பு திசுக்கள் குறைதல், திசுக்கள் கடினமடைதல் அல்லது தேய்மானம் ஆகியன காரணமாக ஏற்படும் வலிகளுக்கு ஜீவகவாத ஒத்தட பத்து மருந்தை பயன்படுத்துவதன் மூலம் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனைப் பயன்படுத்துவதன் மூலம் எலும்பு மூட்டுக்களில் திசுக்களின் வளர்ச்சி அதிகரிக்கும்.

Manufactured by:
Jeewaka Herbal Products (pvt) Ltd
Yakkala

.சந்தைப்படுத்துவோர்

சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி , யாழ்ப்பாணம்
(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகாமையில்)
தொ.பே - 021 - 222 2567

(C-4839)


# மரணஅறிவித்தல்

## மாணிக்கம் நவரத்தினம்

### (திருவருள் லொறி உரிமையாளர்)



முரசுமேடு கிளிநொச்சியை பிறப்பிடமாகவும், ஊரெழு கிழக்கு ஆனந்தகானத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் நவரத்தினம் (10.06.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜீவராணி அவர்களின் பாசமிகு கணவரும், நகுலேஸ்வரன் (NSP Fancy), நவயோன்சன் (லொறி உரிமையாளர்), நிறோஜன், நிறஞ்சன், சுபாசினி, ஜெனிபா ஆகியோரின் அன்பு தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு கிழக்கு, ஆனந்தகானம். (4928)

0776172445
0771916705

தகவல் :- குடும்பத்தினர்

# 7 பேரின் விடுதலையைக் கோரி சென்னையில் நேற்றுப் பேரணி

(சென்னை)

**பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்யக்கோரி சென்னையில் நேற்றுக்காலை பேரணி இடம்பெற்றது. பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் தலைமையில் நடைபெற்ற பேரணியில் பல்வேறு தரப்பினர் பங்கேற்றிருந்தனர்.**

ராஜீவ் கொலை வழக்கில் 25 ஆண்டுகளாக சிறையில் உள்ளவர்களை விடுதலை செய்யக் கோரி பேரணி இடம்பெற்றது. சென்னை ராஜரத்தினம் மைதானத்தில் தொடங்கி கோட்டை நோக்கி பேரணியாக சென்றனர்.

மேலும் நடிகர்கள் சத்யராஜ், நாசர், இயக்குனர்கள் விக்ரமன், ரமேஷ் கண்ணா உள்ளிட்ட திரையுலகினர் பேரணியில் பங்கேற்றிருந்தனர்.

இதேபோல் பா.ம.க. இளைஞரணி செயலாளர் அன்புமணி, வணிகர் சங்கத் தலைவர் வெள்ளையன், நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், தந்தை பெரியார் திராவிட கழக தலைவர் ராமகிருஷ்ணனும் உள்ளிட்டவர்களும் பேரணியில் பங்கேற்றனர். மேலும் புரட்சிகர இளைஞர் முன்னணி, கொங்கு இளைஞர் பேரவையினர் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும் பேரணியில் பங்கேற்றிருந்தன. (இ-10)

## ஜனாதிபதி மாளிகை வனப்பை நாற்பது ஆயிரம் பேர் பார்வை



(கொழும்பு)

கொழும்பு, கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையின் வனப்பை இதுவரையிலும் 40ஆயிரம் பேர் பார்வையிட்டுள்ளனர் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி மாளிகை மற்றும் கோல்டன் பூங்கா ஆகியவை, பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பார்வைக் காக 8ஆம் திகதி புதன்கி ழமையன்று ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன திறந்து வைத்தார்.

நாளை மறுதினம் 14 ஆம் திகதி வரை ஜனாதிபதி மாளிகையை, பிற்பகல் 2 மணிமுதல் 7 மணி வரையிலும் பார்வையிடலாம். பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 15 ஆயிரம் பேர் வரையிலும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வருகை தந்திருந்தனர். 29 ஆளுநர்கள் மற்றும் 6 ஜனாதிபதிகள், தமது கடமைப் பணிகளுக்காகவும் வாசஸ்தலமாகவும் பயன்படுத்தி வந்த இந்தக் கோட்டையும் கோல்டன் பூங்காவும், கடந்த 37 வருடங்களுக்கும் மேலாக மூடப்பட்டிருந்தது. பின்னர் அது, அரச உத்தியோகபூர்வ இல்லமாகப் பயன்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# தமிழ் மக்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூட்டுப்படுகொலை செய்யப்படவில்லை

### பந்துல குணவர்த்தன கூறுகிறார்

(கொழும்பு)

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் கூட்டுப்படுகொலை செய்யப்படவில்லை எனவும் இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்கள் தமிழ், முஸ்லிம் மக்களை அடக்கவில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இந்த நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்கள் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்தவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிப் பயங்கவராதத்தை இல்லதொழிப்பதற்கு நாட்டின் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

இதன் காரணமாகவே அரசியல் தலைவர்களை நாம் இழந்துள்ளோம். இறுதியாக படைகளின் சேனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ போரை முடிவுக்குக் கொண்டு வந்தார்.



அவருக்கு எதிராக எவ்வாறான விமர்சனங்கள் காணப்பட்டாலும் போரை முடிவுக்குக் கொண்டுவந்த கௌரவத்தை அவருக்கு வழங்க வேண்டும்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் கூட்டுப்படுகொலை செய்யப்படவில்லை. எமது ஆட்சியில் வடக்கு, கிழக்கில் அபிவிருத்தியை ஏற்படுத்தியிருந்தோம்.

சிறுவர்களை படையில் சேர்த்துக்கொள்ள புலிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர். பேனா பிடிக்க வேண்டிய சிறுவர்களிடம் சயனைட் வில்லைகள்வழங்கப்பட்டன.

ராஜபக்ஷ அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளை கவனத்திற் கொண்டு அந்தச் சிறுவர்களுக்கு தீர்வு வழங்கியது.

வடக்கு, கிழக்கில் 193 மகிந்தோதய பாடசாலைகள் அமைக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## இரகசிய வாக்கெடுப்பு நடந்திருந்தால் தோல்வி

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பாராளு மன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பொன்று நடத்தியிருந்தால் ரவி தோல்வியடைந்தி ருப்பார் என கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித் துள்ளார்.

இரகசிய வாக்கெடுப்பு நடத்தியிருந்தால் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பி னர்களே அவருக்கு எதிராக வாக்களித்திருப்பார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (இ-10)

## கடன் சுமையுடன் இருக்கும் போது சுகபோக வாகனம் கேட்பது தவறு

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், நாடு கடன் சுமையுடன் காணப்படும் வேளையில் மக்களுக்குச் சேவை செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் சுகபோக வாகனங்களை கேட்பது முற்றிலும் தவறான ஒன்று என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்காக 118 கோடி ரூபாவை செலவிடுவது நாடு தற்பொழுது முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு மத்தியில் பார்க்கும் போது பெரும் தவறு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இ-10)

# 50 ஆயிரம் இராணுவத்தினரை சாலாவவில் களமிறக்கத் தயார்

### இராணுவத் தளபதி அறிவிப்பு

(கொழும்பு)

ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சாலாவ பிரதேசத்தில் உள்ள 12 கிராம அதிகாரி பிரிவுகளிலும், வழமை நிலையை ஏற்படுத்த 50 ஆயிரம் இராணுவத்தினரைக் களமிறக்கத் தயார் என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

சீதாவாக்கை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த அனர்த்த நிவாரண கூட்டத்தில் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எதிர்பாராத வகையில் இடம்பெற்ற இந்த விபத்துக்காக இராணுவத்தின் சார்பில் பாதிக்கப்பட்ட மக்களிடம் மன்னிப்புக் கோருகிறேன்.

பொதுமக்கள், இராணுவத்தினர் மற்றும் பாதிக்கப்பட்ட இராணுவத்தினர் அனர்த்தங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதில் இறந்தவர்களின் தொகையை மறைப்பதற்கு எந்தத் தேவையும் இல்லை. ஒரு இராணுவ வீரர் இறந்தார், மற்றொருவர் காயமடைந்தார்.

பாதிக்கப்பட்ட மக்கள் தமது நாளாந்த வாழ்வை மீளமைக்க முடியாதுள்ளனர். அவர்கள் இயல்பு வாழ்வை ஆரம்பிக்க இராணுவம் உதவும்.

வெடிவிபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளுக்காக 12 கிராம அதிகாரிகள் பிரிவுகளிலும், 12 நலன்புரி நிலையங்கள் அமைக்கப்படும்.

தேவைப்பட்டால் இந்தப் பகுதியில் இயல்பு நிலையை ஏற்படுத்த 50 ஆயிரம் இராணுவத்தினரை கொண்டு வந்து நிறுத்தவும் தயாராக இருக்கிறோம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## ஜூலை மாதம் முதல் ஐரோப்பாவிற்கு ரூ.1600 கோடி பெறுமதியான மீன் ஏற்றுமதி

### அமைச்சர் அமரவீர நம்பிக்கை

ஐரோப்பிய நாடுகளுக்கு அடுத்த மாதம் முதல் ஆயிரத்து 600 கோடி ரூபா பெறுமதியான மீன்களை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கூட்டாக செயற்பட்டதன் மூலமே ஐரோப்பிய ஒன்றியம் விதித்திருந்த மீன் ஏற்றுமதிக்கான தடையை நீக்கிக் கொள்ள முடிந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் மீன் ஏற்றுமதிக்கு தடைவிதிக்க சில அரசியல் காரணங்கள் இருந்தன.

தேசிய அரசாங்கம் ஆட்சியில் இருப்பதன் காரணமாகவே தடையை நீக்கிக்கொள்ள முடிந்தது. ஐரோப்பாவுக்கு அடுத்த மாதம் முதல் மீனை ஏற்றுமதி செய்வதன் மூலம் நாட்டுக்கு நன்மை கிடைக்கும். ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையையும் எம்மால் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நிவாரணம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு கிடைக்கின்றதா அல்லது ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு கிடைக்கின்றதா? இலங்கை முழு நாட்டுக்கும் இந்த நிவாரணம் கிடைக்க உள்ளது.

சிலருக்கு இந்த வேலைத் திட்டத்தை சீர்குலைக்கும் தேவையுள்ளது. நாங்கள் ஜெனிவா குறித்தும் மின்சார நாற்காலி குறித்தும் பேசினோம்.

ஜனாதிபதி மீதும் தேசிய அரசாங்கத்தின் மீது சர்வதேசம் கொண்டுள்ள நம்பிக்கை காரணமாக இந்த பிரச்சினையை தீர்த்து கொள்ள முடிந்தது. இதனை சீர்குலைத்து நாட்டை பின்னோக்கி கொண்டு செல்ல முயற்சிக்கின்றனரா என கேள்விஎழுப்ப வேண்டும் எனவும் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (இ-10)

### கோபா அமெரிக்க கால்பந்து

# மெஸ்ஸி சுப்பர் ஹட்ரிக்

# காலிறுதியில் ஆர்ஜென்டினா

கோபா அமெரிக்கா கால்பந்து தொடரில் ரசிகர்கள் மெஸ்ஸி... மெஸ்ஸி என ஏங்க இறுதியாக களமிறங்கிய அவர், 3 கோல்கள் அடித்து ஹட்ரிக் சாதனை புரிய பனாமா அணியை ஆர்ஜென டினா 5:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

19 நிமிடங்களில் மெஸ்ஸி மஜிக்கை கண்டு ரசிகர்கள் மகிழ்ந்தனர். 19 நிமிடங்களில் மெஸ்ஸி அடுத்தடுத்து 3 ஹட்ரிக் கோல்கள். மேலும கடைசி கோலை உருவாக்கிய கற்பனைவளம் மிகுந்த லோங் பாஸ் என்று மெஸ்ஸி கோபா அமெரிக்க கால்பந்து தொடரில் நேற்று தீபங்கள் சிலவற்றை ஏற்றினர்.

கீழ்முதுகு காயம் காரணமாக விளையாடுவது சந்தேகம் என்று அறியப்பட்ட லியோனல் மெஸ்ஸியை பனமாவுகத எதிராக பதிலி வீரர்கள பட்டியலில் பயிற்சியாளர் ஜெரார்டோ மார்டினோ அறிவித்தார்.

ஆட்டத்தின் 61ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்டினா அணி 1:0 என்று முன்னிலை பெற்று 9 வீரர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பனாமா அணிக்கு எதிராக 2ஆவது கோலை அடிக்கத் திணறியபோது மெஸ்ஸி, அகஸ்டோ பெர்னாண்டஸுக்குப் பதிலியாக களமிறக்கப்பட்டார். ரசிகர்கள் மெஸ்ஸி... மெஸ்ஸி... என்று கத்தியபடி இருந்தனர், கடைசியில் அவர்களமிறங்கியவுடன் ரசிகர்களின் மகிழ்ச்சி ஆவேசமாக மாற 'ஜீனியஸ்'-இன் ஒவ்வொரு நகர்வும் பெரிய எதிர்பார்ப்புடனான பேரொலியாக மைதானத்தில் எழுந்த வண் ணம் இருந்தது.

இந்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் களமிறங்கிய மெஸி, போட்டியின் 67, 78 ஆவது நிமிடத்தில் கோல் அடித்து அணியை வலுப்படுத தினார். 87ஆவது நிமிடத்தில மீண்டும் அசத்திய இவர், ஹட்ரிக் கோலை பதிவு செய்து தான் ஒரு ஜீனியஸ் என்பதை நிரூபித்தார்.

முன்னதாக போட்டியின் ஆரம்பத்திலேயே (7 ஆவது நிமிடம்) ஆர்ஜென்டின வீரர் நிக்கோலஸ் கோல் அடித்தார். இறுதியாக தன பங்குக்கு அகுரோ (90) ஒரு கோல் அடிக்க ஆர்ஜென்டினா 5:0 என்ற கோல்கள் கணக்கில் பிரமாதமான வெற்றியை பதிவு செய்து காலிறுதிக்கு முன்னேறியது. (க)



### லோகேஷ் ராகுல் அசத்தலான அறிமுகம்

# தோனியின் இளம் இந்தியா சாதித்தது

சிம்பாப்வே பந்துவீச்சை சுலபமாக சமாளித்த லோகேஷ் ராகுல், அறிமுக போட்டியிலேயே சதம் கடந்து சாதனை படைக்க, இளம் வீரர்களைக கொண்ட தல தோனியின் இந்திய அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை ஜோராக ஆரம்பித்தது.

சிம்பாப்வே சென்றுள்ள இந்திய அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி ஹராரே ஸ்போர்ட்ஸ் கிளப் மைதானத்தில் நேற்று நடந்தது. இந்திய அணியில் லோகேஷ் ராகுல, கருண் நாயர், யுவேந்திரா சாகல் அறிமுகமாகினர். நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் களதடுப்பை தேர்வு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய சிம்பாப்வே அணி இந்திய அணியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 49.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழநது 168 ஓட்டங்களை எடுத தது. பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் பும்ரா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

சுலப இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு கருண் நாயர் (7) ஏமாற்றினார். பின இணைந்த லோகேஷ் ராகுல், அம்பதி ராயுடு ஜோடி நிதானமாக விளையாடியது. ராயுடு அரைச்சதமடித்தார்.

இந்தியாவின் வெற்றிக்கு 2 ஓட்டங்கள் தேவைப்பட்ட போது, மசகட்சா வீசிய 43 ஆவது ஓவரில் ஒரு இமாலய சிக்ஸர் அடித்த லோகேஷ் ராகுல் அறிமுக சதமடித்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

இந்திய அணி 42.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத திரம் இழந்து 173 ஓட்டங்கள் எடுத்து 9 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது. லோகேஷ் (100), அம்பதி ராயுடு (62) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக இந்திய அணியின் ராகுல் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் இந்திய அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. 2ஆவது ஒரு நாள் போட்டி ஹராரேயில் நாளை நடக்கிறது. (க)

# மரண அறிவித்தல்

## அமரர் வடிவேல் தம்பிராசா (செல்வம்)

**(சாரதி முன்னாள் த.போ.கழகம் விசுவமடு)**



றெட்பானா விசுவமடு வள்ளுவர்புரத்தை நிரந்தர முகவரியாகக் கொண்ட வடிவேல் தம்பிராசா (செல்வம்) அவர்கள் நேற்று 11.06.2016-ம் நாள் (சனிக்கிழமை) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் லட்சுமியின் அன்புக் கணவரும், பிரபாகரன், ஜெயகரன், காலம் சென்ற தீபா, ஜெயகரன் (குட்டி), ஜெயரூபன் (ரூபன்), சுபஸ்கி, சுகன்ஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசதுரை, பசுபதி, இராஜகோபால், சோதி, காலம்சென்ற செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பவிதாகினி அவர்களின் பாசமிகு மாமனாரும், அபிசன், லதுநிலா ஆகியோரின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மு.ப. 10.00 மணிக்கு (ஞாயிறு) இளங்கோபுரம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல் :-குடும்பத்தினர்

(C-4873)



# பணி நயப்பு விழாவும் மணி விழாவும்



### சேவைநலன் பாராட்டு

திரு.நாகலிங்கம் சுந்தரராசா அவர்கள் வட மாகாணத்தில் பல்வேறு பிரதேசங்களில் கிராம சேவையாளராக பணி புரிந்து ஓய்வுபெறும் இந்நாளில் அவரது வாழ்வும் வளமும் பெருகி ஓய்வுக் காலம் சிறப்புற அமையவும் அவரும் அவர் தம் குடும்பமும் மகிழ்வுடன் வாழவும் வாழ்த்துகின்றேன்.

திரு.நாகலிங்கம் சுந்தரராசா வேலணை பிரதேசத்தில் என்னோடு கடமையாற்றிய காலப்பகுதி ஓர் இக்கட்டான காலம். நிர்வாக சேவைக்கு நான் தெரிவு செய்யப்பட்டு மாறுபட்ட சூழல்களில் நடமாடும் அலுவலகமாக பிரதேச செயலகம் சேவையாற்றிய வேளைகளில் அப் பிரதேசத்தின் நிர்வாகத்தில் இக்கிராம சேவையாளரின் ஆளுமை என்னை மிகவும் ஈர்த்திருந்தது. மேலும் சீரிய பணி, தெளிந்த தீர்மானம், துரித நடவடிக்கை என்பன அவர்தம் அடையாளங்களாக இருந்தன. அதுமட்டுமல்லாது சக உத்தியோகத்தர்களிடம் பரிவும் பழகும் விதமும் சிறந்த பண்புகளாக அமைந்தன. இவ்வேளையில் இவரின் சிறப்புக்களிலெல்லாம் சமபங்கு கொண்ட இவரது துணைவியாரை இவ்வேளையில் நினைந்து போற்றுவது பொருத்தமானது.

இக்கட்டான காலகட்டத்தில் இறுக்கமான நிர்வாக சூழலிலும் தளர்வில்லாமல் சேவைபுரிய இவர்களைப் போன்றவர்கள் தந்த ஆதரவு மகத்தானது, போற்றத்தக்கது. இவரது ஓய்வுக்காலம் சிறப்புற அமைய இறைவனை இறைஞ்சி வேண்டி விரும்பி வாழ்த்துகிறேன்.

இ.இளங்கோவன்,
ஆளுநரின் செயலாளர்,
வடமாகாணம்.



### வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள திரு.நாகலிங்கம் சுந்தரராசா அவர்களது சேவை நயப்பு மற்றும் மணிவிழா நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை மட்டற்ற மகிழ்ச்சி தரும் செய்தியாகும். வேலணை, சாவகச்சேரி, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் 32 வருடங்கள் கடமையாற்றியுள்ள இவர் சோனகதெரு தெற்கு, நாவாந்துறை வடக்கு, வண்ணார் பண்ணை, கோட்டை, யாழ்.நகர் கிழக்கு, அத்தியடி பிரிவுகளில் தன்னலம் கருதாது 19 வருடங்கள் சேவையாற்றி அரச உதவிகள் மக்களிடம் முறையாகச் சென்றிட உழைத்த துடிப்பான உத்தியோகத்தராவார். கிராமங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களைப் பெற்று நடைமுறைப்படுத்துவதில் பெரும் பங்காற்றியமை, கிராம அலுவலர் அலுவலகங்களுக்கிடையிலான முகாமைத்துவ போட்டியில் 2008/2009 முதல் 2014/2015 வரை பிரதேச மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் வெற்றியீட்டியமை, 2008/2009 நடைபெற்ற போட்டியில் அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அதி சிறப்பு விருதினைப் பெற்று யாழ்.மாவட்டத்திற்கு பெருமை சேர்த்தமை என இவரது சேவைக்குப் பல மகுடங்கள் கிடைத்துள்ளன.

பொதுநோக்குச் சிந்தனையுடன் பல்துறை ஆற்றலுடன் அரச சேவையாற்றிய திரு.நாகலிங்கம் சுந்தரராசா அவர்களின் ஓய்வுக்காலம் பயனுடையதாக அமையவும் மணிவிழா சிறக்கவும் எல்லாம்வல்ல அத்தியடி விநாயகரைப் பிரார்த்தித்து வாழ்த்துவதில் மன நிறைவடைகின்றேன்.

பொன்னம்பலம் தயானந்தன்,
பிரதேச செயலாளர், பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

### வாழ்த்து



சுந்தரப் பெயரோன் சேவை சுடர்விடும்
நேர்மையாளன்
அந்தரப்படுவோர் துன்பம் ஆற்றிடும்
ஆண்மையாளன்
வெந்துயர் காலம் தன்னில் வீறுடன்
பணிகள் செய்தோன்
மந்திரச் சொல்லால் மக்கள் மனங்களில் நிறைந்திருப்போன்
சேவையின் சிகரமென்ன சிறப்புடன் சேவையாற்றி
தேவைகள் தெரிந்து மக்கள் குறைகளைச் செவிமடுத்தோன்
ஏழைகள் கண்ணீர் கண்டு ஏங்கிடும் ஈரநெஞ்சம்
தோழமை பூணும் அன்பால் துலங்கினான் சேவையாலே


கலாபூஷணம் கு.சரவணபவானந்தன்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.



## உயர்திரு. நாகலிங்கம் சுந்தரராசா (கிராம உத்தியோகத்தர் J/78, அத்தியடி, யாழ்ப்பாணம்)

| | |
|---|---|
| தந்தை பெயர்:- | பெரியதம்பி நாகலிங்கம் |
| தாய்பெயர்:- | நாகலிங்கம் சின்னப்பிள்ளை |
| பிறந்த திகதி:- | 11.05.1956 |
| ஆரம்பக் கல்வி:- | புங்குடுதீவு மேற்கு அ.மி.வித்தியாலயம் |
| உயர் கல்வி:- | புங்குடுதீவு மகா வித்தியாலயம் |
| கிராம அலுவலர் முதல் நியமனம்:- | 02.05.1984 பிரதேச செயலகம் சங்கானை, வட்டு மேற்கு. |
| திருமணம்:- | 11.06.1984 ஆறுமுகம் மகேஸ்வரி |
| மண்டைதீவு:- | 05.09.1984 |
| மண்டைதீவு கிழக்கு:- | 01.04.1990 |
| புங்குடுதீவு தென்கிழக்கு:- | 01.07.1991 |
| மட்டுவில் வடக்கு:- | 21.09.1995 |
| மாவட்ட செயலகம் கிளிநொச்சி:- | 22.11.1995 (தற்காலிக இணைப்பு) |
| சோனகதெரு தெற்கு:- | 05.05.1997 |
| நாவாந்துறை தெற்கு:- | 18.04.2001 |
| அத்தியடி:- | 01.05.2012 |
| ஓய்வு நிலை:- | 10.05.2016 |

### வாழ்த்துச் செய்தி



ஒரு கிராமசேவையாளராக பணியாற்றுவதில் இருக்கக்கூடிய சிரமங்களை எல்லோரும் அறிவார்கள். அதிலும் அனைத்து தரப்பினரதும் பாராட்டுக்களுடன் பணியாற்றுவது என்பது ஒரு சாதனையாகவே தற்போது பார்க்கப்படுகின்றது. அந்த வகையில் ஜே/78 அத்தியடி கிராம சேவையாளர் பிரிவில் கடந்த 4 வருடங்களாக பல சவால்களுக்கு முகம் கொடுத்து அரிய பணியாற்றி வரும் திரு. நாகலிங்கம் சுந்தரராசா அவர்கள் தனது அளப்பரிய சேவைகளை கிராம சேவையாளர் என்னும் பதவியிலிருந்து ஆற்றி ஓய்வு பெறுகின்றார். அவரது பணிகள் பற்றி இச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற வேண்டிய கடப்பாடு இப்பிரதேசத்தைச் சேர்ந்தவன் என்ற ரீதியில் எனக்கு உண்டு. அவரிடம் நான் கண்ட மிகச் சிறந்த பண்பு, நேரம் பார்க்காது கடமையை ஆற்றும் திறனாகும். தான் நிறைவேற்ற வேண்டிய பணிகளின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்தவராகையால் இரவு என்றும் பகல் என்றும் பார்க்காது கடமை செய்தவர் திரு.நா.சுந்தரராசா ஆவார்.

இதற்காக இப்பிரதேச மக்கள் அவருக்கு என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்பர் என்பது திண்ணம். மேலும் அவரது இன்னொரு சிறப்பான குணமாக அவரிடம் நான் கண்டது சமூக ஒழுக்க நெறிகளில் அவருக்கிருந்த அதீத ஈடுபாடு ஆகும். தான் வாழும் சமூகம் அதிக பட்சம் ஒழுக்கமும் கண்ணியமும் மிக்கதாக இருக்க வேண்டும் என்பதில் அவர் அதீத நம்பிக்கை கொண்டிருந்தார்.

இத்தகைய சமூக கண்ணோட்டம் மிக்க ஒருவர் எம்மிடையே இருப்பது ஒரு பாக்கியமாகவே நாம் கருதவேண்டும். அரச பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும் இத்தகைய ஒருவர் சமூக மேம்பாட்டுக்காக தொடர்ந்து செயற்படுவார் என்றே நான் கருதுகின்றேன். எனவே அவரது பணி தொடர வாழ்த்துவதுடன் ஓய்வுக்கால வாழ்க்கை குடும்பத்தவர்களுடன் இனிதாய் அமைய வாழ்த்துகின்றேன்.

இ.ஜெயசேகரன், தலைவர், யாழ்.வணிகர் கழகம்.



### மக்கள் சேவையில் நிறைவு கண்டவர்

அத்தியடி முன்னாள் கிராம அதிகாரி திரு. நா. சுந்தரராசாவின் பணி நயப்பு / மணிவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொது நிர்வாகப் படிமுறையில் கிராம அதிகாரிகளே முதல் நிலையில் மக்களுடன் தொடர்பு கொண்டவர்கள்– இவர்கள் பல்வேறு சேவைகளை வழங்குபவர்களாக இருப்பதுடன் , இடர் காலங்களில் இவர்களது சேவைகள் மிகவும் காத்திரமானவை.

திரு சுந்தரராசாவின் நீண்ட கால அரச பணியில் அத்தியடிப் பிரிவு (J/78) மக்கள் அவரது சேவையின் உச்ச பலன்களைப் பெற்றனர் எனலாம். அவரது தொழில் வாண்மை ,சமூக அணி திரட்டல் , நிகழ்வுகளை ஒழுங்கு படுத்தல் , பிணக்குகள் தீர்த்தல் ஆகியவற்றைத் தனது அறிவு, ஆளுமை , அனுபவம், மூலம் சிறப்பாகச் செய்தார். இவர் மக்களை நேசித்தார். மக்களும் இவரை நேசிக்கின்றனர். மக்களின் பிரியமுள்ள கிராம அதிகாரியாக வலம் வந்தார்.

இவர் ஓய்வுபெற்றாலும் தொடர்ந்தும் சமூக சேவைகளில் ஈடுபட வேண்டுமென்பதே அத்தியடி மக்களின் விருப்பம்– அத்தியடி விநாயகர் பெருமானின் அருள் இவருக்கு கிட்டுமாக.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை,
வாழ்நாள் பேராசிரியர்,
முன்னாள் துணைவேந்தர்.



### சேவை நயப்பு

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராகக் கடமையாற்றி தற்பொழுது ஓய்வுபெற்றுள்ள திரு.நாகலிங்கம் சுந்தரராசா அவர்கள் 1997 ஆம் ஆண்டில் இருந்து நாவாந்துறை கிராமத்தின் கிராம அலுவலராகவும் (ஜே/84,ஜே/85) 2012 மே மாதத்தில் இருந்து அத்தியடி கிராமத்தின் (ஜே/78) கிராம அலுவலராகவும் கடமையாற்றியவர். இவர் வினைத்திறன் மிக்கவராகவும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றி மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்த ஒரு மக்கள் சேவையாளன் ஆவார். இவருடைய சேவைக் காலத்தில் 2008, 2009 ஆண்டுகளில் யாழ்.மாவட்டத்தில் சிறந்த கிராம அலுவலருக்கான முதலாம் இடத்துக்கான விருதை ஜனாதிபதியிடமிருந்து பெற்றுக் கொண்டவர். பிரதேச செயலகத்திலும் அவர் சிறந்த கிராம அலுவலருக்கான போட்டியில் பல தடவைகள் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டவர். கிராமத்தின் அபிவிருத்தியில் முக்கிய பங்காற்றியதுடன் கிராமத்தில் சிறுவர் , மகளிர், முதியோர் அமைப்புக்களை கிராம மட்டத்தில் உருவாக்கி அத்துறை சார்ந்த வளர்ச்சியினை மேம்படுத்தி கிராமத்தின் மீள் உருவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்தவர். மக்களுடன் நேர் தன்மையுடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் தன்மையுடையவர். இவர் ஓய்வு பெற்றிருக்கும் காலத்திலும் மக்களுக்காக சிறந்த சமூக சேவையை தொடர்ந்தும் ஆற்ற வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

திருமதி சு.தெய்வேந்திரம்
பிரதேச செயலர்,வேலணை.

### மனமார வாழ்த்துகின்றோம்

அத்தியடிவாழ் கிராம மக்களின் மனங்களில் சுந்தரமாக வீற்றிருக்கும் திரு.நா.சுந்தரராசா அவர்களின் அளப்பெரிய சேவையின் உச்சப் பயனைப்பெற்ற மக்களின் நன்றியுணர்வையும் மகிழ்ச்சியையும் ஒருங்கே சேர்த்து பாராட்டிக் கௌரவிக்கவுள்ளனர்.

1.5.2012 அன்றிலிருந்து எமது கிராமத்தின் கிராம சேவையாளராக பணியேற்று நான்கு வருடகாலமாக எமது கிராமத்தை மேம்படுத்த அயராது உழைத்தவர். நேரகாலம் பார்க்காது மக்களின் இன்ப, துன்பங்களில் பங்கேற்று எம்மில் ஒருவராக எமக்கு வழிகாட்டியவர் எமது கிராம சேவையாளர்.

அவரது நான்கு வருட சேவைக்காலத்தில் அரசினால் எமக்குக் கிடைக்கக் கூடிய அனைத்து சலுகைகளையும் உரியவர்களுக்கு உரிய காலத்தில் பெற்றுக்கொடுத்தவர். அதோடு மட்டுமல்லாது அரசு, நிறுவனங்கள், வங்கிகள், சமூக மட்ட அமைப்புக்களின் அனுசரணையுடன் உதவிகளை பெற்றுக்கொடுத்து குடும்ப மேம்பாட்டுக்காக உழைத்தவர்.

மணிவிழாக் காணும் எமது கிராம சேவையாளர் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் நிறைவுடன் வாழ வாழ்த்தும்.

அத்தியடி வாழ் கிராம மக்கள்
சமூகமட்ட அமைப்புக்களும்

# மல்லாகம், ஏழாலைப் பகுதிகளில் ரவுடிகளின் தொல்லை அதிகரிப்பு

## பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த கோரிக்கை

யாழ்.மல்லாகம், ஏழாலைப் பகுதிகளில் இரவு நேரங்களில் ரவுடிக் கும்பலின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இரவு 8 மணிக்குப் பின்னர் மேற்படி பகுதிகளில் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள் இரவு வேளைகளில் நடமாடுவதற்கு அஞ்சுகின்றனர்.

அவ் ரவுடிக் கும்பல்கள் மோட்டார் சைக்கிளில் கைகளில் பொல்லுகள் கொண்டு அலைவதாகவும்பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வேலை முடித்துவிட்டு வீடு திரும்புவோரிடம் அவ் ரவுடிக் கும்பல்கள் இடைமறித்து தகராறு செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இரவு 7 மணி என்றால் அப்பகுதிகளில் எந்தப் பெண்ணும் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சில இளைஞர் குழுக்கள் சேர்ந்து பெண்களிடம் தவறான முறையில் நடந்து கொள்ள முயற்சிப்பதுடன் திருட்டு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் கவனத்தில் கொள்வதுடன் மேற்படி பகுதிகளில் இரவு நேரங்களில் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(இ-5)

# வடமராட்சி கிழக்குப் பகுதிக்கென தனியான பொலிஸ் பிரிவு வேண்டும்

(பொற்பதி)

வடமராட்சிக்கிழக்குப் பிரதேசத்திற்கென தனியான பொலிஸ் பிரிவொன்றை உருவாக்கித் தருமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வடமராட்சிக்கிழக்கு பிரதேசமானது மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரைக்குமான நீண்ட பிரதேசமாகும்.

இந்தப் பிரதேசத்தில் சுண்டிக்குளம் தொடக்கம் செம்பியன்பற்று வரைக்குமான பிரதேசத்தை பளைப் பொலிஸ் பிரிவினர் கண்காணித்து வருகின்றனர்.

மாமுனை தொடக்கம் மணற்காடு வரைக்குமான பிரதேசத்தை பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவினர் கண்காணித்து வருகின்றனர்.

இதன் காரணமாக வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இடம்பெறும் விபத்துக்கள் மற்றும் இறப்புக்கள் சம்பந்தமான சட்ட நடவடிக்கைகளுக்கு கிளிநொச்சி மாவடட நீதிமன்றம் அல்லது பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தை நாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வடமராட்சிக்கிழக்கிற்கு நிர்வாக மாவட்டம் யாழ்ப்பாணம் ஆகையால் அனைத்து நடவடிக்கைகளும் யாழ்.மாவட்டத்திலே மேற்கொள்ளப்படுகின்றது.

ஆனால் பொலிஸ் நீதிமன்ற நடவடிக்கைகள் சுண்டிக்குளம் தொடக்கம் செம்பியன்பற்று வரைக்கும் கிளிநொச்சி மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

வெற்றிலைக்கேணி பகுதியில் உள்ள ஒருவர் நோய்வாய்ப்பாட்டு மருதங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டால் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலைக்கு மாற்றுகின்றனர்.

இதேவேளை இறப்பு ஏதேனும் ஏற்பட்டால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை திடீர் மரண விசாரணை மற்றும் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் விசாரணை என்பன இடம்பெறும்.

வடமராட்சிக் கிழக்குப் பிரதேச மக்களின் அனைத்துத் தேவைகளும் யாழ். மாவட்டத்துடன் இருக்கும் போது வைத்திய சட்டநீதியான நடவடிக்கைகள் பொலிஸ், நீதிமன்ற விசாரணைகள் கிளிநொச்சி மாவட்டத்துடன் இருப்பதால் அப்பகுதி மக்கள் பல தரப்பட்ட சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனை விட வடமராட்சிக் கிழக்கில் அதாவது குற்றச் செயல்கள் இடம்பெற்றால் அது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயின் பளை அல்லது பருத்தித்துறை பொலிஸ் நிலையங்களையே நாட வேண்டியுள்ளது. எனவே வடமராட்சி கிழக்கு பிரதேசத் திற்கு தனியான ஒரு பொலிஸ்பிரிவினை உருவாக்க உரியவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-64)

# தொழிற்பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாக கொண்டு முழு நேர மற்றும் பகுதி நேர தொழிற் பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது. பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் இப்போதுநடைபெற்று வருகின்றன.

இக்கற்கை நெறிகளாவன விருந்தோம்பல் கற்கை நெறிகளான சமையலாளர், வெதுப்பாளர் , அறைபராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), இருசக்கர மற்றும் முச்சக்கரவண்டி திருத்துநர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் அலுமினிய பொருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், மரவேலை தொழில் நுட்பவியலாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர் ஆகும்.

இக்கற்கை நெறிகள் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இக்கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழிற்றகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகள் ஆகும்.

இக் கற்கை நெறிகள் கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் , 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல 12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் அல்லது வலந்தலை சந்திகாரைநகரில்உள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 24.06.2016 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ-5)

# திலினவுக்கு யானை விற்றவர் கைது

(கொழும்பு)

முன்னாள் மேலதிக நீதவான் திலின கமகேயிற்கு யானைக் குட் டியை சட்ட விரோதமாக 30 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ததாக கூறப்படும் மஹரகம சந்திரரத்ன யட்டவர என்பவரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நுகேகொட பிரதான நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான கனிஷ்க விஜேரத்ன உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபரை பிணையில் விடுவிக்குமாறும் அதற்கான நியாயங்களை முன்வைக்க சட்டத்தரணிகள் தயாரான வேளை, அந்தக் காரணங்களை நாளை 13 ஆம் திகதிக்கு நீதிமன்றத்தில் முன்வைக்குமாறு நீதிபதி தெரிவித்துள்ளார். (இ-10)

# தொழிற்பயிற்சிக்கு நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாக கொண்டு முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற் பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

பண்டத்தரிப்பு தொழிற் பயிற்சி நிலையத்தில் 2016 - 2 ஆம் அரையாண்டிற்கான நேர்முகத்தேர்வு நாளை 13 ஆம் திகதி திங்கட்கிழமை முல்லையடி வைரவர் கோவிலடி பிரான்பற்று, பண்டத்தரிப்பு எனும் இடத்தில் முற்பகல் 10 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இக்கற்கை நெறிகளை கற்க விரும்புவர்கள் சுயவிபரக் கோவை, தேசிய அடையாள அட்டை மற்றும் கல்விச்சான்றிதழ்கள் என்பவற்றுடன் சமுகமளிக்கவும்.

இங்கு அலுமினிய பொருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர், வீட்டுமின்னிணைப்பாளர், தகவல் தொடர்பாடல் , தொழில்நுட்பவியலாளர் மற்றும் அழகுக்கலைவல்லுநர் ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கவுள்ளன. (இ-5)

# தொழிற்றுறை விரிவாக்க நிகழ்ச்சித் திட்டம் யாழில்

சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் அவ்வாறான சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறைகளில் ஈடுபட தயாராக உள்ளவர்களுக்கும் இடையிலான தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்கிலும் அதன் மூலம் நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையில் மேலும் விரிவாக்கத்தை ஏற்படுத்தும் நோக்கிலான நிகழ்ச்சித்திட்டமொன்றை இலங்கை பட்டயக்கணக்கறிஞர் நிறுவனம் 15.06.2016 புதன்கிழமை முற்பகல் 10.30 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை இல.33, ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள கிறின் கிறாஸ் விருந்தினர் விடுதியில் நடத்த தீர்மானித்துள்ளது.

இதே தினத்தில் பிற்பகல் 1.30 முதல் 4 மணிவரையிலும் 16.06.2016 வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரையிலும் வர்த்தகநிலையங்களை நடத்துபவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டமும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே இந்நிகழ்ச்சி திட்டத்தில் பங்குபற்ற விரும்பும் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ளோரும்அவ்வாறானதொழில்துறை முயற்சிகளில் ஈடுபட தயாராக உள்ளவர்களும் மற்றும்வர்த்தகர்களும் பங்குபற்றுமாறு இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனம் அழைக்கின்றது.

இந்நிகழ்வில் பங்குபற்றுவதற்கு ஆர்வமுடையவர்கள் இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தின் தொடர்பாளர் வானதியை 011 328 8602 இலக்க தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அல்லது 021222 8593 இலக்க தொலைபேசி மூலம் யாழ். வணிகர் கழகத்துடன் தொடர்பு கொண்டு தங்களது வருகையை உறுதி செய்து கொள்ளலாம். மேலும் அரசாங்கத்தினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வற்வரி சம்பந்தமான ஒழுங்கு விதிகள் தொடர்பாகவும் மேலதிக விளக்கங்களை இந்நிகழ்ச்சி திட்டத்தினூடாக அறிந்து கொள்ள முடியும் என யாழ்.வணிகர் கழகச் செயலாளர் இ.ஜனக்குமார் அறிவித்துள்ளார். (இ

# மரண அறிவித்தல்

## திருமதி வேலாயுதம் தெய்வநாயகி



யாழ்.அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பு அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதம் தெய்வநாயகி 10.06.2016 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வேலாயுதத்தின் (முன்னாள் கட்டட ஒப்பந்தகாரர்) அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சின்னப்பு - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வடலியடைப்பு வைத்தியர் இராசநாயகம், இரத்தினம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான உத்தமிப்பிள்ளை, அன்னம் , சேனாதிராஜா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற திவாகரன் மற்றும் பகீதரன் (UK), ஜெனார்தன் (தாதி உத்தியோகத்தர் - ஆ.வை தெல்லிப்பழை), நாவலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிஷாந்தினி (UK), வசந்தகுமாரி (ஆசிரியை- மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், அஸ்மிதா, கவின், கரிஷன், தரணிகா, அஸ்விகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் கனகம் , செல்லம், காலஞ் சென்றவர்களான அன்னம், ஜெகநாதன் மற்றும் மகேஸ்வரி , காசிநாதர், சரோஜினிதேவி, விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, நடராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 12.06.2016 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

டச்சுவீதி, அளவெட்டி.

தகவல் :- குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு : வேலாயுதம் - 0217900358 / பகீரதன் - 0094776064814

ஜெனார்தன் - 0776109143 / நாவலன் - 0094765413304

(4924)

# அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது

(கொழும்பு)

சீரற்ற வானிலையால் பல ஏக்கர் விவசாய செய்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்த போதிலும், எதிர்காலத்தில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

தேவையான நெல், ஏற்கனவே களஞ்சியங்களில் உள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் எம்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

2015-2016 பெரும்போகத்தில் 135,000 மெட்ரிக் தொன் அரிசி கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த போகங்களின்போது கொள்வனவு செய்யப்பட்டு, எஞ்சியுள்ள பழைய நெல் தொகையை விலைமனு கோரல் மூலம்விற்பனை செய்வதற்கு அரசாங்கத்தின் அனுமதி கிடைத்துள்ளதாக நெல் சந்தைப் படுத்தல் சபையின் தலைவர் தெரிவித்தார்.

புதிதாக கொள்வனவு செய்யப்பட்டுள்ள நெல், உடனடியாக விநியோகிக்கப்பட மாட்டாது என்றும், தேசிய ரீதியாக அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில் அதுகுறித்து ஆராய்ந்து போதுமானளவு நெல்லை விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் சபையின் தலைவர் எம்.பி. திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நாட்டின் பல மாவட்டங்களில் சுமார் 30 ஆயிரம் ஏக்கர் வயல்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கமநல சேவைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியிருந்தது. (இ-10)


## நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

**கலைமாமணி**
**Dr.S.S. சர்மா குருஜீ**

**076 725 6024** (C-4662)

நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்



## தென்மராட்சி இலக்கிய அணி நடாத்தும்
# தமிழ் அமுதம்-05

**இடம்:**
தமிழ்க் கோட்டம்
(கம்பன் கல்லூரி வளாகம்)
சங்கத்தானை, சாவகச்சேரி.
**காலம்:**
12.06.2016 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:**
மாலை 4.30 மணி

### நிகழ்வின் நிரல்

**மங்கல விளக்கேற்றல்**
திரு. திருமதி சிவநீதன் தம்பதியினர்
(உரிமையாளர், ஸ்ரார் ஹோட்டல், சாவகச்சேரி)
**கடவுள் வாழ்த்து**
திரு.பா.விக்கினேஸ்வரன் அவர்கள்
**தலைமையுரை**
திரு. ந.ஜெயகுமாரன் அவர்கள்
(அதிபர், யா/ டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி)
**எழிலுரை**
பொருள்: "காலந்தோறும் தமிழ்க்கவிதை"
ஆற்றுபவர்: கவிஞர் நாகசிவசிதம்பரம் அவர்கள்
**"பட்டி மண்டபம்"**
நடுவர்: கலாநிதி செ.சேதுராஜா அவர்கள்
பொருள்:
பெருமை மிகு தமிழ்க் கவிதை மரபை
இன்றைய சினிமாக் கவிதைகள்

| சிறப்பித்து வருகின்றன! | சீரழித்து வருகின்றன! |
|---|---|
| திரு.ச.மார்க்கண்டு | திரு.அ.வாசுதேவா |
| திரு.செ.செல்வரமணன் | திரு.தெ.கர்ஷன் |
| திரு. க.சிந்துஜன் | திரு. ஞா.பிருந்தாபனம் |

இ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொள்வாம்"
அன்புடன் தென்மராட்சி இலக்கிய அணியினர்



## இறைச்சிக்கோழி விற்பனை

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

1 Kg சுத்தம் செய்தது 500/= கூடுதல் கொள்வனவுக்கு 480/= மட்டும்.

U.S.A.பாம், குளப்பிட்டி றோட்,
ஆனைக்கோட்டை.
TP:077 868 9500,
077 949 3776
(4925)



## விற்பனைக்கு

A3- றயோபி அச்சியந்திரம்
A4- டேவிட்சன் அச்சியந்திரம்
32"- பேப்பர் கட்டிங் மெசின்
(4911)

தொடர்பு:-077 616 1125
யாழ்ப்பாணம்.



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா:18செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:HNDA/<br>அரசதொழில் குவைத்<br>தொ.இ: B/5914 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 33<br>உயரம்: 5'3"<br>தகைமை தொழில்:கணணி<br>பொறியியலாளர் கனடா<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: G/5943 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 27சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/<br>சொந்ததொழில்<br>தொ.இ: B/5916 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 54 செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5945 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம333: ரோகினி<br>கி.பா: 64செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்<br>தொ.இ: B/5917 | பிறப்பு: 1989 RC<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/5917 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 72செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L/டோகா<br>தொ.இ: B/5918 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 38<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5950 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## இராசி பலன்

12.06.2016
(வைகாசி 30, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
அட்டமி பின்னிரவு 5.35 மணிவரை
பூராடம் பிற்பகல் 3.02 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| | | சூரி சுக் புத | |
| கேது | **கிரகநிலை** **சந்திராஷ்டமம்** அவிட்டம், சதயம் இரவு 9.45 இற்கு கன்-சந் | | சந் |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மேடம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுபகாரியச் செலவுகள் கூடும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், தாய்வழி உறவில் எதிர்பார்த்த ஆதாயமுண்டு.

**இடபம்:** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**மிதுனம்:** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கடினமான வேலைகளைக்கூட நயமாகப் பேசி சமாளிப்பீர்கள், வெளியூர்ப் பயணங்களால் நன்மையுண்டு.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல் மாறும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், கௌரவமான நாள்.

**கடகம்:** பயணங்களின் மூலம் புதிய தகவல்களை அறிந்து கொள்வீர்கள், விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது, போசன சுகமுண்டு.

**மகரம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, காரிய சித்தியுண்டு.

**சிம்மம்:** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், எடுத்த காரியங்களை முடிப்பதில் கூடிய அக்கறை காட்ட வேண்டிய நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**தனுசு:** எதையும் பலமுறை யோசித்து செயற்படுவது நல்லது, விரயங்கள் மேலோங்கும் நாள், தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்றோர் சந்திப்புண்டு.


**துலாம்:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், விருந்தினர் வருகையுண்டு, தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியமான நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

# மக்களுக்கும் இராணுவத்திற்கும் முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சி

## பிரதமர் ரணில் குற்றச்சாட்டு

**கொஸ்கம சாலாவ சமபவத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.**



நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைக் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாலாவ வெடிப்புச் சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு இராணுவத்திற்கும் மக்களுக்கும் இடையில் மோதலை வெடிக்கச் செய்ய சில தரப்பினர் முயற்சித்து வருகின்றனர்.

இந்த சம்பவத்தின் போது படையினருக்கு எதிராக மக்களை தூண்டி விடுவது தவறானது. வீடுகள் சேதமடைந்தவர்களின் வடுகள் பழுது பார்க்கப்படும் வரையில் வாடகை வீடுகளில் தங்கியிருக்க மாதாந்தம் 50,000 ரூபா வழங்கப்பட உளளது.

வீடுகள் திருத்தப்படும்வரையில் உறவினர் வீடுகளில் இருந்தாலும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

சேதமடைந்த வியாபார முயற்சிகளை மீளக் கட்டியெழுப்ப வங்கிகளுடன் பேசி விசேட நடவடிக்கை எடுக்கபட உள்ளது.

பாதிக்கப்பட்ட எவரினது எதிர்காலமும் கேள்விக் குறியாக மாற அரசாங்கம் இடமளிக்காது.

சேதமடைந்த வீடுகளை இராணுவத்தினர் புனரமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-10)

## நல்லாட்சி என்ற சொல்லை அரசு துண்டு துண்டாகக் கிழித்துள்ளது

### மகிந்த யாப்பா அபேவர்த்தன விமர்சனம்

நல்லாட்சி என்ற வசனத்தை இந்த அரசாங்கம் துண்டு துண்டாக கிழித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்த்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்கள் எதிர்பார்த்த நல்லாட்சி நாட்டில் தற்போது காணப்படுகின்றதா என்ற கேள்வியை நாம் மக்களிடம் முன்வைக்கவே இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

கடந்த அரசாங்கம் மீது ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் இன்று இந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் போன்று சிறு களவுகள் இடம்பெறவில்லை பாரியளவில் கொள்ளைகள் இடம் பெறுகின்றன. ஒரு கொடுக்கல் வாங்கலில் 5000 முதல் 6000 கோடி வரையிலான பணம் கொள்ளையிடப்படும் நிலையே காணப்படுகின்றது.



நிதி அமைச்சிற்கு சிலர் இன்று டீல் அமைச்சு என பெயரிட்டுள்ளனர். எனவே இந்த அரசாங்கம் இனியும் நல்லாட்சி பற்றி பேசும் தகுதி கிடையாது என மகிந்த யாப்பா அபேவரத்தன தெரிவித்துள்ளார். (இ-10)

## மகிந்த வாக்களிக்காதது ஏன்? விளக்குகிறார் உதய கம்மன்பில

(கொழும்பு)

தனது பொன்னான நேரத்தைச் செலவிடுவதற்கு பெறுமதியற்றது என்பதால் தான், நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கவில்லை என்று, நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



மகிந்த ராஜபக்ஷ ஆதரவு கூட்டு எதிரணியினரால் கொண்டு வரப்பட்ட நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடந்த போது, மகிந்த ராஜபக்ஷ பங்கேற்காதமை குறித்து கடுமையான விமர்சனங்கள் எழுந்திருந்தன.

இந்த நிலையில், நாடாளுமன்ற வாளகத்தில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த, கூட்டு எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், உதய கம்மன்பில,

"நாடாளுமன்றத்தில் மகிந்த ராஜபக்ஷவின் வாக்கு, ஒரு வாக்கு மட்டும் தான். ஆனால், அவர் ஒரு மிகப் பெரிய ஆளுமை மிக்க, இந்த நாட்டின் சிறப்பு மிக்க குடி மகன். அவரது வாக்கு சிறப்பானதாக இருக்க வேண்டும். அவரது வாக்கு இறுதி முடிவை மாற்ற முடியாதது என்றால், அவரை நாடாளுமன்றம் வருமாறு கேட்பது பயனற்றது.

அவர் வரவுசெலவுத் திட்டங்களின் போது கூட வாக்களிக்கவில்லை.

வாக்களிப்பதற்காக மகிந்த ராஜபக்ஷ சபையில் இருக்க வேண்டும் என்றால், அது, அரசியல் அதிகாரத்தைக் கைமாற்றும் முக்கியமான தருணம் ஒன்றில் தான் சாத்தியமாகும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## இலங்கைக் கடற்படைக்காக இந்தியா கட்டிய ரோந்துக் கப்பல் கோவாவில் வெள்ளோட்டம்

இலங்கை கடற்படைக்காக இந்தியாவின் கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டுள்ள முதலாவது, ஆழ் கடல் ரோந்துக் கப்பல் நேற்று முன்தினம் வெள்ளோட்டம் விடப்பட்டது.





வாஸ்கோவில் உள்ள கோவா கப்பல் கட்டும் தளத்தில்நேற்று முன்தினம் நடந்த இந்த நிகழ்வில் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன மற்றும் இலங்கை பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

'சயுரால' என்று இலங்கை கடற்படையினரால் பெயரிடப்பட்டுள்ள இந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பலை, இலங்கை கடற்படையின் மரபுகளுக்கு அமைய, இலங்கை பாதுகாப்பு அமைச்சின் சேவா வனிதா பிரிவின் தலைவியான வசந்தா குணவர்த்தன, வைபவ ரீதியாக இயக்கி வைத்தார்.

இந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பல் 74 மில்லியன் டொலர் செலவில் கட்டப்படுகிறது. 2350 தொன் எடையும், 105 மீற்றர் நீளத்தையும் கொண்ட இந்தக் கப்பலில், உலங்குவானூர்தி இறங்கு தளமும் உள்ளது.

சுமார் 4500 கடல் மைல் தூரம் வரை கண்காணிப்பில் ஈடுபடக் கூடிய இந்தக் கப்பலில், 18 அதிகாரிகள் மற்றும் 100 மாலுமிகள் பணியாற்றுவர்.

இந்தக் கப்பல் வெள்ளோட்ட நிகழ்வில், இந்திய பாதுகாப்பு அமைச்சின், வான் பொறியியல மற்றும் பாதுகாப்பு உற்பத்திக்கான இணைச்செயலர், சஞ்சய பிரசாத், டில்லியில் உள்ள இலங்கை தூதுவர் எசல வீரக்கோன், இந்தியக் கடற்படையின் முன்னாள் தளபதிகளான அட்மிரல் அருண் பிரகாஸ் மற்றும் அட்மிரல் சுரேஸ் மேத்தா, கோவா கப்பல் கட்டும் நிறுவனத்தின் தலைவரும் முகாமைப் பணிப்பாளருமான ரியர் அட்மிரல் சேகர் மிட்டல், மற்றும் இந்திய இலஙகை அதிகாரிகள், இருநாட்டு கடற்படை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (இ-10)

## இரணைமடுக்குளத்தின் புனரமைப்புப் பணிகள்

# அடுத்தாண்டு சிறுபோகத்தைப் பாதிக்காத வகையில் விரைவில் நிறைவு செய்யப்படும்

## கிளி.மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்தில் தெரிவிப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தின் இணைத்தலைமைகளாக வடக்கு மாகாண முதலமைச்சர், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

மற்றைய இணைத் தலைவரான அங்கஜன் இராமநாதன் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பதுடன் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை.

வடக்கு மாகாண அமைச்சர்கள் ,வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தவிர்ந்து அமைச்சின் செயலாளர்கள், மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தம் நான்கு மாகாணசபை உறுப்பினர்கள், திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

நேற்றைய கூட்டத்தில்தலைமை உரையை வடக்கு மாகாண முதலமைச்சர் மட்டுமே நிகழ்த்தினார். அவர் தனது உரையில் கூறுகையில், எதிர்காலத்தில் மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டங்களை எவ்வாறு நடத்துவது தொடர்பில் அமைந்திருந்தது. குறித்த கூட்டத்தின்போது ஊடகவியலாளர்கள் பார்வையாளர்களாக மட்டும் அமர்த்தப்படுவது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கல்வி, விவசாயம், சுகாதாரம் உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்பட்டன.

கல்வியில் மாவட்டத்தில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பிலும் இராணுவ சிவில் பாதுகாப்பு திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் முன்பள்ளிகளை வடக்கு மாகாண சபையிடம் கையளிப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

குறித்த முன்பள்ளிகளில் 500 இற்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தால் நியமிக்கப்பட்டவர்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது, குறித்த முறையை மாகாண சபையில் முன்னெடுக்கப்படவுள்ள நியதி சட்டத்தின் மூலம் நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

விவசாயம் - இரணைமடுக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. இதன் மூலம் இவ்வாண்டு சிறுபோகம் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அடுத்த வருடம் சிறுபோகம் பாதிக்காதவாறு புனரமைப்பு பணிகள் கால நேரத்திற்குள் முடிவுக்கு கொண்டு வரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. மழை காரணமாக குளத்திற்கு அதிக நீர்வரத்து கிடைக்கப் பெற்றுள்ளமையால் அவற்றை வெளியேற்றும் பணிகள் இடம்பெற்று வருவதாகவும், தொடர்ந்து பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டப்பட்டது. (2-15)

---

## விசேட தேவைக்குட்பட்டோருக்கான நவீன மலசலகூட அமைப்பு முறை கண்டுபிடிப்பு




விசேட தேவைக்குட்பட்டோருக்கான நவீன மலசலகூட அமைப்பு முறை ஒன்றை வவுனியா- ஓமந்தை- வேப்பங்குளத்தைச் சேர்ந்த என். என். ஜக்சன் என்பவர் கண்டுபிடித்துள்ளார்.

இவரது தொழில்நுட்ப முறையினை இந்தியாவில் உள்ள ஜெய்பி (Jaypee coporation) கூட்டுத் தாபனத்திற்கு மாற்றம் செய்து வழங்கும் நிகழ்வும் ஊடகவியலாளருக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வும் வவுனியா அருந்ததி மண்டபத்தில்நேற்று முன்தினம் நடைபெற்றது.

நவீனமலசலகூட அமைப்புமுறை விசேட தேவையுடையவர்களுக்கும் பயணம் மேற்கொள்ளும் போது படுக்கையில் இருக்கும் நோயாளிகளுக்கும் மிகவும் பயன்தரக் கூடியதாகும் என வவுனியா அருந்ததி மண்டபத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது அதன் கண்டுபிடிப்பாளரான என். என். ஜக்சன் தெரிவித்தார்.

அவ் அமைப்பு முறையினை இலகுவாக அணிந்து கொள்ளக் கூடியதுடன் - நீர்வசதியேதும் தேவையில்லை எனவும் துர்நாற்றம் எதுவும் இல்லையெனவும் தெரிவித்தார். (2-250)

---

## காணிக்கச்சேரி

(சோலைநகர்)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செய லாளர் பிரிவுக்குட்பட்ட தர்மபுரம் மேற்கு பகுதியைச் சேர்ந்த குடும்பங்களுக்கு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தர்மபுரம் மேற்கு பொதுநோக்கு மண்டபத்தில் காணிக் கச்சேரி நடைபெறும்.

இதன்போது காணிகளுக்கான உறுதிப் பத்திரம் வழங்குவதற்காக முக்கிய பதிவுகள், காணிகள் இடையே ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பான சேவையும் நடைபெறவுள்ளது.

இந்தக் காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான பதிவுகள் கண்டாவளை பிரதேச செயல்ாளர் த.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. தர்மபுரம் மேற்கு கிராம சேவை உத்தியோகத்தர் வி.அஜந்தா மற்றும் கண்டாவளை பிரதேச செயலக குடியேற்ற உத்தியோகத்தர் அபிவிருத்திக்கான உத்தியோகத் தர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (2-309)




---

## பாடசாலை மாணவிகளுக்கு கிளிநொச்சியில் தற்காப்பு பயிற்சி



கிளிநொச்சி நகரை சூழவுள்ள பாடசாலைகளில் கல்வி பயின்று வரும் 60இற்கும் மேற்பட்ட மாணவிகளுக்கு நேற்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் “துணிகரம் பெண்மைக்கு அழகு” எனும் தொனிப்பொருளில் தற்காப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இப்பயிற்சியை இந்தியாவின் சென்னையில் இருந்து வருகை தந்திருக்கும் துளசி மேற்கொண்டு வருகின்றார். இப்பயிற்சியை வசந்தம் விஷன் அறக்கட்டளை ஏற்பாடு செய்து இருந்ததுடன் கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளை அனுசரணை வழங்கியது. இனிவரும் காலங்களில் இப்பயிற்சியைப் பல கிராமப்புறங்களிலும் நடத்துவதற்கு ஏற்பாட்டாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இப் பயிற்சியை பெற்ற பெண்களின் மனதில் தன்னம்பிக்கையும் துணிவும் தம்மை பாதுகாத்துக் கொள்ளும் பயிற்சியும் பயிற்றப்படுவதால் இப் பயிற்சி அனைத்துப் பெண்களுக்கும் அவசியம் என்றும எதிர்காலத்தில் பயமற்று நடமாடக் கூடிய பெண்கள் சமுதாயத்தை உருவாகக முடியும் எனவும் பயிற்றுவிப்பாளர் கூறினார். (2-298)

---

## மாணவர்களுக்கான போட்டிகள்

(குருமன்காடு)

தெய்வத்தமிழ் திருக்கோவில் இணுவையம்பதி ஞானலிங்கேஸ்வரத்தினுடைய செந்தமிழ் திருக்குடமுழுக்கை முன்னிட்டு சைவ நெறிக்கூடம் ,சைவ மகா சபை இணைந்து மாணவர்களுக்கான சிறப்பு போட்டிகளை நடத்தவுள்ளன.

இதற்கமைய பேச்சு,திருமுறையைப் பண்ணுடன் ஓதுதல் போன்ற போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதில் ஆரம்பப்பிரிவு பேச்சு போட்டியில் தரம் 3 தொடக்கம் தரம் 5 வரையான மாண்வர்கள் பங்கேற்க முடியும்.மூன்று நிமிடங்கள் பேச முடியும்.

அன்பே சிவம் , ஆலயம் தொழுவது சாலவும் நன்று, அறம் செய்ய விரும்பு ஆகிய தலைப்புக்களின் கீழ் அமைய வேண்டும்.

கீழ்ப்பிரிவுப் பேச்சுப் போட்டியில் தரம் 6 தொடக்கம் தரம் 8 வரையான மாணவர்கள் பங்கேற்க முடியும். 5 நிமிடங்கள் பேச முடியும்.

நற்றமிழ் ஞான சம்பந்தன், தெய்வத் தமிழ் திருமுறைகள், தொண்டின் தந்தை திருநாவுக்கரசர் ஆகிய தலைப்புக்களின் கீழ் அமைய வேண்டும்.

மத்திய பிரிவு பேச்சுப் போட்டியானது சைவ சமயத்தின் ஜீவகாருண்ய சிந்தனைகள், நல்லொழுக்கத்துக்கு வித்திடும் அறநெறிக் கல்வி, பக்தியின் மொழி தமிழ் ஆகிய தலைப்புக்களின் கீழ் அமைய வேண்டும்.

மேற்பிரிவுப் பேச்சுப் போட்டியில் க.பொ.த. (உ/த) மாணவர்கள் பங்கேற்க முடியும்.

சைவசமயம் தொடர்பாக வழங்கப்படும் தலைப்பில்7 தொடக்கம் 9 நிமிடங்கள் வரை உரையாற்ற முடியும்.

ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு என்பன மேலே குறிப்பிட்ட தலைப்புக்களில் விரும்பிய ஒன்றில் பேச முடியும்.

போட்டிகளில் ஒரு பாடசாலையில் இருந்தோ அறநெறிப் பாடசாலையில் இருந்தோ ஆகக் கூடியது மூன்று பேர் பங்குபற்றலாம்.

கீழ்ப்பிரிவு திருமுறை பண்ணுடன் ஓதுதல் போட்டியில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்கள் பங்கேற்க முடியும்.

நமச்சிவாயப் பதிகம் - திருநாவுக்கரசர் எனும் தலைப்பில் ஓதுதல் வேண்டும்.

மேற்பிரிவு தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்கள் பங்கேற்க முடியும்.

கோளறு பதிகம் - திருஞானசம்பந்தர் எனும் தலைப்பில் ஓதுதல் வேண்டும். இப் போட்டிக்கு ஒரு பாடசாலையில் இருந்தோ, அறநெறிப் பாடசாலையில் இருந்தோ ஐவர் கொண்ட ஒவ்வொரு குழு கீழ்ப்பிரிவிலும் மேற்பிரிவிலும் பங்குபற்றலாம்.

போட்டிகள் வடக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம்,வன்னி ஆகிய பிராந்தியங்களில் நடைபெறும்.

வன்னி பிராந்தியத்துக்கான போட்டிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணப் பிராந்தியத்துக்கான போட்டிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

போட்டிகளுக்கான அனைத்து விண்ணப்பங்களும் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

யாழ்ப்பாணம் பிராந்தியத்துக்கான விண்ணப்பங்கள் சைவ மகா சபை, கல்லூரி வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு வன்னிப் பிராந்தியத்துக்கான விண்ணப்பங்கள், சிவஞான சித்தர் பீடம்( மாங்குளம் மகா வித்தியாலயம் எதிரில்) ஏ-9 வீதி மாங்குளம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர், யாழ்ப்பாணம் பிராந்தியத்துக்கு 077 020 4148 வன்னிப் பிராந்தியத்துக்கு 077 044 7743 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

# வெளிநாடுகளுக்கு வெடிபொருட்களை விற்பனை செய்ய அரசாங்கம் தீர்மானம்

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் தகவல்

**இலங்கை படைகளின் தேவைக்கு அதிகமாக உள்ள வெடிபொரு ட்களை வெளிநாடுகளுக்கு விற்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல இரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

பஹத்கம-ஹன்வெல்ல பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தின் பின்னர், செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



படையினரின் தேவைக்கு அதிகமாக உள்ள வெடிபொருட்களை வெளிநாடுகளுக்கு விற்கவும், காலாவதியான வெடிபொருட்களை அழிக்கவும், அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை,சாலாவ இராணுவ முகாமுக்கு முன்பாக, செய்தியாளர்களிடம் இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா,

"பயன்படுத்தப்படாத- தேவைகதிகமாக உள்ள வெடிபொருட்களை வழாங்குனரிடமே, திருப்பிகையளிக்க முடியும். இது அனைத்துலக நடைமுறை. எமக்குத் தேவையானதை வைத்துக் கொண்டு எஞ்சியவற்றைத் திருப்பிக் கொடுக்கலாம்.

நான் இராணுவத் தளபதியாக பொறுப்பேற்ற பின்னர், எம்மிடம் உள்ள மேலதிக வெடிபொருட்களை குறைக்க வேண்டிய தன் தேவை குறித்து இலங்கை ஜனாதிபதியிடம் விளக்கமளித்தேன்.

அதனை உடனடியாகச் செய்வதற்கு அவர் அனுமதி அளித்திருந்தார். இங்குள்ள வெடிபொருட்களைக் குறைப்பதற்கான செயன்முறைகளை ஆரம்பித்திருந்தோம்." என்றும் அவர் தெரிவித்தார். (இ-10)

## சாலாவ ஆயுதக்கிடங்கு அமைக்க நான் காரணம் இல்லை-சந்திரிகா

சாலாவ இராணுவ முகாம ஆயுதக்கிடங்கு தீப்பரவலு க்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவே பொறுப்பேற்க வேண்டும் என்ற குற்றச்சாட்டை சந்திரிகா நிராகரித்துள்ளார்.

சாலாவ முகாமில் பாரிய ஆயுதங்களை களஞ்சிப்படு ததுமாறு 1990ஆம் ஆண்டு சந்திரிகாவே உத்தரவிட்டதாக இராணுவ உயரதிகா ரியை கோடிட்டு செய்தி வெளியிடப்பட்டிருந்தது. எனினும் இதனை மறுத்துள்ள சந்திரிகா இது முற்றிலும் பொய் யான தகவல் என்று தெரிவித்தார். 1993 ஆம் ஆண்டு தாம் ஆட்சிக்கு வரும் முன்னரே சாலாவ முகா மில் ஆயுதக் கிடங்கு அமைக்கப் பட்டி ருந்தது என்று சந்திரிகா தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அரசியல் வாதிகள் மற்றும் மக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது 1990ஆம் ஆண்டு சாலாவ முகாமில் பாரிய ஆயுதக் கிடங்கு அமைக்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 200 | 300 | 240 | 240 |
| உருளைக்கிழங்கு | 120 | 90 | 120 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 700 | 550 | 700 | 1000 | 600 | 800 |
| தக்காளி | 240 | 200 | 240 | 300 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 100 | 80 | 80 |
| கோவா | 200 | 130 | 200 | 300 | 200 | 200 |
| கரட் | 250 | 150 | 200-300 | 400 | 400 | 240 |
| பூசணி | 60 | 70 | 70 | 100 | 80 | 70 |
| புடோல் | 100 | 100 | 80 | 150 | 120 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 140 | 110 | 160 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 120 | 70 | 80 | 100 | 100 | 80 |
| பாகற்காய் | 250 | 200 | 280 | 400 | 200 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 100 | 200 | 120 | 150 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 200 | 160 | 120 |
| பயற்றங்காய் | 250 | 180 | 200 | 200 | 160 | 200 |
| லீக்ஸ் | 250 | 180 | 200 | 200 | 240 | 200 |
| பீற்றூட் | 120 | 180 | – | 200 | 200 | 150 |
| கறிமிளகாய் | 300 | 260 | 300 | 400 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 300 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 300 | 180 | 240 | 300 | 200 | 180 |
| கத்தரிதம்புள்ள | 200 | 170 | – | 200 | 240 | – |
| கீரை – 1 பிடி | 50 | 25 | 50 | 50 | 40 | 40 |
| தேசிக்காய் | 280 | 250 | 250 | 300 | 250 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 15-25 | 40 | 50 | 20-25 | 40 |
| இராசவள்ளி | 140 | 150 | – | 300 | 240 | 160 |
| வெங்காயப்பூ | 250 | – | 300 | 300 | – | – |
| முள்ளங்கி | 100 | – | 120 | 200 | 160 | 150 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 10 | 10 | 30 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | – | 80 | 120 | 100 | 60 |

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

06.2016
12

- 1429 - நூறாண்டுகள் போர்: ஜோன் ஒஃப் ஆர்க் தலைமையில் பிரெஞ்சு இராணுவம் ஆங்கிலேயர்களிடம் இருந்து ஜார்கூ என்ற இடத்தைக் கைப்பற்றினர்.
- 1775 - அமெரிக்கப் புரட்சிப் போர்: பிரித்தானிய இராணுவத் தளபதி தொமஸ் கேஜ் மசாசுசெட்சில் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தார். தமது ஆயுதங்களைக் கீழே வைக்கும் அனைத்துக் குடியேற்றக்காரர்களுக்கும் மன்னிப்பு அளிப்பதாக அறிவிக்கப்பட்டது.
- 1830 - 34,000 பிரெஞ்சுப் படைகள் அல்ஜீரியாவை அடைந்ததில் இருந்து பிரெஞ்சுக் குடியேற்றம் அந்நாட்டில் ஆரம்பமாகியது.
- 1898 - பிலிப்பீன்ஸ் ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1899 - ஐக்கிய அமெரிக்காவின் விஸ்கொன்சின் மாநிலத்தில் இடம்பெற்ற சூறாவளியில் 117 பேர் கொல்லப்பட்டனர்.
- 1902 - அவுஸ்திரேலியாவின் நான்கு மாநிலங்களில் பெண்கள் பொதுத்தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். அவுஸ்திரேலியப் பழங்குடிகள் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது.
- 1934 - பல்கேரியாவில் அரசியற் கட்சிகள் தடை செய்யப்பட்டன.
- 1935 - பொலீவியாவுக்கும் பராகுவேயிற்கும் இடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டு மூன்றாண்டுகள் போர் முடிவுக்கு வந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: 13,000 பிரித்தானிய மற்றும் பிரெஞ்சுப் படைகள் பிரான்சில் ஜெர்மனியரிடம் சரணடைந்தனர்.
- 1943 - நாசி ஜெர்மனியர் மேற்கு உக்ரைனில் 1,180 யூதர்களைப் படுகொலை செய்தனர்.
- 1964 - தென்னாபிரிக்க நீதிமன்றம் நெல்சன் மண்டேலாவுக்கு ஆயுள்கால சிறைத்தண்டனை விதித்தது.
- 1967 - சோவியத் ஒன்றியம் வெனேரா 4 விண்கலத்தை வெள்ளி கோளை நோக்கி ஏவியது. வேறொரு கோளின் வளிமண்டலத்துள் சென்று தகவல்களைப் பூமிக்கு அனுப்பிய முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1987 - மத்திய ஆபிரிக்கக் குடியரசின் முன்னாள் பேரரசர் ஜீன்-பெடெல் பொக்காசாவுக்கு அவரது 13 ஆண்டுகால ஆட்சியில் இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக மரண தண்டனை அறிவிக்கப்பட்டது.
- 1990 - ரஷ்யக் கூட்டமைப்பின் நாடாளுமன்றம் சோவியத் ஒன்றியத்தில் இருந்து ரஷ்யாவின் விடுதலையை முறைப்படி அறிவித்தது.
- 1991 - போரிஸ் யெல்ட்சின் ரஷ்யக் குடியரசின் அதிபரானார்.
- 1991 - மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் 65 தமிழர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1998 - லெப்டினண்ட் கேணல் திருவடி நினைவு நாள்.
- 1999 - நேட்டோ தலைமையிலான ஐ.நா அமைதிப் படை கொசோவோவினுள் நுழைந்தது.
- 2003 - தமிழர் விடுதலை இயக்கம் என்ற அமைப்புக்குத் தமிழக அரசு தடை விதித்தது.
- 2006 - கூகுள் எர்த், லினக்ஸ் பதிப்பு வெளியிடப்பட்டது.
- 2006 - காஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கி சூட்டில் தொழிலாளர்கள் 8 பேர் உயிரிழந்தனர். 5 பேர் காயமடைந்தனர்.

பிறப்புகள

- 1924 - ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், அமெரிக்காவின் 41வது குடியரசுத் தலைவர்.
- 1932 - பத்மினி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை. (இ. 2006)
- 1942 - பேர்ற் சக்மன், நோபல் பரிசு பெற்ற ஜெர்மனிய உடற்றொழிலியலாளர்.
- 1957 - ஜாவெட் மியன்டாட், பாகிஸ்தானின் முன்னாள் துடுப்பாளர்.

இறப்புகள்

- 2014 - வாண்டுமாமா, குழந்தை எழுத்தாளர். (பி.1925)
- 2014 - கொடுக்காப்புளி செல்வராஜ், நகைச்சுவை நடிகர்.

சிறப்பு நாள

- பிலிப்பீன்ஸ் - விடுதலை நாள்.
- **குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம்.**
- ரஷ்யா - ரஷ்ய நாள். (1990)

## குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம்

குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு நாள் (World Day Against Child Labour) உலகம் முழுவதும் ஆண்டுதோறும் ஜூன் 12 ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகளின் ஓர் அங்கமான பன்னாட்டு தொழிலாளர் அமைப்பினால் (ஐ.எல்.ஓ) அங்கீகரிக்கப்பட்ட இந்த நாள குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த 2002ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்படுகிறது. ஐ.எல்.ஓ வின் 138 மற்றும் 182ஆவது உடன்படிக்கைகளின் ஏற்பினால் தூண்டப்பட்டு இந்த நாள் உருவாக்கப்பட்டது.இதன் அடிப்படையில் குழந்தை தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்றப்பட வேண்டிய தன் அவசியத்தை உணர்த்த இந்நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. 2006 ஒக்டோபர் 10 ஆம் திகதி முதல் வீடு, சாலையோரக் கடைகள், ஓட்டல்கள் போன்ற இடங்களில் வயதிற்கு உட்பட்ட சிறுவர், சிறுமியரை வேலைக்கு அமர்த்த மத்திய அரசு தடைவிதித்துள்ளது. குழந்தைகள் நலனுக்கான சர்வதேச அமைப்பான யுனிசெப் நிறுவனம் குழந்தை தொழிலாளர்களுக்கு ஏற்படும் பதிப்புகளை முன்று வகையாக பிரித்துள்ளது.

- உடல் ரீதியான பாதிப்பு
- உளவியல் அல்லது மனரீதியான பாதிப்பு மற்றும்
- உணர்வு மற்றும் சமூகரீதியான பாதிப்பு

# நேர்முகத்தேர்வுடன் இணைந்த பிரயோகப்பரீட்சை 18ஆம் திகதி

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரால் 2016.03.09 ஆம் திகதி கோரப்பட்ட பத்திரிகை விளம்பரத்திற்கு அமைவாக கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் மற்றும் ஆங்கில டிப்ளோமாதாரர்களை ஆட் சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2016 இற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை வெற்றிட எண்ணிக்கையிலும் குறைவாக உள்ள காரணத்தினால் போட்டிப் பரீட்சையினை நடத்தாது நேர்முகப்பரீட்சையினை நடத்தி நியமனம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நேர்முகத்தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சை எதிர்வரும் 18.06.2016 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வடமாகாண கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது.

மேற்குறித்த தேர்விற்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் அனைவரும் அன்றையதினம் தவறாது சமூகமளிக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் தகுதியான விண்ணப்பங்கள் என இனங்காணப்பட்டு எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட 387 பேருக்கான நேர்முகத்தேர்வு அழைப்புக் கடிதம் அவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் நேர்முகத்தேர்வில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள், பிரயோகப் பரீட்சைக்கு தயார்படுத்த வேண்டிய விடயப்பரப்புக்கள் (பிரயோகப் பரீட்சைக்காக, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தரம் 09, தரம் 10, தரம் 11 பாடப் புத்தகத்தில் ஏதேனுமொரு தரத்தில் இருந்து விரும்பிய ஒரு பகுதியினை விண்ணபதாரர் தெரிவு செய்து தயார்ப்படுத்திக் கொண்டு வருகை தருதல் வேண்டும்) மற்றும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் பாட ரீதியான விபரம் என்பவற்றை வடமாகாண சபை இணையத்தளம் www.np.gov.lk மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் இணையத்தளம் www.edumin.np.gov.lk எனும் முகவரியில் பார்வையிட முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்.சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக அங்குரார்ப்பண நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகப் பொருளாளர் லயன் செ.மகாதேவாவின் கந்தரோடை இல்லத்தில் நடைபெறும்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் நா.தயாரூபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகம் 306B1 மாவட்டத்தின் 2 ஆவது உப மாவட்ட ஆளுநராகத் தெரிவு செய்யப்பட்டவரும் நீர்கொழும்பு ஹோல்டன் ஸ்ரார் பீச் ஹோட்டல் நிர்வாக இயக்குநருமாகிய லயன் தேவாபீற்றர், லயன் சீமாட்டி ஜசிந்தா தம்பதிகளும் கௌரவ விருந்தினர்களாக தொழிலதிபர் லயன் பி.மகேந்திரனும் கலந்துகொள்வர்.

முற்பகல் 11 மணியளவில் விருந்தினர்கள் கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக கூட்ட மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டு புதிய நிர்வாக அங்குரார்ப்பண நிகழ்வுகள் நடைபெறும். (இ-10)

# வாகனங்கள் வழங்கும் நடவடிக்கை முற்றாக நிறுத்தப்படல் வேண்டும்

## ஜே.வி.பி.வலியுறுத்து



அமைச்சர்களுக்கு சொகுசு வாகனங்களை வழங்கும் நடவடிக்கை முழுமையாக நிறுத்தப்பட வேண்டும் என ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களுக்காக அதிசொகுசு வாகனங்களை இறக்குமதி செய்யும் நடவடிக்கை தற்காலிக அடிப்படையில் நிறுத்தப்படக்கூடாது எனவும் முற்று முழுதாகவே நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பாரியளவு அழிவுகள் ஏற்பட்டுள்ள நிலையில் எதற்கு சொகுசு வாகனங்கள் என கேள்வி எழுப்பியுள்ள அமைச்சர், இவ்வாறு வாகனங்கள் இறக்குமதி செய்வதன் மூலம் பொதுமக்கள் பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாடு புலனாவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மழை வெள்ளத்தில் மண்சரிவில் ஆயுதக்களஞ்சிய வெடிப்பில் மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகள் தொடர்பில் உரிய மதிப்பீடு செய்யப்படவில்லை.

மக்களின் துன்பத்தை அரசாங்கம் கண்டுகொள்ளாத நிலைமை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

# கோத்தபாய ராஜபக்ஷ மீது இராணுவத்தினர் அதிருப்தி

(கொழும்பு)

கொஸ்கம இராணுவ முகாமின் ஆயுத கிடங்குகள் வெடித்தமை தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிட்டுள்ள கருத்து. இராணுவத்தினரின் கடுமையான அதிருப்தி மற்றும் எதிர்ப்புக்கு உள்ளாகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

தான் பாதுகாப்பு செயலாளராக செயற்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த முகாமின் ஆயுதக்கிடங்கு வெடித்திருந்தால் இராணுவத்தளபதி பதவியை இராஜினாமா செய்திருக்க வேண்டும் அல்லது தன்னால் நீக்கப்பட்டிருப்பார் என கோத்தபாய கருத்து வெளியிட்டிருந்தார்.

கோத்தபாயவின் கருத்து ஊடகங்களில் வெளியாகியுள்ள நிலையில், இராணுத்தின் உயர் அதிகாரிகள் கடுமையான எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர்.

கோத்தபாய இராணுவத்தில் செயற்பட்ட காலப்பகுதியில் யுத்தத்திற்கு பயந்து தப்பிச் சென்று வெளிநாட்டில் வசித்ததாக இராணுவத்தின் உயர் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் அவர் பாதுகாப்பு செயலாளராக செயற்பட்ட சந்தர்ப்பத்தில் வவுனியா மற்றும் கரடியனாறு இராணுவ முகாமினுள் இருந்த ஆயுதக்கிடங்குகள் வெடித்ததாகவும், அந்த சந்தர்ப்பத்தில் அவர் தற்போது பேசுவதனை போன்று எந்தவொரு செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை என இராணுவ அதிகாரிகள் உண்மையை வெளியிட்டுள்ளனர். (இ-10)

# கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016ல் வீதிவிபத்துக்களில் வீழ்ச்சி

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது வீதி விபத்துக்கள் குறைந்திருப்பதாக வீதி பாதுகாப்பு சபை கூறியுள்ளது.

விபத்துக்களின் எண்ணிக்கையை மேலும் குறைப்பதற்காக உரிய அமைச்சு மற்றும் பொலிஸ் திணைக்களம் தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்து வருவதாக அந்த சபையின் தலைவர் சிசிர கோதாகொட தெரிவித்தார்.

தவறிழைக்கும் சாரதிகளுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த தேவையான நடவடிக்கை எடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும்

யாழ்.உயர் தொழில்நுட்ப வியல் நிறுவனத்தின் 2015 ஆம் கல்வி யாண்டில் முழுமையாக கற்கை நெறியினை பூர்த்தி செய்த அனைத்து கற்கை நெறிகள் சார்ந்த மாணவர்கள் அனைவரும் நாளை 13 ஆம் திகதி தொடக்கம் 11.07. 2016 இற்கு முன் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு உரிய ஆவணத்தினை பெற்று உரிய காலக்கிரமத்தில் பட்டமளிப்பு விழா விற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கு மாறு உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

# இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு ஏழாம் திருவிழா




## நல்லருள் தருவாய்

மீன் இசை பாடும்
ஆழ் கடல் நடுவே
கரை வந்து மோதி
தாலாட்டும் அலைகள்
ஆழி மேலே அலைகள் துள்ள
அதிலே நாகம் படம்பிடித்தாட
அருள் விழி தனைக் கொண்டு
அன்னையவள் வீற்றிருக்க
வீனரை வீழ்த்தியுன்
விரதம் பூண்டோரை காத்து
நலிந்தோரை தேற்றி
நல்லருள் தருவாய் நயினை நாயகியே

சி.திவ்வியா
யா/பண்ணாகம் மெய்கண்டான்
மகா வித்தியாலயம்
சுழிபுரம்.

## நாகையம்மா நயந்து அருள் தாருமம்மா



திகழ் பரவு மணி பல்லவ தீவு தனில்,
புகழ் பரவு நாக பூஷணியாய்
எம் அக இருள் அகற்றி;
உம் அருள் ஒளி பரப்பி
நாக ரூப தேவியராய்,
எமக்கு தாக அருள் சொரிந்திடம்மா!
கடலலையில் மிதந்து வர
காட்டிடம்மா உந்தன் முகம்
நாகம்மா என்று சொல்லி
நாம் வந்து வணங்கிடவே!

பா.தர்சன்
நாவற்காடு, அச்சுவேலி

## ரட்சிப்பாய் தேவியே

ஆடிவரும் புனல் நடுவே ஒளி விடும் சுடரே
தேடி வரும் கதிரோனை வென்றருளும் ஒளியே
பாடி வரும் பக்தர்முன் அசைந்து வரும் ஜோதியே
நாடி வரும் பக்தரை ரட்சிப்பாய் தேவியே

தாவையூர்
ச.சுப்பிரியன்
யாழ்.இந்துக்கல்லூரி

## நாகம்மாவே

நாகத்தால் பூஜிக்கப் பெற்ற நாகம்மாவே
குழந்தை முதல் முதியோர் வரை
காத்தருளும் தாயும் நீ நாகமது உன்னைத்
தரிசனம் செய்ய பூக்கொண்டு வருகையில்
பால் அபிஷேகம் பொழியும்
உன்னாலய சந்நிதியில்

காயத்திரி

# பேசாலையில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்க கடற்றொழில் அமைச்சருடன் சந்திப்பு



(பனிக்கன்குளம்)

கடற்றொழில் அமைச்சர் மகிநத அமரவீரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இச் சந்திப்பு அமைச்சரின் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

மன்னார் பேசாலை கிராம மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்டஈடு வழங்குவது குறித்தும் இந்தச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. கடந்த மாதம் 16 ஆம் திகதி ஏற்பட்ட திடீர் புயல் மற்றும் மழையினால் மன்னார் பேசாலை கிராம மீனவர்களின் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான ரோலர் படகுகள் சேதமாகியுள்ளது.

சுமார் 67 ரோலர் படகுகளும், அதன் வலைத்தொகுதிகளும் சேதமடைந்துள்ளதுடன், இதன் மதிப்பீடு சுமார் 2 கோடி 70 இலட்சம் ரூபாய் என கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் பேசாலை கிராமத்தைச் சேர்ந்த 300 மீனவக் குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளதாக கடற்றொழில அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தலைமையில் மீனவர்கள் தமது பிரச்சினைகள், சேத விபரங்கள் குறித்த அறிக்கையை கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் இந்த சந்திப்பின் போது கையளித்துள்ளனர்.

இதன்போது பேசாலை கிராமத்தில் ஏற்பட்ட திடீர்புயல் காற்றின் காரணமாக பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உடனடியாக உரிய நிவாரணத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் மாட்டிடயேஸ், பேசாலை கிராம மீனவ சங்க செயலாளர்எஸ்.இ. ஜெயந்தன் துரம், பேசாலை ரோலர் சங்க செயலாளர் ஜே.கொண்சல்குலாஸ் ஆகியோர்கலந்துகொண்டனர்.(2-281)




# பத்து மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பத்து மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் வகையில் அம் மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் முல்லைத்தீவு மக்கள் தொடர்பகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

மேற்கு அவுஸ்திரேலியாவின் உதவும் கரங்கள் அமைப்பின் ஊடாக புலம் பெயர் ஈழத்துறவுகள் இந்தப் பங்களிப்பை வழங்கினர்.

குறித்த நிகழ்வில் மாணவர்கள் முன்னிலையில் ரவிகரன் உரையாற்றுகையில் ,

இதற்கான பங்களிப்பினை புலத்திலே வாழும் எங்கள் சகோதரர்களே வழங்கியுள்ளனர். அவர்கள் உங்களின் முன்னேற்றத்தில் கூடிய கவனத்தை செலுத்துபவர்கள் .கடுங் குளிரிலும் இரவு பகலென தொடர் பணியிலும் ஈடுபட்ட சிறுக சிறுக சேமித்தே இதற்கான பங்களிப்பை வழங்கியுள்ளார்கள்.

இதற்கு நீங்கள் செய்ததெல்லாம் உங்கள் கற்றல் நடவடிக்கையில் மேம்பாட்டைக் காட்டுவது தான். உயர்ந்த நிலை நோக்கி பயணியுங்கள் உங்கள் கற்றலுக்கான பின்புலமாக தொடர்ந்தும் இருப்போம் என்று தெரிவித்தார். (2)



கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று காலை 9.30 மணியளவில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், சிறுவர் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றதை படங்களில் காணலாம் . (படங்கள்:- மல்லாவி,பரந்தன் செய்தியாளர்கள்)

## கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் பிடிக்கப்பட்டுள்ள மாடுகளை பெற்றுக்கொள்க

கிளிநொச்சி புதுமுறிப்புக் குளத்தின் கீழ் உள்ள வயல் நிலங்களில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.இந்நிலையில் மேற்படி வயல் நிலங்களினுள் உள்நுழைந்து பயிர் அழிவை ஏற்படுத்திய கலப்பினத்தைச் சேர்ந்த மூன்று பசு மாடுகளை புதுமுறிப்பு கமக்கார அமைப்பினர் பிடித்து வைத்துள்ளதாக அறிவிததுள்ளனர்.

கடந்த 4 ஆம்திகதி பிடிக்கப்பட்ட இம்மாடுகள் கமநலசேவை நிலையத்தின் அனுசரணையுடன் ஏலத்தில் விடும் நிலை ஏற்பட்டுள்ளதால் குறிப்பிட்ட மாடுகளின் உரிமையாளர்கள் இருப்பின் 077 060 6917 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் மாடுகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென புதுமறிப்புக் கமக்கார அமைப்பினர் அறிவித்துள்ளனர். பிடிபட்டுள்ள மாடுகளின் விபரம்,கலப்பினகறுப்பு மாடுகள் 2,வெள்ளை சிவப்பு கலந்த மாடு ஒன்று,கே.எல்.ஐ. இலக்கம் மட்டும் மூன்று மாடுகளும் உள்ளன. அத்துடன் காது தோடு இலக்கமாக 64920004 காணப்படுவதாக கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர். எனவே மாடுகளின் உரிமையாளர்கள் ஏலம் போடுவதற்குமுன்னதாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளனர். (2-254)



கிளிநொச்சி ஆனந்தபுரம் கிழக்கில் வறுமைக்கோட்டின் கீழ் வசித்து வரும் குடும்பத்தில் உள்ள 5 பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுமாறு கல்வி வளர்ச்சி அறக்கட்டளையினருக்கு தாயார் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தேவையான சீருடை, புத்தகப்பை, அப்பியாசக் புத்தகங்கள் என்பன கல்வி வளர்ச்சி அறக்கட்டளையில் கடந்த 7 ஆம் திகதி அண்மையில் வழங்கப்பட்டதை படத்தில் காணலாம். (படம்:- உருத்திரபுரம் செய்தியாளர்)

# ‘கிராமிய ஆயிரம் பாலம்’ எனும் திட்டத்தின் கீழ் சமணங்குளம் பால வேலையை உள்வாங்குக

## வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பணிப்பு

(பரந்தன்)

அடுத்த வருடத்தில் முன்னெடுக்க உத்தேசித்துள்ள கிராமிய ஆயிரம் பாலம் எனும் திட்டத்தின் கீழ் சமணங்குளம் பாலத்தையும் உள்வாங்குமாறு வவுனியா மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதம பொறியியலாளருக்கு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் பணித்துள்ளார்.

அத்துடன் குறிப்பிட்ட கிராமிய பாலம் திட்டம் நடை முறைக்கு வரும் போது இந்தப் பாலமும் புனரமைக்கப்பட்டு மக்கள் படுகின்ற அசௌகரியங்கள் விரைவில் நீக்கப்படும் எனவும் அமைச்சர் இதன் போது சுட்டிக் காட்டினார்.

வடக்கு மாகாண சபையின் வவுனியா மாவட்ட உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் மயூரன் ஆகியோரின் கோரிக்கைக்கு அமைவாக கடந்த 9 ஆம் திகதி வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர், அதிகாரிகள் ஆகியோர் குறிப்பிட்ட உமா மகேஸ்வரன் வீதியில் இருக்கின்ற சமணங்குளம் என்ற இடத்திற்கு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்தனர்.



குறிப்பாக மழை காலங்களில் குளத்தில் இருந்து குளத்தின் வான் பகுதி வழியாக வழிந்தோடுகின்ற நீரினால் குறித்த இடத்தில் ஏறக்குறைய மூன்று அடி அளவிற்கு தண்ணீர் வீதியை குறுக்கறுத்து பாய்வதனால் இந்த வீதியைப் பயன்படுத்தும் கோயில்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 7 ஆயிரம் குடும்பங்களின் போக்குவரத்து தடைப்படுவதுடன் பல்வேறு அசௌகரியங்களுக்கும் ஆளாகின்றனர் என அமைச்சரிற்கு குறிப்பிட்ட தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பிட்ட பகுதியில் தற்பொழுதும் நீர் வீதியை குறுக்கறுத்து பாய்ந்து கொண்டிருக்கின்றது. எனவே இந்த இடத்தில் பாலம் ஒன்று அமைக்க வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. ஆதலால் அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிர்வரும் வருடத்தில் முன்னெடுக்க உத்தேசித்துள்ள "கிராமிய ஆயிரம் பாலம்" திட்டத்தின் கீழ் சமணங்குளம் பாலத்தையும் உள்வாங்குமாறு வவுனியா மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதம பொறியியலாளருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஆகவே குறிப்பிட்ட கிராமிய பாலம் திட்டம்நடைமுறைக்கு வரும போது இந்தப் பாலமும் புனரமைக்கப்பட்டு மக்கள் படுகின்ற அசௌகரியங்கள் விரைவில்நீக்கப்படும் என்று அவர் சுட்டிக்காட்டினார். (2-312)

மனச்சாட்சிக்கு ஒப்பான கடமையை செய்தாலும் சூழ்நிலையை அனுசரித்துச் செய்ய வேண்டும்.
-ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பெறுமதியான பொலிஸ் நிர்வாகம் நடக்கட்டும்

யாழ்.மாவட்டத்திற்கான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக பொலிஸ் சேவையில் நீண்ட கால அனுபவமுடைய ஸ்ரனிஸ்லஸ் என்ற தமிழர் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை உண்மையில் வரவேற்கத்தக்கது.

அதிலும் யாழ்ப்பாணத்தில் குற்றச்செயல்கள் மற்றும் போதைவஸ்துப் பாவனைகள் அதிகரித்து வருகின்ற நிலையில்,

தமிழர் ஒருவரை பொலிஸ் அதிகாரியாக நியமித்தமை குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கான ஒரு சிறந்த மார்க்கமாக அமையும்.

இதைக் கூறுவதற்காக சிங்கள பொலிஸ் அதிகாரிகள் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தவில்லை என்று யாரும் பொருள் கொண்டு விடக்கூடாது.

தமிழ்ப் பிரதேசத்தில் தமிழர் ஒருவர் பொலிஸ் உயர் அதிகாரியாக இருக்கும் போது அவருக்கும் மக்களுக்குமான தொடர்பாடல் இலகுபடக்கூடிய தான வாய்ப்பு ஏற்படும்.

இதற்கு மேலாக மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள், அதன் தாற்பரியங்களை புரிந்து கொள்வதற்கான வழிகள் இலகுபடுத்தப்படும்.

ஆகையால் தமிழர் பிரதேசங்களில் பொலிஸ் அதிகாரிகள் தமிழர்களாக இருப்பது மிகவும் நல்லது.

இதேவேளை யாழ்ப்பாணத்தின் பொறுப்பதிகாரியாக இருந்த வூட்லர் போன்ற நேர்மையான சிங்கள பொலிஸ் அதிகாரிகளும் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றியுள்ளனர் என்பதை மறுதலித்து விடக்கூடாது.

எதுவாயினும் யாழ்ப்பாண மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியாக தமிழர் ஒருவர் பதவியேற்றுள்ளமையால் அவர் மீதான நம்பிக்கைகள் மக்களிடம் அதிகரிக்கப்படுவதுடன் குற்றச் செயல்கள் குறித்த தகவல்களை பொதுமக்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதும் சுலபமாக இருக்கும்.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவிவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடனேயே சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக தமிழர் ஒருவரை பொலிஸ்மா அதிபர் நியமித்துள்ளமை ஒரு சரியான புரிதல் ஏற்பட்டுள்ளமை தெரிகிறது.

அந்த வகையில் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் யதார்த்தம் சார்ந்த நிர்வாகத்தை தமிழ் மக்கள் மனத் தூய்மையுடன் வரவேற்கின்றனர்.


அதேவேளை யாழ்.மாவட்டத்தில் ஒரு நேர்மையான பொலிஸ் நிர்வாகத்தை கட்டி எழுப்புவதன் மூலம் மக்களின் ஏகப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும்.

ஒரு நாட்டில், பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட வேண்டுமாயின் பொலிஸ் நிர்வாகம் மிகவும் உன்னதமான சேவையை வழங்க வேண்டும்.

எனவே யாழ்.மாவட்டத்தில் குற்றச்செயல்களை அடியோடு கட்டுப்படுத்தல் என்ற வேலைத் திட்டத்திற்குள் யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் நேர்மையான சேவை கிடைப்பதை உறுதி செய்வதும் அவசியமாகும்.

இத்தகையதோர் நேர்மையான பொலிஸ் சேவை கிடைப்பது உறுதி செய்யப்படும் போது குற்றச் செயல்கள் கடுமையாகச் சரிவடையும் என்பதால், புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் நிர்வாகத்தில் கூடிய கவனம் செலுத்துவார் என்று நம்பலாம்.

## இணுவில் கந்தசுவாமி கோவில்




இன்று மூன்றாம் திருவிழா (12.06.2016)


**இறையருள் தந்திடும் இணுவைக் கந்தன்**

பல்வினை போக்க பால் காவடிகள் ஆடிவர
செய்தவினை போக்க செதில் காவடிகள் ஆடிவர
முன்னோர் வினை போக்க முள் காவடிகள் நடந்துவர
பிறர்வினை போக்க பறவைக் காவடிகள் பறந்துவர
பஞ்சம் பிணி போக்க பால்பவனி நடந்துவர
ஆறுமுகன் பெயர் சொல்லி அழகுமயில் காவடிகள்ஆடிவர
கருணை வெள்ளம் ஓட பக்தர் வெள்ளம் பெருகிட
இணுவைக் கந்தா இணுவைக் கந்தா என்று சொல்லி
எம்குறை தீர்க்க உமை நாடி ஓடி வர
இறையருள் தந்திடுவாய் இணுவைக் கந்தா

இணுவை.V.V.சஜிந்தன்

அனுசரணை: மூன்றாம் திருவிழா உபயகாரர்

## ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் (நீராவியடி-யாழ்ப்பாணம்)



நான்காம் நாள் (12.06.2016)

முப்பத்து முக்கோடி
தேவர்க் கெல்லாம் முதல்வனே
சிவனின் புதல்வனே
யானை முகம் கொண்ட ஆதவனே
தம்பிக்கு துணை நின்ற தூயவனே
சமய யோசனையால்
ஞானப் பழத்தை வென்றெடுத்த நாயகனே
இசையின் நாதமே
உன் தும்பிக்கையே எங்கள்
வாழ்வின் நம்பிக்கை
எமைக் காத்திடுவாய் விநாயகனே

இ.பிரியா

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில வெள ளாம்பொக்கட்டி, கச்சாய் தெற்கு, பாலாவி, கெற்பலி, அல்லாரை ஆகிய இடங்களிலும் கிளிநொசசி பிரதேசத்தில் நாச்சிக்குடா, உருத்திரபுரம், சிவன நகர், ஜெயந்திநகர், கரைச்சிதெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசததில குட்செட் வீதி, குருமனகாடு கிராமம ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும்.(இ-9)

மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில்

# ஆயுதக் களஞ்சியங்களை இனி நிர்மாணிப்பதில்லை

## அரசாங்கம் தீர்மானம்

மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் பாதுகாப்பு படையினருக்கான ஆயுத களஞ்சியங்களை இனி நிர்மாணிப்பதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அத்துடன் கொஸ்கம பிரதேசத்தில் சேதமடைந்த வீடுகள் தொடர்பான மதிப்பீட்டு பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டதாக சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை சாலாவ இராணுவ முகாமில் நிகழ்ந்த வெடிப்புச் சம்பவத்தை அடுத்து மூடப்பட்ட அனைத்து பாடசாலைகளும் திங்கட்கிழமை மீண்டும் திறக்கப்படும் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (இ-10)

# மனித உறவுகளில் விரிசல்கள் விரிந்து கொண்டே செல்லக் காரணம் என்ன?

பரிசேயனாகிய சீமோன் வீட்டில் இயேசு விருந்து உண்பதற்கு வருகிறார். அன்று அப்போது அங்கே அழையாத விருந்தினராக மற்றொருவரும் அது ஒரு பெண். அப்பெண் எந்தவொரு வார்த்தைகூட பேசவில்லை. ஆனாலும் அவர் செய்த செயல்களோ அற்புதமானவை.

அக்காலத்தில் பரிசேயர்கள் விருந்து உண்பதற்கு ஒருமரபு முறையை வைத்திருந்தார்கள்: 'விருந்தினர் ஒரு சிறிய மேசை முன் அமர்ந்து, தலையணையில் சாய்ந்த நிலையில் இடது முட்டுக்கையை ஊன்றிக் கொண்டு வலது கையால் உணவை எடுத்து உண்பர். அப்போது விருந்தினரின் கால்கள் மடக்கப்பட்ட நிலையில் அவர்களின் காலடிகள் பின்புறம் தெரியும்" இதனால தான் அந்தப் பாவியான பெண் இயேசுவுக்குப் பின்னால் கால்மாட்டில் அழுது கொண்டே நின்றார். தன் வாழ்க்கை பாழாகிப்போனதே என்னும் மனக் கவலையால் அவர் அழுதாரா? புதியதொரு வாழ்வைத் தொடங்க வேண்டும் எனத் தீர்மானித்து, தன் தவறுகளை நினைத்து மனம் வருந்தி அழுதாரா? தெரியவில்லை ஆனால் அவர் தேடி வந்தது இயேசுவைத்தான் அவரை கண்டு கொள்கிறார். உணவருந்திக் கொண்டிருந்த இயேசுவின் காலடிகளின் அருகில் நின்று அழுததால் கண்ணீர்த் துளிகள் இயேசுவின் பாதங்களை நனைக்கின்றன. நனைந்த இயேசு வின் காலடிகளைத் தன் கூந்தலால் துடைக்கின்றார். இயேசுவின் பாதங்களை முத்தமிடுகிறார். தன் கையி லிருந்த படிகச் சிமிழிலிருந்து நறுமணத் தைலத்தை எடு த்து இயேசுவின் காலடிகளில் கரிசனையோடு பூசுகின்றார்.

இச்சம்பவம் உண்மையிலேயே வியப்புக் குரியது தான். விருந்து நடக்கும் போது அங்கே நுழைவதற்கு

## பரமபிதா காட்டிய பாதை

அப்பெண்ணுக்கு அனுமதி இருக்கவில்லை. அதுவும் சட்ட நுணுக்கங்களைத் துல்லியமாகக் கடைப்பிடிக்கும் பரிசேயன் ஒருவனது வீட்டில் பாவியான பெண் நிற்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. மேலும், இறைவாக்கினர் என மக்களால் கருதப்பட்ட இயேசுவிடம் சென்று அவருடைய காலடிகளை அப்பெண் தொட்டார் என்பது நினைத்துக் கூட பார்க்கமுடியாத இன்னும் ஒரு பெரிய தவறு, எல்லை மீறல் ஆகும். ஆனால் இயேசு அப்பெண்ணின் இதயத்தில் புதைந்து கிடந்த சிந்தனைகளை நன் கறிந்திருந்தார். அப்பெண்ணின் உள்ளத்தில் எழுந்த அன்பும் நம்பிக்கையும் இயேசுவுக்கு வெளிச்சமாகியிருந்தன. எனவே இயேசு பாவியான அப்பெண்ணைப் போற்றிப் பேசுகின்றார். இயேசுவை வீட்டுக்கு அழைத்துவிட்டு அவருக்கு உரிய மரியாதை காட்டாத சீமோன் எதையெல்லாம் செய்யாது விட்டானோ அதையெல்லாம் அப்பெண் இயேசுவுக்குச் செய்வதை நாம் இங்கு பார்க்கின்றோம். அதாவது, வீட்டுக்குள் நுழைவதற்கு முன் காலடிகளைக் கழுவுவது வழக்கம். அப்பெண் இயேசுவின் காலடிகளைத் தன் கண்ணீரால் கழுவித் தன் தலைமுடியால் துடைக்கிறார். விருந்தினரை முத்தமிட்டு வரவேற்பது வழக்கம். ஆனால் அப்பெண்ணோ இயேசுவின் காலடிகளையே முத்தமிடுகிறார். விருந்தினரின் தலையில் எண்ணெய் பூச வேண்டும். ஆனால் அப்பெண்ணோ 'தன்னையே தாழ்த்திக்கொண்டு, இயேசுவின் காலடிகளைத் தொட்டு அவற்றில் நறுமணத் தைலம் பூசுகிறார். இவ்வாறு' அவர் தன் அன்பை வெளிப்படுத்துகிறார். இயேசு அப்பெண்ணின் அன்பையும் நம்பிக்கையையும் பாராட்டியதோடு அவருடைய பாவங்களையும் மன்னித்து, அவருக்கு மீட்பையும் அமைதியையும் வாக்களிக்கின்றார். அன்பு இருக்கும் இடத்தில் கடவுளின் அருள் தோன்றும் என்பதற்குப் பாவியான பெண் சிறந்த எடுத்துக்காட்டாகிறாள்.

இயேசுவை அணுகிவந்து, அவருடைய காலடிகளில் நறுமண தைலம் பூசி தன் அன்பையும் மரியா தையையும் வெளிப்படுத்திய பெண்ணைப்பார்த்து இயேசு அமைதியில் செல்க என்கிறார். அப்பெண்ணுக்குக் கடவுளின் இரக்கமும் மன்னிப்பும் கிடைத்ததால் அவர் அமைதியில் செல்லலாம். மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படுவது இயல்பு. மன்னிதது ஏற்கும் பண்பு இல்லா விட்டால் அந்த விரிசல்கள் விரிந்துகொண்டே போகும்.




பிறரிடம்தான் குறைகள் எல்லாம் உள்ளன, நம்மிடம் யாதொரு குறையும் இல்லை என நாம் நினைத்தால் முறிந்த உறவுகள் ஒருநாளும் சரியாகிட இயலாது. மாறாக, நம்மை மன்னித்து ஏற்கின்ற கடவுளின் இரக்கத்தை நாம் அனுபவிக்கும்போது, அதே முறையில் பிறரின் குற்றங்களை மன்னித்து அவர்களையும் கடவுளின் அன்பின் பொருட்டு ஏற்றுக்கொள்வோம். அப்போது நம் உள்ளத்தில் அமைதி ஏற்படும். அன்பு இருக்கும் இடத்தில் மன்னிப்புக்கு இடம் உண்டு.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# கழுகுகள் வி.கழகம் நடத்திய நல்லிணக்க உதைபந்தாட்ட போட்டி

## சமநிலையில் முடிவுற்றது





பருத்தித்துறை. வடமராட்சி உதைபந்தாட்ட லீக் ஒத்துழைப்புடனும் நெற்கொழு கழுகுகள் வி.க. நடத்திய மாபெரும் நல்லிணக்க உதைபந்தாட்ட போட்டியானது 04.06.2016 அன்று பெருமளவு ரசிகர்கள் மத்தியில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

யாழ்ப்பாண இராணுவ அணியினருக்கும் வடமராட்சி தெரிவு அணியினருக்கும் இடையில் போட்டியானது நடைபெற்றது.

பலம் பொருந்திய இரு அணியினருக்கு இடையிலான போட்டியாக அமைந்தமையால் போட்டியின் ஆரம்பம் முதல் வேகத்திற்கு குறைவற்று காணப்பட்டது. இரு அணியினரும் கோலினை பெற்றுக்கொள்வதற்காக கடும் முயற்சியினை மேற்கொண்ட போதும் இறுதி தருணங்களில் எதிரணியினரால் கோல் பெறும் வாய்ப்பு தகர்க்கப்பட்டது.



முதற்பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்திய போதும் கோல் பெற முடியாது போக முதற்பாதி ஆட்டம் 0:0 என சமநிலையில் நிறைவுபெற்றது.

மிகுந்த எதிர்பார்ப்புடன் ஆரம்பமான இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஆட்டத்தின் சிறிது நேரத்தில் இராணுவ அணி சிறப்பான கோலினை அடித்து ரசிகர்களை ஆரவாரப்படுத்தியது.

தொடர்ந்து ஆடிய இராணுவ அணி எதிரணி கோல் பெறும் வாய்ப்பினை தடுப்பதை நோக்கமாக கொண்டு ஆடியபோதும் வடமராட்சி தெரிவு அணியின் அனுபவ வீரரும் சர்வதேச மைதானங்களில் திறமையினை வெளிப்படுத்திய வீரருமான பிரேம் (பீமா)கோல் காப்பாளருக்கு மேலால் தூக்கி போட்டு கோலினை அடித்து அதிர்ச்சியளித்தார்.

தொடர்ச்சியான ஆட்டத்திலும் இரு அணியினராலும் கோல் எதுவும் பெறப்படாததினால் நல்லிணக்க உதைபந்தாட்டம் சமநிலையில் நிறைவுபெற்றது. (க)

# ஹென்றீசியன் சவால் கிண்ணம் குருநகர் பாடுமீன் வெற்றி



ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் லீக்சுற்று ஆட்டங்கள் புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் நடைபெற்ற லீக் போட்டியில் நாவாந்துறை சென்.நீக்கிலாஸ் அணியும் குருநகர் பாடுமீன் அணியும் மோதின.

ஆட்ட ஆரம்பத்திலிருந்து பாடுமீன் அணி தாக்குதல் ஆட்டத்தை (attacking play) மேற்கொண்டது. எனினும் கோல்போடும் வாய்ப்புக்களை கோட்டைவிட்டது. சென்.நீக்கிலாஸ் அணி இரண்டாவது பாதியில் ஆட்டத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தும் கிடைத்த இரு கோல் வாய்ப்புக்களை தவறவிட்டது.

இரு அணிகளும் இறுதி வரை எவ்வித கோலும் பெறாமையால் ஆட்டம் சமநிலையானது. இதனால் ஏற்கனவே ஒரு வெற்றியுடன் மூன்று புள்ளிகளைப் பெற்ற பாடுமீன் அணி மொத்தம் நான்கு புள்ளிகளுடன் D பிரிவில் முதல் அணியாக காலிறுதிக்குத் தகுதிபெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக பாடுமீன் விளையாட்டுக்கழக வீரர் மயூரன் தெரிவானார். (க)

# இன்றைய போட்டிகள்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் 97 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் அரியாலை ஐக்கியம் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்.மைக்கல் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

✪✪✪✪✪✪✪✪✪✪✪✪


பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு நடைபெறும் போட்டியில் மன்னார் கில்லறி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மன்னார் சென்.ஜோசப் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

✪✪✪✪✪✪✪✪✪✪✪✪

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகமும் மாலை 4.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து எல்லாளன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (க)


# புலோலி இளைஞர் வி.கழக மென்பந்து சுற்றுப்போட்டி

## கரவெட்டி ஞானம்ஸ் சம்பியன்











புற்றளை புலோலி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்திய 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணி சம்பியனாகியது.

இளைஞர் விளையாட்டுக் கழகம் பெருமையுடன் நடத்திய 20 இற்கு மேற்பட்ட அணிகள் பங்குபற்றிய அணிக்கு 5ஓவர்கள் 7வீரர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுத்தொடரில் இறுதிப்போட்டிக்கு தெரிவாகிய கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் மற்றும் குரும்பசிட்டி உதயசூரியன் அணிகள் வடமராட்சி மண்ணில் புற்றளை மாவில் மைதானத்தில் இறுதிப்போட்டியில் சந்தித்து கொண்டன.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற உதயசூரியன் அணித் தலைவர் காந்தன் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

அந்தவகையில் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 3விக்கெட்டுகளை இழந்து 47 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அதிகபட்சமாக காந்தன் 24 ஓட்டங்களை பெற்றார்.

பதிலுக்கு 48 என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி 4.3 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 48 ஓட்டங்களை பெற்று வெற்றியை பெற்றது. வெற்றிக்கிண்ணத்தையும் பணப்பரிசையும் தம்வசமாக்கியது ஞானம்ஸ். ஆட்டநாயகனாக 23 ஓட்டங்களை பெற்ற ஞானம்ஸ் வீரர் பிரகாஷ் தெரிவானார். (க)

# சமநிலை தவிர்ப்பு உதையில் வதிரி டயமன்ஸ் வெற்றி



இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் (05/06/2016) அன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் மோதியது. ஆரம்பத்திலேயே கொலின்ஸின் வீரர் விஸ்ணு 18 ஆவது நிமிடத்தில் முதல்கோலை போட ஆட்ட வேகம் அதிகரித்தது. பின்னர் 20 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணிக்கு ஒரு தண்ட உதை கிடைத்து. அதனை பீமா கோலாக மாற்றினார். முதல் பாதி 1:1 என நிறைவுற்றது. இரண்டாவது பாதியின் 32 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி வீரர் ரஜீபன் கோல் அடித்தார். பதிலுக்கு கொலின்ஸ் அணி வீரர் பனுராஜன் 43 ஆவது நிமிடத்தில் சுப்பர் சொட் கோலை போட ஆட்டம் 2:2 என்ற அடிப்படையில் சமநிலை அடைந்தது. சமநிலை தவிர் உதைப்பில் டயமன்ஸ் 04:03 என்ற ரீதியில் வெற்றி பெற்று லீக் சுற்றுக்கு தெரிவாகியது. (க)

## மீனவர் ஒருவரை...

ரஜீவன் (வயது26) என்ற இளைஞரே கரை திரும்பவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது.

அதிகாலையில் கடலுக்குச் சென்றவர் நண்பகலாகியும் கரை திரும்பாததையடுத்து அவரின் உறவினர்கள் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர்.

நேற்று சனிக்கிழமை மாலை வரை அவர் தொடர்பான தகவல் எதுவும் கிடைக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் அப்பகுதி மக்கள் தொடர்ந்தும் தேடுதல் நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-60)

## நில அதிர்வு எச்ச...

அத்துல சேனாரத்ன தெரிவித்துள்ளார். மேலும் நாட்டில் மண்சரிவு அச்சுறுத்தல் இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## பாதுகாப்பு குறித்து...

மாவட்ட பிரதிப் பொஸிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண தலைமையில் நடைபெற்றது.

இதில் ஜனாதிபதி செயலகத்தின் பாதுகாப்பு பிரிவின் சிரேஷ்ட அத்தியட்சகர் கே.வி.விக்கிரமசிங்க கலந்து கொண்டு பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

அன்றைய தினம் நான்கு உத்தியோகபூர்வமான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஜனாதிபதியினால் திறந்துவைக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி செயகத்தின் பாதுகாப்பு பிரிவின் சிரேஷ்ட அத்தியட்சகர் கே.வி.விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வட மாகாண மற்றும் யாழ் தலைமை பொஸிஸ் நிலையங்களும், யாழ் துரையப்பா விளையாட்டு அரங்கு மற்றும் யாழ் பொது நூலகத்தில் உள்ள இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியான அப்துல் கலாமின் உருவச் சிலை திறப்பும் மற்றும் காங்கேசன்துறையில் உள்ள மக்களின் காணிகளை மக்களின் பார்வைக்கான விடுப்பு தொடர்பிலும் ஜனாதிபதி விசேடமாக பங்கேற்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இக்கலந்துறையாடலில் வடமாகாண ஆளுநரின் செயலக் அதிகாரிகள் மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகள், பொஸிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

புனரமைக்கப்பட்ட யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரில் திறந்து வைக்கவுள்ள நிலையில் திறப்புவிழாவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலமாக பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## விருசர நலன்புரி...

சேவையை சேர்ந்த இளைப்பாறிய, இடைவிலகிய அதிகாரிகள், தமிழ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போது அரச பாதுகாப்பு சேவையில் கடந்த காலங்களில் இணைந்து நாட்டிற்காக உயிரினை அர்ப்பணித்து போராடியவர்ளை இத்திட்டத்தின் மூலம் கௌரவிப்பது எமது ஒவ்வொருவரது கடமையாக உள்ளது என தனது உரையில் கட்டளை தளபதி சுட்டிக் காட்டினார்.

இத்திட்டமானது முதலில் யாழில் அறிமுகம் செய்யப்படுவதுடன் இராணுவம், கடற்படை, விமானப்படை, பாதுகாப்பு அலுவலர்கள், சிவில் பாதுகாப்பு சேவை அலுவலர்களின் குடும்பத்திற்கான நலன்புரி திட்டமாக விருசர உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம குறித்த உத்தியோகத்தர்களிற்கு அரச திணைக்களம், தனியார், அரச வங்கிகள், அரச, தனியார் கல்வி நிலையங்கள், தனியோர் காப்புறுதி நிதி நிறுவனங்கள் மற்றும் சுகாதார சேவைகளில் அதிக வரப்பிரசாதங்களை பெற முடியும் இதற்கென விசேட அடையாள அட்டை ஒன்றை வழங்கப்படும். இது தவிர பொலநறுவை மாவட்டத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி இத்திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது. எனவே இதில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்களிற்கு பாதுகாப்பு தலைமையகம் விசேட ஒழுங்குகளை மேற்கொள்ளும் என குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை மேற்படி நலன்புரித் திட்டத்தில் தமிழ் இளைஞர் யுவதிகளை இணைத்து கொள்வதற்கான செயற்பாடுகளும் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. (செ-4)

## புதைக்கப்பட்ட திமி...

நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களிடம் வாக்கமூலம் பதிவு செய்து வருவதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் சந்தேகநபர்களை முல்லைத்தீவு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு செம்மலை பகுதியிலும் புதைக்கப்பட்டிருந்த மற்றுமொரு திமிங்கிலத்தின் பாகங்களைத் தோண்டியெடுப்பதற்கு சந்தேகநபர்கள் முற்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

திமிங்கிலத்தின் உடலினுள் காணப்படும் ஆம்பல் எனப்படும் ஒருவகை ஆயுர்வேத மருத்துவத் தேவைக்கு பயன்படும் பெறுமதி மிக்க பாகத்தையே சந்தேகநபர்கள் தோண்டியெடுப்பதற்கு முயற்சித்துள்ளதாக கருதப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

## வடக்கின் எந்த...

டையே வேண்டுமென்றோ அல்லது புரியாமலோ பரவவிடப்பட்டுள்ளது. அதாவது வட மாகாணசபைக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் பெருந் தொகையான பணம் செலவழிக்கப்படாது மீள அனுப்பப்பட்டதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் உண்மை நிலையை பொதுமக்களுக்கு அறியத்தர வேண்டியது மக்கள் பிரதிநிதிகளாகிய எங்கள் தலையாய கடமை என்பதால் பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) அவர்களால் வெளியிடப்பட்ட 2015 ஆம் ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டு அறிக்கை வெளிப்படுத்தப்படுகின்றன.

அந்த வகையில் நிதிமூலங்களுக்குரிய மொத்த ஒதுக்கீடு 21349.62 மில்லியன் ரூபாயும் உண்மையான செலவு 21027.12 மில்லியன் ரூபாயும் ஆகும். இதில் யுனிசெப் நிதிமூல ஒதுக்கீடு 26.03 மில்லியன் ரூபாயும் உண்மையான செலவு 15.75 மில்லியன் ரூபாயும் ஆகும்.

இதில் யுனிசெப் நிதி ஆண்டு ஏப்ரல் முதல் மார்ச் வரையானதாகும். அதனால் 2015 ஆம் ஆண்டின் மிகுதி அடுத்த ஆண்டுக்கு கொண்டு செல்லப்பட்டு செலவீனங்கள் பதிவு செயயப்படும். யுனிசெப் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிறைவேற்றப்படும் வேலைத் திட்டங்கள் 180 நாட்கள் வேலைத்திட்டம் என்ற அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இவ் வேலைத் திட்டங்களுக்கான நிதி 180 நாட்களுக்குள் அதாவது 6 மாத காலங்களுக்குள் பயன்படுத்தப்பட முடியும்.

இவ் வேலைத் திட்டங்கள் நிதி ஆண்டுகளின் செயற்பாட்டிற்குள் அடங்காது. வருட இறுதியில் ஒதுக்கப்படுகின்ற நிதிகள் அடுத்த ஆண்டிலும் செலவு செய்யப்படலாம்.

எனவே 2015-ம் ஆண்டு நிதிச் செயற்பாட்டில் எந்தவொரு நிதியும் மீள திறைசேரிக்கு அனுப்பப்படவில்லை என்பதை வட மாகாண சபையின் சார்பில் பொதுமக்களுக்கு அறியத் தருகின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## யாழ்.சிரேஷ்ட...

யாழ். மாவட்டத்திற்கான சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகராக நியமிக்கபட்டுள்ள தமிழரான கஸ்ரன் ஸ்ரனிஸ்லஸ் நேற்றைய தினம் தனது கடமைகளை பொறுப்பேற்று கொண்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக நிலவிவரும் குற்றச் செயல்களை கட்டுப்பாட்டில கொண்டு வரவேண்டும் என்ற கோரிக்கைகள் வலுவடைந்துள்ள நிலையில்,

யாழ்.மாவட்டத்திற்கு தமிழரான கஸ்ரன் ஸ்ரனிஸ்லஸ் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை முழுமைக்குமான ஒழுக்கம் நன்னடத்தைப் பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றிய இவர் 1982களில் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கிளிநொச்சி பொலிஸ் நிலையங்களில் உதவிப் பொலிஸ் பரிசோதகராகப் பணியாற்றியிருந்தார்.

பொலிஸ் சேவையில் 38 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள இவர் மட்டக்களப்பை சொந்த இடமாகக் கொண்டுள்ளார். நேற்றைய தினம் சனிக்கிழமை யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக அமைந்துள்ள சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் காரியாலயத்தில் சர்வமத ஆசிர்வாதத்துடன் தனது கடமையை பொறுப்பேற்றார்.

இதன் பின்னர் மதகுருமார்களுடன் கருத்துக்களை பகிர்ந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தான் மட்டக்களப்பு பிரதேசத்தை சேர்ந்தவர். என்னை பொலிஸ்மா அதிபர் இந்த பதவிக்கு விசேடமாக நியமித்துள்ளார். 1982 ஆண்டு உப பொலிஸ் பரிசோதகராக யாழில் கடமையாற்றியுள்ளேன். முன்பு இருந்த நிலைமையும் இப்போது உள்ள நிலைமையும் இப்பிரதேசத்தில் வேறு, இந்த ஊரை திருத்தி எடுக்க வேண்டும்.

எதும் பிரச்சினை இருந்தால் என்னுடன் கதைக்கலாம் என சர்வமத தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். இதனை அடுத்து சர்வமத தலைவர்கள் இதைதான் நாங்களும் எதிர்பார்க்கின்றோம் என கூறியதுடன் அவரது சேவ்வ தடையின்றி தொடர ஆசிகளையும் வழங்கியிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் குற்றச்செயல்கள் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வரும் நிலையில் யாழ்.மாவட்டத்திற்கு தமிழரான இவர் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவினால் நியமிக்கப்பட்டுள்ளார். (செ-4)

## பாதிக்கப்பட்ட...

உரிமை கண்காணிப்பகம் அதில் தெரிவித்துள்ளது.

மனித உரிமை கண்காணிப்பகத்திற்கு அண்மையில் மனோ தித்தவல்ல அனுப்பிய கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில் இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையர்கள் பலரின் கருத்துக்களை செவிமடுத்ததன் பின்னரே இந்த முதல் அறிக்கை வெளியிடப்பட்டதாக மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்களது குடும்ப உறுப்பினர்களின் கருத்துக்களை அறியாது காணாமல் போனவர்கள் குறித்த அலுவலகம் அமைப்பது பிழையானது என மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியிருந்தது.

இதற்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் மனோ தித்தவல்ல கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார்.எனினும், தமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் கிடையாது என மனித உரிமை கண்காணிப்பகம் மீண்டும் தெரிவித்துள்ளது.

மிக முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட முன்னதாக பாதிக்கப்பட்டவர்கள் ஒதுக்கப்படுவதோ அல்லது உதாசீனம் செய்யப்படுவதோ ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்கள் விவகாரம் உள்ளிட்ட இலங்கையின் மனித உரிமை பிரச்சினைகள்குறித்து நீண்ட காலமாக தமது அமைப்பு குரல்கொடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பெரும் எண்ணிக்கையிலான இலங்கையர்களுடன் கலந்தாலோசித்து கருத்துக்களைத் திரட்டி அதன் அடிப்படையில் முடிவுகள் பரிந்துரைகள் முன்வைக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த விடயம் தொடர்பில் அடுத்த வாரம் ஜெனிவாவிலும் பேசவுள்ளதாக அடம்ஸ் தெரிவித்துள்ளார். (செ-12)

## ஜப்பான் ரீ-கடையில் மகிந்த!



ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜப்பானிலுள்ள சிற்றுண்டிச் சாலையில் தேநீர் குடிக்கும் போது எடுத்த படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் ஜப்பான் சென்றார். அவருடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹித அபேகுணவர்தன மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோரும் சென்றுள்ளனர்.

சமூக வலைத்தளங்களில் வெளியான புகைப்படங்கள், இவர்கள் அனைவரும் சாதாரண தெருவோர தேநீர் கடையில் அமர்ந்திருப்பதை படங்கள் எடுத்துக் காட்டுகின்றன. (செ-12)

## மனைவி, பிள்ளைகளுடன் இணைந்து முன்னாள் பொலிஸ் அதிகாரி போராட்டம்

தன்னை மீண்டும் பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ள் கோரி முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அம்பாறை கஞ்சிக்குடியாறு காட்டுப்பகுதியில் மனைவி மற்றும் 3 பிள்ளைகளுடன் நேற்று சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

அம்பாறை கல்முனை பிரதேசத்தில் வாழ்ந்து வரும் 46 வயதுடைய முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரான மனோஜ் பியந்த சிறிவர்த்தன என்பவரே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

2003-ம் ஆண்டு மே மாதம் 11-ம் திகதியில் இருந்து தன்னை அரசியல் பழிவாங்கல் காரணமாக கடமையில் இருந்து இடைநிறுத்தியதாகவும், இது தொடர்பாக ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வந்தும் இதுவரை எந்தவிதமான அறிவித்தல்களும் இல்லை எனவும் கூறியுள்ளார்.

பொலிஸாரான எங்களை சுடுமாறு பணித்த விடுதலைப் புலிகளின் அப்போதைய தளபதியான கருணா அம்மான் இன்று சுதந்திரமாக சந்தேசமாக இருக்கின்றார் என்றும் அவர் குற்றம் சுமத்துகிறார்.

கடந்த 1990-ம் ஆண்டு யூன் மாதம் 11-ம திகதி கல்முனை பொலிஸ் நிலையத்தில் சேவையில் இருந்த 123 பொலிஸார் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்து சுட்டுக் கொல்லப்பட்ட போது காயங்களுடன் தப்பிய பொலிஸ் அதிகாரியே உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளவராவார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

(C-4836)



# தேவை

**சங்கானையில் புதிதாக இயங்கவுள்ள எமது கிளைக்கு abacus கற்பிக்க பெண் ஆசிரியர்கள் தேவை.**

தகைமைகள்:

1.G.C.E O/L கணிதம், ஆங்கிலம் B or C தர சித்தி.
2.G.C.E A/L இரண்டு பாடங்களில் சித்தி
3.AMI Diploma கற்றிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும் கற்பிப்பதற்கான பயிற்சி கொழும்பில் தரப்படும்.

ஆர்வம் உள்ளோர் உங்கள் சுயவிபரக்கோவையை பின்வரும் மின் அஞ்சலுக்கு 20.06.2016 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

மின்னஞ்சல் முகவரி: avajobs@yahoo.com

(சி-4857)



முல்லைத்தீவு கடற்கரை வீதியில் காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு கடற்கரை வீதியில் பட்டினத்தை அண்டியதாக 51 பேர்ச் காணி, சுத்தமான உறுதியுடன், முன்பக்கம் கடற்கரை வீதியும், இரு பக்கங்களில் அகலமான வீதிகளுடன், உல்லாச விடுதி ஹோட்டல் அமைக்க உகந்தது. இதே வீதியில் வாடி வீடு, சிறுவர் பூங்கா அமைந்துள்ளது.

தொடர்புகளுக்கு :
077 287 0223

(சி-4846)



SINGER

"உலகின் மிகச்சிறந்த Dell Laptop களுக்கு விசேட கொடுப்பனவுகள்"



4 வருடங்கள் வரை நீடித்துக் கொள்ளக்கூடிய உத்தரவாதம்

4G டொங்கல் இலவசம்

நிபந்தனைகளுக்குட்பட்டது




**DELL - NB - I3 (DELL Inspiron 3543)**
- Intel i3 - 5005U, 2.0GHz
- 4GB, 500GB, HD Webcam
- 15.6" HD Display, DVD RW
- McAfee Virus Guard

ரு.71,999/-

விசேட விலை ரு.65,999/-

மாதாந்தம் ரு.4,333/- X12




**DELL - NB - DC5G (DELL Inspiron 3543)**
- Intel Dual Core 1.5GHz
- 4GB, 500GB, HD Webcam
- 15.6" HD Display, DVD RW
- McAfee Virus Guard

கலர் பிரிண்டர் இலவசம்

ரு.62,999/-

விசேட விலை ரு.57,999/-

மாதாந்தம் ரு.3,999/- X12

(C-4837)

www.masters.lk

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் (ஸ்ரான்லி வீதி) | 021-2225408 | பருத்தித்துறை | 021-2263411 | முல்லைத்தீவு | 021-2290180 | கொடிகாமம் | 077-7858232 |
| யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி வீதி) | 021-2216320 | சங்கானை | 021-2251100 | சாவகச்சேரி | 021-2270197 | கிளிநொச்சி | 021-2280199 |
| நெல்லியடி | 021-2264937 | சுன்னாகம் | 021-2240555 | மானிப்பாய் | 021-2255343 | | |

SINGER Plus



# பாத் (BULK) ஐஸ்கிறீம் மெசின் !!

1 மணிநேரத்தில் 45 - 50 kg ஐஸ்கிறீம் தயாரிக்கலாம்




பாத் ஐஸ்கிறீம் மெசின்

BATH ICE CREAM MACHINE

சுயமாகவே தயாரிக்கும் திறன் உடையது

இலவசப்பயிற்சி தரப்படும்

உத்தரவாதத்துடன் விற்பனைக்கு பிந்திய சேவையுண்டு.

WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,
Lucky Plaza,
St.Anthony's Mawatha,
Kollupitya,
Colombo - 03

max adz

தமிழில் தொடர்பு கொள்ள :

Eastman 077 391 8870

(C-4868)



# குயின்சி விநியோகஸ்தர்கள் (புத்தகசாலை)









- மருத்துவ பீட மாணவர்களுக்கான மருத்துவ நூல்கள்
- ஆங்கில அகராதிகள், தேசிய பாடசாலைப் புத்தகங்கள்
- சிறுவர்களுக்கான நகைச்சுவைக் கதைகள்
- மாணவர்களுக்கான அறிவியல் நூல்கள், நீதிநூல்கள்
- மங்கையர்களுக்கான சமையலில் ருசி பார்க்க சமையல் குறிப்புப் புத்த கங்கள், அழகுக்குறிப்புப் புத்தகங்கள் மற்றும் கோலப்புத்தகங்கள்
- சமயத்தினை வளர்க்க ஆன்மீகப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை மாணவர் களுக்கான எழுதுகருவி உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்கள், க.பொ.த. சாதாரண தர மாணவர்கள், க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான கடந்தகால வினாத்தாள்கள் போன்றவற்றை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

10% முதல் 50% வரையான விலைக் கழிவு




குயின்சி விநியோகஸ்தர்கள்
271, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 221 7513 H.P. 077 226 8486

(4794)



# யாழ் மதர் கெயார் Dental Unit

Reg.No.#PV85754



நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர் களினால் பல்லுக்கு கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல் உட்பட மற்றும் பல உயர்தர சேவைகள். [தற்போது யாழ் நகரில்]





- பல், வாய், வைத்திய சேவை (விசேடமாக வேரடைப்பு, பல் வெண்மையாக்கல்)
- பல், வாய், முகம் அறுவைச் சிகிச்சை (அண்ணப்பிளவு மற்றும் வாய், முக சீரமைப்பு)
- பல், வாய், முகம் சீரமைப்பு (ஒழுங்கற்ற, மிதப்புப் பற்கள் சீராக்கல்)

514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
Tel : 021 221 9595, 021 221 9797, Mob : 077 220 2769

(C-4858)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி

# சங்குநாதம்

Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2047 | 12.06.2016 | தொலைபேசி : 021 222 3378

நாதம் 69

# நல்லாட்சிக்கு ஆபத்து...?











உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. உறுப்பினர்கள் அனைவரும் மாநாட்டிற்கு வருகை தந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் மாநாடு ஆரம்பமாகியது.

**பண்டிதர்:** எங்கட மண்ணில சோலி சுறட்டுகள் நீங்கி மக்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்பம்.

எங்கட இளம் பிள்ளைகள் கல்வி கேள்விகளில சிறந்து விளங்கவும் ஒழுக்கம் பண்பாட்டில ஓங்கி மிளிரவும் நயினை நாக பூஷணித்தாயை இறைஞ்சுவம்.

(பண்டிதர் இவ்வாறு கூறிய வண்ணம் ஆலடி மரத்து வேரில அமர்ந்து கொண்டார். அவரைத் தொடர்ந்து அனைவரும் ஆலடியில் அமர்ந்தனர்)

**விதானையார்:** என்ன பண்டிதர் ஐயா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பரமேஸ்வன் கோயிலில நின்ற மரங்கள் தறியப்பட்டதாம். என்ன சங்கதி.

**பண்டிதர்:** ஓமோம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில இப்ப மரம் தறித்த விவகாரம்தான் சூடு பிடிச்சிருக்குது. பரமேஸ்வரன் கோயிலில கும்பாபிஷேகம் நடைபெறப்போகுது. அதற்காகத்தான் மரங்கள் தறியப்பட்டதாகப் பேராசிரியர் சொல்லுகிறார்.

கும்பாபிஷேகம் என்பதற்காக ஆலய வளவில இருக்கிற மரங்களைத் தறிக்கிறது நியாயமோ என்று மறுபக்கத்தில பேசப்படுகுது.

**வாத்தியார்:** பண்டிதர் இந்த இடத்தில நாங்கள் சரி பிழை சொல்லக் கூடாது. மரம் தறித்தவர்களின்ர நியாயப்பாடுகளையும் தறிக்கக்கூடாது என்று சொல்பவர்களாயின் நியாயங்களையும் கேட்டு அறிந்து அதை மக்களுக்குத் தெரியப்ப்டுத்துகிறதுதான் நல்லது.

எதுவா இருந்தாலும் ஆலயங்களில இருக்கக் கூடிய தல விருட்சங்களில கடவுள் வாசம் செய்வதாக ஒரு ஐதீகம்.

எனவே கோயில் விடயம். நாங்களும் நிதானமாகக் கதைக்க வேணும்.

(இப்படி வாத்தியார் கூறியதும் ஆலடி மாநாட்டில் சிறிதுநேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்கும் வண்ணம் கங்காணி கார்த்திகேசு குரல் கொடுத்தார்)

**கங்காணி:** யாழ்ப்பாண மாவட்டத்திற்கு தமிழர் ஒருவர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டிருக்கிறாராம்.

**விதானையார்:** நல்லம்... நல்லம்... தமிழர் ஒருவர் எஸ்.எஸ்.பி ஆக இருந்தால் எங்கட சனங்கள் தங்கட பிரச்சினைகளைப் போய்க்கதைப்பது சுகம் தானே.

**மூப்பர்:** மட்டக்களப்பைச் சேர்ந்த ஸ்ரனிஸ்லஸ் என்ற பொலிஸ் ஐயாவை யாழ். மாவட்டத்திற்கான எஸ்.எஸ்.பி ஆக நியமித்திருப்பதாகப் பேப்பரில பார்த்தனான்.

எங்கட யாழ்ப்பாணத்து மண்ணில நிலவக்கூடிய சோலியள புதுக்கவந்த பெரியவர் தீர்த்து வைச்சால் எங்கட சனங்கள் மிச்சம் சந்தோசப்படுவினம்.

**வாத்தியார்:** அதற்கு எங்கட சனங்களும் ஒத்துழைப்பு வழங்க வேணும். தனித்துப் பொலிஸாரால் மட்டும் ஒழுங்கு கட்டுப் பாட்டைப் பாதுகாக்க முடியுமோ என்ன?

சனங்களும் ஒத்துழைச்சால்தானே ஒழுங்கு கட்டுப்பாட்டைக் கொண்டு வர முடியும்.

**விதானையார்:** வாத்தியார் சரியாச் சொன்னீங்கள். எங்கட சனங்களும் கொஞ்சமாவது பொறுப்புடன் நடந்து கொள்ள வேணும். தங்கட வீட்டுக் குப்பைகளை வீதியில கொண்டு வந்து போடுகிற அறுந்த மனநிலை இருக்கும் வரைக்கும் எங்கட மண் என்னெண்டு உருப்படும்.

வீட்டில குழந்தைப் பிள்ளைகளுக்குப் பயன்படுத்துகிற பம்பசுகளை சொப்பின் பையில வைத்து வீதியில போட, அதைத் தெருநாய்கள் வீதி முழுக்க இடித்துச் செல்ல, எங்கட சுற்றாடல் எவ்வளவு மோசமாகப் பாதிக்கப்படுகிறது. இதை ஆரு உணர்ந்து கொள்ளப்போகினம்.

**பண்டிதர்:** என்ன சொன்னாலும் முதலில சமூகப் பொறுப்பு எங்கள் ஒவ்வொருதரிடமும் இருக்க வேண்டும்.

நான் செய்யிற ஒரு வேலை என்னைச் சுற்றியிருக்கிற அல்லது எந்த நபருக்கும் எந்தக் கெடுதியும் விளைவிக்கக் கூடாது. இந்த மனநிலையை எங்கட மக்களிட்ட ஏற்படுத்தி விட்டால் போதும் எல்லாம் சரியா வரும்.

**கங்காணி:** பண்டிதர் ஐயா சொன்னது போல சமூகப் பொறுப்பு இருக்கவேணும். அதற்கும் மேலால தமிழ்ப் பற்று இருக்க வேணும் பாருங்கோ.

என்ர இனம், என்ர சனம், என்ர உறவு, என்ர மண் இந்தப் பற்றும் பாசமும் இருந்தால் எங்கட மண்ணில எந்தத் தீமையையும் எவரும் விதைக்கமுடியாது.

இதைவிடுத்து இனப் பற்றும் மொழிப்பற்றும் ஒரு சிலருக்குத்தான். மற்றவர்களுக்கு அதைப் பற்றி எந்தக் கவலையும் கிடையாது என்றால் எங்கட இனத்தின்ர எதிர்காலம் கவலைக்கிடம்தான்.

**வாத்தியார்:** என்ன கங்காணியார் ஏதோ ஒன்றை நினைத்துக் கொண்டுதான் இப்படிக் கதைக்கிறியள். என்ன கங்காணியார் விசயத்தைத் தெளிவாச் சொன்னால்தானே நாங்களும் என்ன சங்கதி என்று அறிய முடியும்.

**கங்காணி:** ஏன் வாத்தியார் அதைக் கேட்கிறியள். எழுதுமட்டுவாழில ஏக்கர் கணக்கில இருக்கக்கூடிய தென்னங்காணிகளை தென்பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு எங்கட ஆட்கள் விற்றிருக்கினமாம்.

**மூப்பர்:** என்ன? எழுதுமட்டுவாழில பலஏக்கர் காணிக்கான காணிகளை தென்பகுதி ஆள் வாங்கிப்போட்டாராமோ. நாசமறுக்க. முல்லைத்தீவில எங்கட காணியள் பறிபட்டுக் கொண்டு போகுது. இப்ப எழுதுமட்டுவாழ் பக்கமும் இந்த அநியாயம் நடக்குதென்றால் தமிழர்கள் எங்கபோய் இருக்கிறது.

**விதானையார்:** மூப்பர் இதுக்கெல்லாம் நல்ல அமைப்புகள் இருக்க வேணும்.

எங்கெங்க என்னென்ன நடக்குது என்று ஆராய்ந்து தகவல்களை அறிந்து உரிய நடவடிக்கை எடுத்தால் அல்லாமல் காணிகள் பறிபோறதை ஒருத்தராலும் தடுக்கமுடியாது.

**கங்காணி:** ஏன்? விதானையார் எங்கட அரசியல்வாதிகள் என்ன செய்யினம்.

**வாத்தியார்:** அவையள் யாரைக் கவிழ்க்கலாம், யாரைப் புரட்டலாம், என்ன குழப்பம் செய்யலாம். இதுகள் பற்றித்தான் சதா சிந்தனை.

**பண்டிதர்:** இந்த குறுக்கால போன சிந்தனையால எங்கட சனங்களின்ர எதிர்காலம் அழிஞ்சு போகப் போகுது.

இதை இப்பயாயினும் கட்டுப்படுத்தாவிட்டால் நிலைமை படுமோசமாகும். இப்படிப் பண்டிதர் சொல்ல அதை ஆமோதிப்பது போல பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## எஸ்.எஸ்.பி. ஆக தமிழர் யாழ்.மாவட்டத்திற்கு நியமனம்

ஆதித்தன்

# நல்லாட்சியின் பலவீனம் மகிந்தவைப் பலப்படுத்தும்






இலங்கை என்ற நாட்டில் வெவ்வேறு நோக்கங்களைக் கொண்டவர்களின் தாக்கம் அதிகரித்து வருவதைக் காணமுடிகின்றது. இதில் சர்வதேச நாடுகளின் பார்வையும் நோக்கமும் வேறுபட்டதாக இருப்பதால் இலங்கையின் எதிர்காலம் என்பது ஆரோக்கியமற்றதாகவே அமையும் என்பதை அறுதியிட்டுக் கூறமுடியும்.

இதுதவிர, நல்லாட்சியை ஏப்பாடுபட்டும் கவிழ்க்க வேண்டும் என்பதில் உறுதியாக நிற்கக்கூடிய முன்னாள் ஆட்சியாளர்களின் போக்கும் இலங்கையில் ஸ்திரமான ஆட்சிக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவை.

இத்தகையதொரு நிலைமைக்குக் காரணம் என்ன என்பதில் இருந்து சிலவற்றை நாம் கண்டுகொள்ள முடியும்.

பொதுவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியே தேவை என்பதில் சிங்கள மக்களில் கணிசமானவர்கள் விருப்பத்தோடு உள்ளனர்.

விடுதலைப்புலிகளைப் போரில் வென்ற மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை மீளவும் அமைக்கத் தவறியது தாம் விட்ட பெரும் தவறு என்று சிங்கள மக்கள் இன்னமும் நினைத்துக் கொண்டிருக்கையில்,

தமிழ் மக்களின் ஆதரவுடன் ஆட்சிப்பீடமேறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நல்லாட்சி இன்னமும் போசாக்குக் குறைந்த குழந்தையின் நிலைமையிலேயே உள்ளது.

இதற்கு மேலாக முன்னாள் ஆட்சியாளர்கள் மீது எடுக்கப்படுகின்ற சட்ட நடவடிக்கைகளில் ஓர் உறுதித்தன்மை இல்லாமையும் நல்லாட்சியின் பலவீனமாகும்.

இது ஒரு புறம் இருக்க, மக்களை தம் பக்கம் ஈர்க்கக்கூடியதான எந்தச் செயற்பாடும் நல்லாட்சியில் வேகப்படுத்தப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்கு முடிவு கட்டுவதில் தமிழ்மக்களின் வாக்குகள் கணிசமான செல்வாக்கைச் செலுத்தியிருந்ததாயினும் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதில் நல்லாட்சி எதைச் செய்து விட்டது என்றால் எதுவுமேயில்லை என்பது தான் பதிலாக அமையும்.

## நல்லாட்சிக்கு ஆபத்து

ஆக, வடக்கு மாகாணத்தின் ஆளுநராக இருந்த ஜீ.ஏ. சந்திரசிறியை அந்தப் பதவியிலிருந்து நீக்கியதைத் தவிர வேறு எதுவும் உருப்படியாக நடந்ததாகவில்லை.

தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய இராணுவ முகாம்களை அகற்றுங்கள் என்று வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அடிக்கடி கோரிக்கை விடுக்கின்ற போதிலும் இராணுவ முகாம்களை அகற்றுவதில் நல்லாட்சிக்கும் உடன்பாடில்லை என்பதை உணரமுடிகின்றது.



நல்லாட்சியில் தமிழ் மக்களின் உரிமைகள் கிடைக்கப்பெறும் என்ற நம்பிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையிடம் வலுவாக இருந்த போதிலும் இராணுவ முகாம்கள் அகற்றப்படாமை, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமை, காணாமற்போனவர்கள் தொடர்பில் ஒரு இறுதி முடிவுக்கு வராமை போன்ற விடயங்கள் நல்லாட்சியின் அசமந்தத்தத்தைக் காட்டுகின்றன.



இந்த அசமந்தம் அவர்கள் தமிழ்மக்கள் தானே என்பதால் ஏற்பட்டதாகக் கூட இருக்கலாம். ஏனெனில் இனப்பிரச்சினைக்கான தீர்விலும் தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் நல்லாட்சி சொல்லுகின்ற சாட்டுப் போக்கு, மகிந்த ராஜபக்ஷ தரப்பு எதிர்க்கும் என்பதாகும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பு எதிர்க்கும் என்பதற்காக இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் இழுத்தடிப்புச் செய்யும் போது அது மகிந்த தரப்பு வலுவடைவதற்கு வழிவகுக்கும் என்பதுடன் நல்லாட்சிக்கு எதிராக சிங்கள மக்கள் அணிசேரவும் வாய்ப்பாகும்.

உண்மையில் விடுதலைப் புலிகளை தோற்கடித்த மகிந்த ராஜபக்ஷவுக்கு சிங்கள மக்களிடம் இருக்கக்கூடிய செல்வாக்கைச் சரிக்க வேண்டுமாயின் அதற்கான ஒரே ஆயுதம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதாகும்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த மகிந்த ராஜபக்ஷவின் தோல்வி என்பது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணத்தவறியமைதான்.

தன் தோல்விக்குப் பின்னர் மகிந்த ராஜபக்ஷ இந்த உண்மையை உணர்ந்திருந்தார். அதனால் நான் சில தவறுகளை செய்துவிட்டேன் என்று அவர் அடிக்கடி கூறிக்கொண்டார்.

இந்த உண்மைகளின் மத்தியில் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்னால் ஏற்படாத போது அதனை ஜனாதிபதி மைத்திரி தரப்புச் செய்துவிடக்கூடாது என்பதில் மகிந்த ராஜபக்ஷ அணி மிகத்தீவிரமாக இருப்பது ஏற்புடையதே.

இந்த மனித மனதிற்குட்பட்ட சமாச்சாரங்கள் வென்றெடுக்கப்படவேண்டும். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளைப் போரில் வென்றால், இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டு இலங்கைத் தீவில் இன ஒற்றுமையை ஏற்படுத்தினார் என்ற பெருமைக்கு ஆளாக வேண்டும்.

அப்போதுதான் இந்த நாட்டில் மூவின மக்களின் நன்மதிப்பையும் நல்லாட்சியினர் பெறமுடியும். இதைவிடுத்து மகிந்த ராஜபக்ஷவின் போர் வெற்றி மட்டுமே இந்த நாட்டில் வெற்றியாகத் தெரியுமாயின் அது பெரும்பான்மை இன மக்களுக்கு ஆறுதலைக்கொடுக்க, அம்மக்களின் மனநிலை மகிந்தவுக்கான ஆதரவைத் தொடர்ந்து தக்கவைப்பதாக இருக்கும்.

எனவே மகிந்தவுக்கான சிங்கள மக்களின் ஆதரவை முறியடித்து இந்த நாட்டில் வாழும் அனைத்து இன மக்களினதும் பேராதரவைப் பெறும் யுக்தியை நல்லாட்சி கடைப்பிடிக்க வேண்டும். அதற்கான ஒரே வழி இனப்பிரச்சினைக்கான தீர்வுதான்.

இருந்தும் ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான நல்லாட்சி மகிந்த தரப்பின் எதிர்ப்பைச் சமாளித்து தனது காலத்தை ஓட்டுவது என்ற நிலைப்பாட்டில் அசைவதைக் காணமுடிகின்றது.

இதற்கு சர்வதேசமும் முண்டு கொடுப்பதுதான் நல்லாட்சிக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற நினைப்பை தோற்றுவிக்கின்றது.

ஆம், இலங்கை விவகாரத்தில் தலையிடும் வெளிநாடுகள் மகிந்தவின் ஆட்சி இலங்கையில் இல்லாமல் இருந்தால் அதுபோதும் என்று நினைக்கின்றன. இந்த நினைப்பை நல்லாட்சிக்கும் தெரிவிக்கின்றன.

அதாவது இலங்கையில் மகிந்தவின் ஆட்சியே பிரச்சினைக்குரியது. அந்த ஆட்சி இப்போது அகற்றப்பட்டு விட்டது. இனி மைத்திரியின் ஆட்சியை நிலைக்க வைப்பதுதான் முக்கியம். இனப்பிரச்சினைக்கான தீர்வெல்லாம் இரண்டாம் கட்டம் என்ற நிலைப்பாட்டில் அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகள் இருப்பதால், தென்பகுதியில் மகிந்தவுக்கான ஆதரவு வலுக்கிறது.

இந்த வலு உண்மைதான் என்று நினைக்கும் அளவில் நாட்டில் ஏற்பட்ட மின்சாரத் தடை மற்றும் கொழும்பு சாலாவவில் ஏற்பட்ட ஆயுதக்கிடங்கு வெடிப்பு என்பன அமைந்துள்ளன எனலாம்.

விதுரன்




# நாவினால் சுட்ட வடு

ஒரு முன்கோபக்காரப் பையன் இருந்தான். முணுக்கென்றால் அவனுக்குக் கோபம் வரும்.

கோபம் வந்தால் தலைகால் தெரியாமல் வாய்க்கு வந்த படி வயது வரம்பில்லாமல் எல்லோரையும் பேசி விடுவான். பின்னர் அவர்களிடம் வருத்தப் படுவான்.

நாளடைவில் அவனை சுற்று வட்டாரத்தில் பலருக்கு இதனாலேயே பிடிக்காமல் போனது. அவனைத் தவிர்க்க ஆரம்பித்தார்கள். பையனுக்குத் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று தோன்றினாலும் எப்படி என்றுதான் தெரியவில்லை.

அவனுடைய அப்பா பொறுத்துப் பொறுத்து பார்த்து விட்டு ஒரு நாள் அவனிடம் ஒரு வாளி நிறைய ஆணிகளையும் ஒரு சுத்தியலையும் கொடுத்தார்.

ஒவ்வொரு முறை ஆத்திரப்படும் போதும் சம்பந்தப்பட்டவர்களைத் திட்டுவதைத் தவிர்த்து விட்டு வீட்டுக்குப் பின்னால் உள்ள மர வேலியில் ஒரு ஆணியை ஆத்திரம் தீரும் வரை அறைந்து ஏற்றி விடும் படி அறிவுரைத்தார்.

முதல் நாள் வேலியில் சுமார் 50 ஆணிகளை அறைந்து ஏற்றினான். நாட்கள் செல்லச் செல்ல அவனைக் கோபமூட்டுபவர்கள் முன் வன்மையாகப் பேசுவதைக் கட்டுப் படுத்தக் கற்றுக் கொண்டான். கோபம் வந்தால்தான் உடனே ஆணி அடிக்கப் போக வேண்டுமே!

நாளடைவில் வாளியையும் சுத்தியலையும் எடுத்துக் கொண்டு வேலிப் பக்கம் போகுமுன் கோபவெறி குறைந்து போய், வேலியில் ஆணி அறைவது குறையத் தொடங்கியது. சில நாட்களில் வேலியில் ஆணி அடிக்க வேண்டிய தேவையே அவனுக்கு இருக்கவில்லை.

அப்பாவிடம் போய் விபரத்தைச் சொன்னான். அவர் உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவனிடம் ஒரு ஆணி பிடுங்கும் கருவியைக் கொடுத்து வேலியில் அவன் அடித்த ஆணிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கச் சொன்னார். அனைத்தையும் பிடுங்க அவனுக்கு முழுதாக ஒரு நாள் பிடித்தது.

எல்லா ஆணியையும் பிடுங்கிய பிறகு அப்பாவும் மகனும் வேலியை பார்க்கப் போனார்கள். அப்பா வேலியில் ஆணிகளைப் பிடுங்கிய இடத்தில் இருந்த வடுக்களை மகனுக்குக் காட்டி "கோபம் வந்தால் அறிவிழந்து சொல்லும் சுடுசொல்லும் இந்த ஆணியைப் போலத் தான். ஆணியைப் பிடுங்குவது போல் நீ பேசியதற்கு மன்னிப்புக் கேட்டாலும், அந்த சொல் தைத்த இடத்தில் உள்ள வடு இந்த ஆணி ஏற்படுத்திய வடுவைப் போலவே மறைவது மிகக் கடினம்" என்று அவனு க்கு எடுத்துக் கூறினார்.

மகனும் கருத்தை நன்றாக உணர்ந்து திருந்தி ஊர் போற்றும் வகையில் வளர்ந்து வாழ்க்கையில் வெற்றிகள் பல பெற்றான்.



# இலங்கை பற்றி அறிவோம்

## இலங்கையின் முக்கிய நிலையங்கள்

1. வனவிலங்குச் சரணாலயம் - வில்பத்து, யால, உடவளவை, றுகுணு, ினுகல
2. பருத்தி ஆராய்ச்சி நிலையம் - அம்பாந்தோட்டை
3. உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் - நுவரெலியா
4. சீமெந்து தொழிற்சாலை - புத்தளம், காலி
5. ஓட்டுத் தொழிற்சாலை - அம்பாறை
6. ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம் - நாவின்ன
7. அரசினர் சுதேச வைத்தியசாலை - இராஜகிரிய
8. பறவைகள் சரணாலயம் - முத்துராஜவெல, குமண, பூந்தல
9. குஷ்டரோக வைத்தியசாலை - மாந்தீவு மட்டக்களப்பு
10. கலாசார முக்கோண வலயம் - கண்டி, அநுராதபுரம், பொலநறுவை
11. சீனித் தொழிற்சாலை - கந்தளாய்
12. காரீயச் சுரங்கம் - போகலை
13. புற்றுநோய் வைத்தியசாலை - மகரகம
14. துறைமுகங்கள் - கொழும்பு, திருகோணமலை, காலி, அம்பாந்தோட்டை, காங்கேசன்துறை
15. காகிதத் தொழிற்சாலை - வாழைச்சேனை
16, ஏற்றுமதிப் பொருட்கள் - தேயிலை, இறப்பர், கறுவா
17. மிருகக்காட்சிச்சாலை - தெஹிவளை

## இலங்கையின் தேசிய சின்னங்கள்

1. இலங்கையின் தேசிய மரம் - நாகமரம்
2. இலங்கையின் தேசியப் பறவை - காட்டுக்கோழி
3. இலங்கையின் தேசிய மிருகம் - யானை
4. இலங்கையின் தேசிய மலர் - அல்லி

## இலங்கை எத்தனை மாகாணங்களாக பிரிக்கப்பட்டுள்ளன?
## 9 மாகாணங்கள், அவையாவன

வடக்கு மாகாணம்
கிழக்கு மாகாணம்
வடமத்திய மாகாணம்
வடமேல் மாகாணம்
மத்திய மாகாணம்
சப்ரகமுவ மாகாணம்
ஊவா மாகாணம்
தென் மாகாணம்
மேல் மாகாணம்










தெறி, வேதாளம் இதில் சிறந்த படம் எது?

அரச உத்தியோகம் சோதனை எழுதித் தான் எடுக்கணுமாமோ?

ரகுமானா இளையராஜாவா சிறந்த இசையமைப்பாளர்?

**கஸ்மிகன் — வரணி**

**எனக்கு தனிய ரூமுக்கு போக பயமா இருக்கே?**

ஓ... அப்படியா இந்த வருத்தத்தை வைத்திருக்கக் கூடாது.. உடனடியாக அம்மா அப்பாவிடம் சொல்லுங்கள் அவர்கள் பரிகாரம் தேடுவார்கள்.

**எஸ்.என்.நந்தகுமார்**

**வெளிநாட்டிலிருந்தெல்லாம் இங்கே வருகிறார்கள். ஆனால் நாட்டுப் பிரச்சினை தீரவில்லையே?**

என்ன செய்ய. அவர்களின் ஆரம்பம் எல்லாம் பலமாக இருக்கிறதுஇ இங்கே வந்து ஒரு கோப்பை தேநீர் குடித்ததும் அத்தனையும் மறந்து வெறும் விசிட்டுடன் முடிந்து விடுகிறது. தமிழன் பாவப்பட்ட இனம் என்பதற்கு இதுதான் நல்ல உதாரணங்கள்.

**ரஜி — வல்வெட்டித்துறை**

**ரகுமானா இளையராஜாவா சிறந்த இசையமைப்பாளர்?**

ஆயிரம் படங்கள் கடந்த அந்த மகானிடம் தான் ஏ.ஆர்.ரகுமானே படித்தாரப்பா. ரகுமான் இசைப்புயல் என்றால் இளைய ராஜா இசைஞானி. எந்தப் புயலையும் அடக்கி ஆளும் வல்லமை அந்த ஞானியிடம் உண்டு.

**தனரஞ்சன் — குரும்பசிட்டி**

**சன்னிலியோன் பற்றி?**

நானும் என் பொண்டாடியும் ஒற்றுமையா இருக்கிறது உனக்கு கொஞ்சமும் பிடிக்கல போல. பாவி பயலே.

**அபி — நெல்லியடி**


**இன்றைய யாழ் மாணவர்கள் நிலை?**

கற்றோர் கண்ணுடையோர்
கல்லாதோர் முகத்திரண்டு
புண்ணுடையோர்

**கிருஷா — வரணி**

**அரச உத்தியோகம் சோதனை எழுதித் தான் எடுக்கணுமாமோ?**

ஓ அது உண்மைதான். ஆனால் O/L ல் பெயிலாப் போனதுகள் கூட இப்ப சமூக தளங்களில் "பாசை" பற்றிப் பேசுதுகளே. எம் தலையை எங்கு கொண்டுபோய் முட்ட.



**தர்சன் — நாவற்காடு**

**ரீக்குப் போடாத சுகரையும் சைட் அடிக்காத பிகரையும் பற்றி?**

சுகர் போடாமல் ரீயைக் குடிக்க முடியாது. சைட் அடிக்காத பிகரை இனிமேல் கரம்பிடிக்க முடியாது.

**கரன் — கரணவாய்**

**பிரபாகரனின் மரண அறிக்கை பற்றி?**

இந்த கேள்விக்கு பதில் எழுத நான்காம் மாடியும் அதன்பின் என் பொண்டாட்டி பிள்ளைகளும் கண்ணில் தெரிகிறது.

**ஜி.வாசன் — அல்வாய்**

**ஜப்பானுக்குச் சென்ற அமெரிக்க ஜனாதிபதி அணுகுண்டில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தினாரே?**

கால ஓட்டம் மிருகங்கள் எல்லாம் மனிதராகி விட்டன. ஆனால் இங்கு மிருகங்கள் இன்னும் மிருகங்களாகவே இருக்கின்றன.

**பிந்து — கெருடாவில்**

**படிச்சுக் கொண்டே பாடல் கேட்பது சரியா?**

பள்ளிக்கூடத்தில் கேட்கப்படும் கேள்விகள் பாடல்களில் இருந்து கேட்கப்படுகிறது என்றால் தாராளமாகக் கேட்கலாம்.

**வருண் — வல்வெட்டித்துறை**

**தெறி, வேதாளம் இதில் சிறந்த படம் எது?**

அஜித்தின் திரைப் பயணத்தில் வேதாளமும் விஜயின் திரைப் பயணத்தில் தெரியும் சிறந்தது அவ்வளவுதான்.

**சூர்யா — உடுப்பிட்டி**

**பார்த்ததும் பார்க்காத மாதிரி இருக்கும் பெண்களைப் பற்றி?**

நம்பவே நம்பாதீங்கடா. கடைசில நாமம் பூசிடுவாளுங்க.




**பாணு — உடுப்பிட்டி**

**நீங்கள் இதுவரை செய்த காரியங்களில் மிகவும் மகத்தான காரியம் எது?**

கடவுளிடமே எதிர்த்து கேள்வி கேட்டது. ஒரு நாள் நான் பஸ்ஸில் ஏறுவதற்காக ஓடிப்போனேன். ஒரு குரல் "ஏறாதே ஏறாதே" என்றது. நான் ஏறவில்லை. அடுத்த கணமே அந்த பஸ் வெடித்துச் சிதறியது. அடுத்து ஒரு கடைக்குள் போக அங்கேயும் "போகாதே போகாதே" என்ற குரல் நான் போகவில்லை அடுத்த கணமே கடை தீப்பற்றி எரிந்தது. யாரது என்னைத் தடுப்பது என கேட்டேன் என்ன அதிசயம். கடவுள் எனக்குக் கடுப்பாகி விட்டது. உடனே கோபத்தோடு கடவுளைப் பார்த்துக் கேட்டேன் "ஆமா என் கல்யாணத் தன்று நீ எங்கே போனாய்"? என.

**கஜன் — திருவாதணி**

**A/Lலில் வரும் காதல் பற்றிச் சொல்லுங்கள்?**

A/L வினாத்தாளில் கேட்ட கேள்வி ஒன்றாவது உன் மனதில் நிற்கிறதா? அதேபோல் தான் இந்தக் கருமமும்.

**நளாயினி — கோண்டாவில்**

**உங்களுக்கு ஒரு தங்கச்சி இருந்தா அவா எப்படி இருக்கணும் என்று எதிர்பார்ப்பீங்கள்?**

தாயையும் தமிழையும் மதிப்பாள் தன் குணத்தாலே மற்றவரை கவர்ந்திருப்பாள். ஊரையும் பேரையும் எடுப்பாள் அவர் உரிமைக்காய் என்றும் குரல் கொடுப்பாள். உண்மையை மறைக்கும் கிரீம் பூசாள் தன் உயிரிலும் மேலாய் கற்பை மதிப்பாள். வந்தவர்க்கெல்லாம் உணவளிப்பாள். பெற்ற வீட்டிலே செல்லமாய் இருப்பாள். புகுந்த வீட்டின் வளர்ச்சிக்காய் உழைப்பாள். என்றுமே இந்த அண்ணனுக்கு தங்கையாய் திளைப்பாள்.

**பிரியா — கொக்குவில்**

**உங்கள் மனைவி எப்படியென்று சொல்லுங்கள்?**

திருமணமாகி ஒரு மாதமாகவில்லை. எங்களுக்குள் சுமார் 55 சண்டைகள். எனக்கு சீ... என்று விட்டது. ஒரு சுவாமியிடம் போய் என் பொண்டாட்டி என்னுடன் சண்டை பிடிக்கிறாள் என்றேன். அவர் சிரித்தபடியே சொன்னார். எல்லாவற்றிலும் நீ வெற்றிபெற நினைக்கிறாய் உழைக்கிறாய். உன் பொண்டாட்டியிடமும் வெற்றிபெற நினைக்கிறாய். நீ வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமென்றால் உன் பொண்டாட்டியிடம் தோற்றுவிடு. உன் எல்லா வெற்றிக்குப் பின்னும் அவள் துணையாய் நிற்பாள் என்றார். அவளிடம் தோற்றேன். வாழ்க்கையில் வென்றேன்.

# கவிதைக் கலசம்



## தொடரும் பயணம்

வழியெங்கும் சோலை
அவள் செல்லும் பாதை
தினந்தோறும் நான் நடந்து
தேய்ந்து போனதே-அந்த
சாலை
காதலையும் சொல்லவில்லை
காலத்தையும் வெல்லவில்லை
பாதணியும் தேய்ந்து
பார்வையும் மங்கி
இன்றுவரை தொடர்கிறதே
என் காதலைச் சொல்லாமல்

**ஏ.வி.கே.பேர்லின்**
**ஜேர்மன்**

## கவியேந்துகிறேன்

காங்குல் கண்மணியே-என்
கவி கேளாயோ- என் மனக்
கவலை தீராதோ- என்
காதலும் அவள் கரம் சேராதோ...
அவளைக் கண்ட அக்கணம்
பறிபோனது என் மனம்
அவள் நினைவு தினம்- நீங்கவில்லை
அவள் அழகு வதனம்- அவள்
புன்னகைக்குப் புதுதேசம்-அவள்
புருவங்களில் புரியா மொழி வாசம்
என் காதலில் இல்லை வேசம்- காத்திருப்பேன்
அவளுக்காய் மாறா பாசம்
அவள் திருடிச் சென்ற என் இதயம்
தீபமானது என்னுள் காதல் உதயம்
அவள் வதன சூரிய உதயம்
வரைகிறேன் அவளே கவிநயம்
திண்டாடுது என் இரவு நிதம்
வந்தாடுது உன் நினைவு தினம்
சென்றெழுதுறேன் பல கவிகள் விதம்
சேர்க்கிறேன் அதை அவள் கரம்
தந்திடுவாளோ அவள் காதல் வரம்

**ஞா.கட்டைக்கவிதன்**
**நெடுந்தீவு**

## விடை கேட்கின்றேன்

எந்தன் பள்ளித் தோழியே
பாரமான மனத்தோடு
கேட்கின்றேன்
நம் அழகிய ஊர்
எங்கே...?
நாம் இருவரும் நடைபோடும்
பாதை வெளி எங்கும்
பூத்து நிற்கும்
கொடிமல்லிகைச் செடி எங்கே?
ஆடிப்பாடிய
பள்ளி முற்றம் எங்கே?
பச்சைக் கம்பளம்
விரித்திருந்த
ஊர்வெளி எங்கே?
அந்திசாயும் நேரம்
நாம் கூடியிருந்து கதைக்கும்
முற்றத்து மரமுந்திரிகைக்கு அருகே
பாடும் குயில் இனம் எங்கே?
மின் விளக்குகள்
ஒளிர்ந்த கிராமத்தில்
இன்று மின்மினிப்பூச்சிகள்
கூட பறக்கவில்லையே
அன்றொரு நாள்
எனது பிறந்தநாள் அன்று
சுபாஸ் சந்திரபோஸின்
வாழ்க்கை வரலாற்றுப்
புத்தகத்தைப் பரிசளித்த
அந்தத் தோழன் எங்கே?
தோழியே
நாங்கள் மௌனிகள்
ஆகிவிட்டோம்...!

**ஆ.முல்லைதிவ்யன்**

## இது நியதி

எம் சகோதர உறவுகளே
குண்டு வெடிப்பென்றபோது
எம் நெஞ்சு வெடித்தது
கந்தக வாசனை
நாசி அடைத்துவிட
குண்டுச் சிதறல்கள்
குசுனிவரை வந்துவிழ
உயிரை கையில் பிடித்தபடி
பாதுகாப்பு தேடினீராமே
அன்பான எம் உறவுகளே!
இப்போது வன்னியை
சிந்தித்துப் பாருங்கள்
இதைவிட மடங்குகள் ஆயிரம்
உயிருக்காய் எம் உறவுகள்
எப்படி கதறியிருப்பர்
கடிகாரம் ஒரே போல் ஓடும்
காலம் அப்படியல்ல
இது கடவுளின் ஆணை
இதைப் புரிந்து கொள்ளுங்கள்
ஐயகோ! இறைவா
இனியொரு முறை எமக்கு
இழப்புக்கள் வேண்டாம்
நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்
நடப்பவை நல்லவையாக நடக்கட்டும்
புரிந்துணர்வு வந்துவிட்டால்
எல்லாம் புதுமை பெறும்
அமைதி நிலவும்
சமாதானம் சாத்தியமாகும்
புரிந்து கொள்ளுங்கள்
உணர்வுகளை
அந்த உணர்வுதான் புரிந்துணர்வு!

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 305



## கடமை

இயற்கையின் அருட்செல்வமாகிய
அன்பின் குழந்தையை
ரோசா மலரின் மென்மையாகிய
அழகிய குழந்தையை
பாசமுத்தமிடும் தாயே!
உன் சேயை தினமும்
பாலூட்டி பக்குவமாய்
வளர்த்திடுவாய்!
ஆரோக்கியம் பேணிடுவாய்!
கண்காணிப்பு கண்ணிலும்
கடமை, கருமம், கையிலும்
அன்பு உணவையும் ஊட்டிடுவாய்!
கல்வி, சுய கல்வி உணர்த்திடுவாய்!
பண்பின் தொழில் காட்டிடுவாய்!
பருவத்தே பயிரும் செய்து
பல்லாண்டுகள் வாழ வைத்திடுவாய்!
பெற்றோர் உம் ஆசியுடன்!
இறைவன் இயற்கையின் சாட்சியுடன்!

சி.சுகிர்தமலர்

## முத்தம்

தன் குஞ்சு பொன்குஞ்சாய்
தந்துவிடும் முத்தமிது
தாய்ப்பாசம் உணராத
தறுதலையாய் மாறாமல்
தமிழுக்காய் தந்துவிடு
உன் முத்தம்

இளவரசு
ஒட்டுசுட்டான்

## தேடிய உள்ளம் நீயே

உறவாடி உயிராகி இருந்த
என் உள்ளத்தில்
உன் நினைவு உறங்காமல்
தவிக்கின்றதம்மா!
இயற்கை அன்னை பிரசவித்த
இப்பாரினிலே
இயற்கையின் மகளாகவே
உன்னை நேசிக்கின்றேன்
கடல் ஒருபோதும்
வற்றாதென்று உன்னை
கடலாக வர்ணித்தேன்
உயிராக நினைத்து
ஒருமுறை உன்
இருவிழியால் உன்
முகமறியா சூரியனாக இருந்த
என்னை திரும்பி
முகமறியர் சூரியனாக இருந்த
என்னை திரும்பி பாரம்மா!

வே.கோகிலன்
வரணி

## தாய்மை தவிக்கின்றது

கருவில் நெளிந்த உன்னை
கைகளில் ஏந்தி விட்டேன்
விழிநீர் வராமல்
விண்செல்லும் வரை
காத்திடுவேன்
பத்துமாதம் சுமந்து
பட்டபாடு மறந்திட
புதிதாய் பூத்த பூ போல
புன்னகை செய் போதும்

ச.ஆனந்தி
நல்லூர்

## தாய்க்குலமே

பத்து மாதம் சுமந்து
பால் பழம் ஊட்டி
பஞ்சணையில்
உறங்க வைத்து
முத்தமிட்டு மகிழும்
அன்னையே
தெய்வத்துள் தெய்வம்
அன்னைதான் தெய்வம்
என்னும் முதுமொழி
தாய்க்குலத்திற்கே உரிமை

நா.தளையசிங்கம்
கொக்குவில்

## முதல் முத்தம்

பத்துமாதம் கருவறையில்
பத்திரமாய்ப் பாதுகாத்து
பெத்து வளர்த்து ஆளாக்கிய
கண்கண்ட முதல் தெய்வம் நீதானம்மா
நாம் வாழ உனை வருத்தி நிதம்
முத்தங்கொடுத்தணைத்துச்
சித்தங்குளிர வைப்பாயே
மண்ணில் பிறந்ததும் எமக்குக்
கிடைத்த முதற்பரிசு அம்மா தந்த
அன்பு முத்தந்தானே அது எமக்கு
மறக்க முடியாத பெருஞ்சொத்து

துரை
தென்மட்டுவில்

## சாவுமணி அடிக்கட்டும்

பெற்றெடுத்த மகவை முத்தமிட்டு
பாசமழை பொழிந்து
தாய்மை உணர்வை
வெளிப்படுத்தும் தாய்க்குலமே...!
உன் அன்பும் அரவணைப்பும்
பெற்றெடுத்த பிள்ளைகள்மேல்
பாசமழை பொழிவது
தம் வனப்பான உடலையும்
மொடலான உடையையும்
கசங்க வைத்திடுமென்ற
தவறான நினைவுகட்கு
சாவுமணி அடிக்கட்டும்

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

# மௌனத்தின் தேடல் -306



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 15.06.2016ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -


# பாலைவனத்தில் கற்கள் நகரும் மர்மம் என்ன?


ரேஸ்டிராக் பிளாயா பகுதி. ஒரே சம தரையாக அமைந்துள்ளதைக் கவனிக்கவும்


பல பாறைகள் நகர்ந்துள்ளதால் ஏற்பட்ட தடங்கள் வானிலிருந்து எடுக்கப்பட்ட படம்.


ஒரு பாறை எவ்வளவு தூரம் நகர்ந்து வந்துள்ளது என்பதைக் கவனிக்கவும்.


ஒரே நேர்கோட்டில் நகர்ந்து வந்துள்ள பாறை


ஜோடியாக நகர்ந்து வந்துள்ள பாறைகள்

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தின் தென் பகுதியில் ஓரிடத்தில் பாறைகள் தாமாக இடம் பெயர்ந்து செல்கின்றன. 100 ஆண்டுகளுக்கும் மேலாக இது பெரும் புதிராக இருந்து வந்துள்ளது. அவை இடம் பெயரும் மர்மத்துக்கு இப்போது விடை கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பாறைகள் இவ்விதம் இடம் பெயரும் இடத்தின் பெயர் ரேஸ்டிராக் பிளாயா என்பதாகும். இது மரணப் பள்ளத்தாக்கு எனப்படும் பாலைவனத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. பெயர் தான் ரேஸ்டிராக்கே தவிர இங்கு ரேஸ் எதுவும் நடப்பதில்லை.

அதை ஒரு பாலைவனம் என்றும் சொல்லலாம். ஆனால் மணல கிடையாது. என்றோ வற்றிப்போன ஏரியின் படுகை என்றும் வர்ணிக்கலாம். கண்ணுக்கெட்டிய தூரம் வரை செடி கொடி கிடையாது. புல் பூண்டு கிடையாது. விலங்குகளும் இல்லை. மனித நடமாட்டமும் கிடையாது.

ஆனால் இங்குமங்குமாக சிறிய பாறைகள் கிடக்கின்றன. வெடிப்பு விட்ட தரையில் அந்தப் பாறைகள் சட்டென்று கண்ணில் புலப்படும். பல பாறைகளின் எடை சுமார் 13 கிலோ. 300 கிலோ எடை கொண்ட பாறைகளும் உண்டு.

ஓரிடத்தில் கிடக்கின்ற பாறை பின்னர் பார்த்தால் இடம் மாறியிருக்கும். அந்தப் பாறை நகர்ந்து சென்ற தடம் தெரியும். இவை "கால் முளைத்த" பாறைகள். ஒன்றல்ல பல பாறைகள் நகர்ந்து சென்ற தடம் தெளிவாகத் தெரிகிறது. தடத்தை வைத்துச் சொல்வதானால் சில பாறைகள் 1500 அடி அளவுக்கு நகர்ந்துள்ளன.

அந்தப் பாறைகளை யார் நகர்த்தியிருப்பார்கள்? காற்றில் உருண்டு சென்றிருந்தால் இப்போது தெரிகின்ற தடம் ஏற்பட வாய்ப்பில்லை. யாராவது கயிற்றைக் கட்டி இழுத்துச் சென்றால் மட்டுமே பாறை நகர்ந்து சென்ற தடம் ஏற்பட முடியும்.

அப்படி யாரேனும் இழுத்துச் சென்றிருந்தால் அவரது காலடித் தடமும் மண்ணில் பதிவாகியிருக்கும். ஆகவே பாறைகள் தானாகத் தான் நகர்ந்து சென்றிருக்க வேணடும். அல்லது ஏதோ ஒன்று அவற்றை நகரச் செய்திருக்க வேண்டும்.

1900 ஆம் ஆண்டிலிருந்தே இந்த மர்மம் குறித்து பல்வேறு கருத்துகள் கூறப்பட்டு வந்துள்ளன. எதிலும் மர்மத்தைக் காண விரும்புகிறவர்களோ இது வேற்றுலக வாசியின் வேலையாக இருக்கலாம் என்று கூறினர்.

ஆனால் இந்தப் பாறைகள் நகருவதை கடந்த காலத்தில் யாருமே நேரில் கண்டதில்லை. கமராவிலும் இது பதிவாகியது இல்லை.

இந்த நிலையில்தான் நிபுணர் ஜேம்ஸ் நாரிஸ் அங்கு தானியங்கி கமராவைப் பொருத்தி விட்டு வந்தார். அது விட்டு விட்டு அவ்வப்போது படம் எடுக்கின்ற கமராவாகும்.

அந்த கமரா சரியாக செயற்படுகிறதா என்று சோதிக்க அவர் ரேஸ்டிராக் பிளாயாவுக்குச் சென்றார். அவருடன் ரிச்சர்ட் நாரிஸூம் சென்றார்.

அங்கு அவர்கள் ஒன்றல்ல சுமார் 60 பாறைகள் தாமாக நகர்வதைக் கண்ணால் கண்டனர். அவை நகர்ந்த போது இலேசான சத்தமும் கேட்டது. பாறைகளை நகர்த்தியது வேறு எதுவுமல்ல. நீரில் மிதக்கின்ற பனிக்கட்டி வில்லைகள்தான். தண்ணீர் எங்கிருந்து வந்தது?

பாறைகள் எப்படி நகருகின்றன என்பதை பின்னர் ஜேம்ஸ் நாரிஸ் விபரித்தார்.

பாறைகள் நகருவதில் பெரிய மர்மம் எதுவுமில்லை. அந்த இடத்தில் மழை என்பது அபூர்வம். வருடத்தில் இரண்டு அங்குலம் மழை பெய்தால் உண்டு. குளிர் காலத்தில் இப்படி மழை பெய்தால் களிமண் பூமி என்பதால் இரண்டு மூன்று சென்றி மீற்றர் அளவுக்குத் தண்ணீர் தேங்கி நிற்கும்.

அது கடும் குளிர் வீசுகின்ற பகுதியாகும். ஆகவே தேங்கும் தண்ணீரின் மேற்புறம் உறைந்து போகும். உறைந்த பனிக்கட்டி சில்லு சில்லுகளாக நீரில் மிதக்கும். தேங்கும் தண்ணீர் குறைவு என்பதால் பாறைகளின் மேற்புறம் தண்ணீருக்கு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும்.

அந்தப் பகுதியில் குளிர் காலத்தில் தென்மேற்கிலிருந்து வடகிழக்கு நோக்கி மணிக்கு சுமார் 140 கிலோ மீற்றர் வேகத்தில் கடும் காற்று வீசும். இதன் விளைவாக மிதக்கும் பனிக்கட்டி சில்லுகள் பாறைகள் மீது மோதும். இவை மெல்லியவைதான். ஆனால் கெட்டியானவை.

தேங்கும் தண்ணீர் காரணமாக நீருக்கடியில் உள்ள களிமண் தரை சறுக்கிச் செல்வதற்கு உகந்த அளவில் இருக்கும். கடும் காற்று பனிக்கட்டி சில்லுகளைத் தாக்கும் போது அவை பாறை மீது மோத பாறைகள் சறுக்கியபடி நகருகின்றன. காற்று விட்டுவிட்டு அடிக்கும் போது ஒவ்வொரு தடவையும் பனிக்கட்டி சில்லுகள் மோதும்போது பாறை சில மில்லி மீற்றர் நகரலாம்.

பின்னர் வெயில் காரணமாக தண்ணீர் ஆவியாகி விடும். பாறைகள் நகர்ந்த இடம் காய்ந்து தெளிவான தடமாகத் தெரியும்.

குளிர்காலமாக இருக்க வேண்டும். மழை பெய்ய வேண்டும். மிதக்கும் பனிக்கட்டி சில்லுகள் இருக்கவேண்டும். கடும் காற்று வீச வேண்டும். இப்படியாக பல நிலைமைகளும் ஒன்று சேரும் போது தான் பாறைகள் நகருகின்றன.


இந்தப் பகுதியானது சிறிது கூட மேடுபள்ளம் இன்றி நூல் பிடித்தது போல சமதரையாக இருப்பதும் பாறைகள் நகருவதற்குக் காரணமாக உள்ளது.

பாறைகள் நகரும் சூழ் நிலைகள் உண்டானாலும் அந்தத் தடவை மிகச் சிறிது தூரமே நகரலாம். வேறு சில சமயங்களில் அதிக தூரம் நகரலாம். அல்லது தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பாறைகள் அதே இடத்தில் காணபபடலாம்.

ஆகவே பாறைகள் இடம் பெயருவது என்றோ எப்போதோ நடைபெறுவதாக இருக்கிறது. ஆகவேதான் இது யார் கண்ணிலும் படாமல் இதுவரை மர்மமாக இருந்து வந்துள்ளது.

# ஆரோக்கியம் தரும் பழங்கள்

**சோர்வை நீக்கும் மாதுளம்பழம்**



அலுவலக மற்றும்வீட்டு வேலைகளினால் உடலும் மனமும் சோர்வடைந்து இருக்கிறதா? அன்றாட வேலைகளை செய்ய முடியாமல் அசதியாக இருக்கிறதா? கவலை வேண்டாம்.

இரு வாரங்களுக்கு தினமும் மாதுளை பழச்சாறு அருந்தி பாருங்கள். பிறகு சொல்வீர்கள். இரு வாரங்களுக்கு முன்னும் பின்னும் இருந்த மாற்றங்களை நன்றாக உணரக் கூடும். இவை உடலை சுறுசுறுப்பாக்கி விடும். மூளையை தூண்டி, இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்யும். மன அழுத்தத்தை காணாமல் போகச் செய்யும்.

**தொப்பையை குறைக்கும் அன்னாசி**



வயிற்றில் தொப்பை மட்டும் குறைய அடம்பிடிக்கிறதா? இதனை முயற்சி செய்து பாருங்கள். ஒரு பாத்திரத்தில் தேவையான அளவு நீரினை எடுத்து, அதில் ஒரு அன்னாசிப் பழத்தை துண்டுகளாக்கி போடுங்கள். கூடவே ஓமப் பொடி 4 ஸ்பூன் போட்டு நன்றாக கலந்து, கொதிக்க விடுங்கள்.

நன்றாக அன்னாசி வெந்ததும் அடுப்பை அணைத்து அந்த நீரினை இரவு முழுவதும் அப்படியே விடுங்கள். காலை அந்த நீரினை வடிகட்டி குடிக்க வேண்டும். இவ்வாறு 10 நாட்கள் செய்தால், தொப்பை குறைந்து ஸ்லிம்மாகி விடும்.

**எலும்பு பலமாக பப்பாளி**



பப்பாளிக் காயில் வரும் பால் வாய்ப்புண்ணிற்கு மருந்தாக போடலாம். பப்பாளி காயினை கூட்டாக செய்து சமைத்தால், குண்டான உடல் மெலியும். பப்பாளி பழத்தினை குழந்தைகளுக்கு கொடுத்தால், எலும்பு, மற்றும் பல் வளர்ச்சி பலம்பெறும். அதேபோல் சருமத்தில் ஏற்படும் சுருக்கங்கள் குறையும். குடலிலுள்ள பூச்சிகளை அழிக்கும்.


**இதயம் சீராக இயங்க சீதாப்பழம்**



சீதாப்பழம் சாப்பிட்டு வந்தால் இதயம் சீராக இருக்கும். இதய சம்பந்தமான நோய்கள் தாக்காது என அமெரிக்காவில் நடந்த ஆராய்ச்சியில் உறுதிப்படுத்தியிருக்கின்றனர். ஆரம்ப நிலையில் உள்ள காசநோய்க்கு சீதாபழம் அருமையான பலனைத் தருகிறது.

காசநோயை குணப்படுத்தும் மருத்துவ பலன்களைக் கொண்டுள்ளது. அறுவை சிகிச்சைக்கு பின் அடிக்கடி சீதாப்பழங்கள் உண்டு வந்தால், உள்ளுறுப்புகளில் இருக்கும் காயங்கள் விரைவில் குணமாகிவிடும்.

**இளமையை தரும் சப்போட்டா**



சப்போட்டா சருமத்திற்கு ஈரப்பதம் அளிக்கிறது. மேலும் சுருக்கங்கள் வர விடாமல் தடுக்கிறது. மேலும் தினமும் சப்போட்டா பழம் சாப்பிட்டால் இரத்த விருத்தியாகி, அனிமீயாவை போக்குகிறது.

அதுபோல் என்னதான் நிறைய சாப்பிட்டாலும், ஒட்டிய கன்னங்களுடன் ஒல்லியாக இருப்பவர்கள் தொடர்ந்து சப்போட்டாவை சாப்பிட்டால் பூசிய மேனியுடனும், அப்பிள் போன்ற கன்னமும் பெறுவது உறுதி.


**உலர் திராட்சை**



இரத்தத்தில் ஈமோகுளோபின் அளவு குறைவாக இருக்கும்போது உலர் திராட்சையை சாப்பிட்டு வந்தால் இரத்தசோகை குணமாகும். மஞ்சள் காமாலை நோய் உள்ளவர்கள் தினசரி இரு வேளைகளில் உலர் திராட்சையை சாப்பிட்டு வர காமாலை நோய் குணமடையும்.

உலர் திராட்சைப் பழங்களை எடுத்து நன்றாக கழுவி, பசுவின் பாலில் போட்டு காய்ச்சி ஆற வைக்கவும். பின்னர் அதிலிருக்கும் பழங்களை சாப்பிட்டு, அந்த பாலை குடித்தால் மலச்சிக்கல் வராது. இதில் உள்ள ஙல்சியம் சத்து எலும்பு மற்றும் பற்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

# அலாரத்தை நிறுத்திவிட்டு தூங்குபவரா நீங்கள்?



## அன்றாடம் உங்கள் வாழ்க்கையில் நடந்து கொண்டிருக்கும் சில சம்பவங்களைப் பார்ப்போம்.

காலையில் எழுவதற்காக அலாரம் வைத்துவிட்டு அது அடித்தவுடன் நிறுத்தி விட்டு திரும்பவும் புரண்டு படுப்பவரா நீங்கள்? பெரும்பாலும் இரண்டாவது அல்லது மூன்றாவது அலாரம் அடிக்கிறபோதுதான் எழுந்திருப்பதை வழக்கமாகக் கொண்ருப் பீர்கள்-சரியா?

உங்கள் குழந்தை அழுது கொண்டு இருக்கிறது. அதன் அழுகையை நிறுத்துவதற்காக மாலையில் வரும் போது மிட்டாய் வாங்கி வருவதாக வாக்குறுதி கொடுக்கிறீர்கள். அது அழுகையை நிறுத்தி விட்டு மாலை வரை எதிர் பார்த்துக் காத்திருக்கிறது.

ஆனால் மாலை வீடு திரும்பும் போது வெறும் கையோடு திரும்புவீர்கள். சரியா?

உங்கள் மனைவி சினிமாவிற்கு செல்ல வேண்டும் என்று கேட்கிறார்.வரும் ஞாயிற்றுக்கிழமை அழைத்துச் செல்வதாக வாக்குறுதி கொடுக்கிறீர்கள். ஆனால் ஞாயிறு அன்று உங்கள் நண்பரோடு வெளியில் சென்று விடுவீர்கள் சரிதானே?

உங்கள் வாடிக்கையாளர் போனில் அழைக்கின்றார்.

உங்கள் பொருளில் ஒரு குறை இருப்பதை சுட்டிக் காண்பிக்கிறார். உடனே சரி செய்து தருவதாக வாக்குறுதி கொடுக்கிறீர்கள். ஆனால் அலுவலகத்திற்கு சென்றவுடன் அதைவிட பெரிய பிரச்சினையில் மூழ்கி இதனை மறந்து விடுகிறீர்கள்- உண்மைதானே?

இப்படி நாள்தோறும் நீங்கள் அளித்த வாக்குறுதிகளை நீங்களே பல நேரங்களில் நிறைவேற்றுவதில்லை.யோசித்துப் பாருங்கள்.நீங்கள் ஒரு முடிவை எடுக்கிறீர்கள். அந்த முடிவை நீங்களே மதிக்கவில்லை என்றால் பிறர் எப்படி உங்கள் முடிவை மதிப்பார்கள்.

இன்னும் சில வீடுகளில் கடிகாரம் 10 அல்லது 15 நிமிடம் வரை வேகமாக ஓடிக்கொண்டிருக்கும். இதைப் பார்த்தவுடன் கடிகாரம் ரிப்பியர் போல... என்று பிறருக்கு எண்ணத் தோன்றும்.

ஆனால் ஐயையோ நேரமாகிவிட்டதே என்று பதறுவதற்காக அந்த வீட்டினரே கடிகாரத்தை வேகமாக வைத்திருப்பர் என்பது விசாரித்த பின்தான் தெரியும்.

இப்படி செயற்கையான பதற்றத்தை உருவாக்கித் தான் அன்றாட வாழ்க்கையையே தள்ள வேண்டும் என்றால் பிறகு நம்மில் பலர் சுயமாக உந்துதல் பெற்று வாழ்க்கையில் எப்படி முன்னேற முடியும்?

வெற்றியாளர்கள் பிறரை நம்புகிறார்களோ, இல்லையோ முதலில் தம்மீது முழு நம்பிக்கை வைக்கிறார்கள். தாங்கள் உந்தப்படுவதற்காக அவர்கள் யாரையும் எதிர்பார்த்துக் காத்திருப்பதில்லை.

குறிப்பாக அவர்கள் சுயமாக எந்த முடிவை எடுத்தாலும் அதில் கடைசி வரை உறுதியாக இருக்கிறார்கள்.இதுவே அவர்களது வெற்றிக்கு மிகப் பெரிய காரணம்.

எழுந்திருக்க வேண்டிய நேரத்திற்கு அலாரம் வைப்பதில் தொடங்கி பிறரிடம் சொன்ன வாக்குறுதிகளைக் காப்பாற்றுவது வரை அனைத்திலும் அவர்கள் சரியாக இருக்கிறார்கள்.


ஒரு வேளை அவர்களால் வாக்குறுதியைக் காப்பாற்ற முடியவில்லை என்றால் உடன் அவர்களே வலியச் சென்று வருத்தம் தெரிவித்து மாற்று ஏற்பாட்டிற்கு வழி செய்கிறார்கள்.

நீங்களும் வெற்றியாளராக வேண்டுமென்றால் எதையும் சொல்லுவதற்கு முன்பு பலமுறை யோசிக்க வேண்டும். சொன்ன பின்பு அதை நிறைவேற்ற கடுமையாக பாடுபட வேண்டும். வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் வித்தியாசம் இல்லாததொரு நிலையை நீங்கள் எட்ட வேண்டும்.

சொல்லாத வார்த்தைக்கு நீ எஜமான்; சொல்லிய வார்த்தை உனக்கு எஜமான் என்ற பொன்மொழியைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

ஐபோன்களைத் தயாரிக்கும் அப்பிள் நிறுவனத்தில் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி புதுமொடல் போனை அறிமுகப்படுத்தப் போகிறோம் என்று சொல்லிவிட்டால். உலகமே தலைகீழாக மாறினாலும் சரியாக அந்த நாளில் அந்த போன் அறிமுகப்படுத்தப் படும்.அந்த அளவிற்கு தம்முடைய நம்பகத்தன்மையை வாடிக்கையாளர்கள் மத்தியில், உருவாக்கிய காரணத்தால் தான் இன்றைக்கு ஸ்மார்ட் போன் தயாரிப்பில் நம்பர் 1 ஆக இந்நிறுவனம் திகழ்கிறது.

குறித்து வைத்துக் கொள்ளுங்கள். நீங்களும் நம்பர் 1 ஆகத் திகழ வேண்டுமானால் சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும் ●




# மனைவியை மனம் குளிர வைக்க சில யோசனைகள்...

வலைத்தள உலா

1 மாமியார் விரதம் இருக்கும் போது "உங்க அம்மா ஏன் அடிக்கடி விரதம் இருந்து உடம்ப வருத்திக்கிறாங்க?''னு அக்கறையா கோபப்படணும். (கொஞ்சம் நடிங்க பாஸ்)

2 ரி.வியில நகைக்கடை விளம்பரம் போகும் போது, "அந்த டிசைன்ல ஒரு செயின் உனக்கு ஒண்ணு வாங்கணும்"னு அவுத்து விடணும்.

3 நண்பர்கள் போன் பண்ணி ரீட்டுக்கு கூப்பிட்டாங்கன்னா," இல்லடா ஈவ்னிங் என் வைப் கூட கோவிலுக்குப் போறேன். என்னால வர முடியாது"ன்னு அவங்க காதுல கேக்கற மாதிரி சத்தமா சொல்லணும்.

4 "உங்க வீட்டுக்கு போயிட்டு வரணும் மாமா, அத்தைய பார்த்து ரொம்ப நாள் ஆச்சு " அப்படின்னு குழந்தை மாதிரி சோகமா பேசணும்.


5 மனைவி முன்னாடி மச்சினி கிட்ட அவங்க படிப்பு கேரியர் பத்தி பேசணும். (படிப்பு பத்தி மட்டும் தான்)

6 அடிக்கடி "எப்படி நீ இவ்வளவு அழகா பொறந்தேனு" சொல்லணும்

7 செல்போன்ல வால்பேப்பரா மனைவி போட்டோ வச்சிக்கணும். வேற வழி இல்ல!

8 அதிகாலை எந்திரிச்சு அவங்க முகத்த பார்க்கும் போது மனச திடமா வச்சுக்கணும் பயத்துல " அய்யோ அம்மா"ன்னு பதறுனீங்கன்னா போச்சு...மொத்தமா போச்சு.

9 அவங்க சமைத்த சாப்பாடு சாப்பிடும் போது முகம் மலர்ந்து சாப்பிடனும். மறந்து கூட முகத்த சுளிக்கக் கூடாது●







காதல் வலிதான் உலகின் பெரிய வலின்னு சொல்லிட்டு இருக்குறவனுங்க...

கதவுக்கு இடையில கையவிட்டுப் பாருங்க அப்போ தெரியும் எந்த வலி பெரிய வலினு!!! ●

# இறப்பதற்கு முன்னர் பிரபலங்கள் கூறிய இறுதி வார்த்தைகள்

இறப்பதற்கு முன்னர் யாராக இருப்பினும் ஏதேனும் முக்கிய செய்தி அல்லது அவர்களுக்கு பிடித்தமான நபர்களிடம் அவர்கள் கூற விரும்பும் வார்த்தைகளை தான் கூறுவார்கள். மேலும். இறக்கும் தறுவாயில் யாரும் பொய் கூற மாட்டார்கள் என்பது அனைவரின் பொதுவான நம்பிக்கை.

சிலர் இறக்கும் போது கூறும் வார்த்தையில் ஆழ்ந்த பொருளும் அடங்கியிருக்கும். பொதுவாகவே பிரபலங்கள் மற்றும் சான்றோரின் வார்த்தைகள் ஓர் முன் உதாரணமாக தான் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவர்கள் இறக்கும் முன் கூறிய வார்த்தைகள் பொன் எழுத்துக்களாகவே உலக ஏட்டில் பதிக்கப்படுகின்றன.

இனி, இறப்பதற்கு முன் பிரபலங்கள் கூறிய கடைசி வார்த்தைகள் பற்றி காணலாம்...

### அப்துல் கலாம்

"விளையாட்டு பசங்களா? நல்லா பண்ணிங்களா?" இது தான் மாணவர் ஜனாதிபதி கடைசியாக பேசிய வார்த்தைகள்.






### கார்ல் மார்க்ஸ்

கடைசி வார்த்தைகள் முட்டாள் களுக்கானது, அது ஒரு போதும். முழுமையாக கூறப்படுவதில்லை. என கார்ல் மார்க்ஸ் இறப்பதற்கு முன்னர் கூறினார்.

### பீத்தோவன்

இசை மேதை பீத்தோவன் தான் இறப்பதற்கு முன்னர், "நண் பர்களே! நன்கு கைத்தட்டுங்கள், காமெடி முடியப் போகிறது" என கூறினார்.





### இளவரசி டயானா

கார் விபத்தில் இறப்பதற்கு முன்னர் இளவரசி டயானா. "ஓ கடவுளே. என்ன நடந்தது?" என கூறினாராம்.

### சே-குவேரா

புரட்சியாளர் சே தான் இறக்கும் முன்னர், "வா கோழையே, நீ என்னை சுட வந்திருக்கிறாய். ஆனால். நீ கொல்ல போவது ஓர் மனிதனை மட்டும் தான்"



### மால்கம் எக்ஸ்

மனித உரிமை புரட்சியாளர் மால்கம் எக்ஸ் தான் இறக்கும் போது. " சகோதரர்களே. சகோ தரிகளே, இது அமைதிக்கான வீடு (உலகம்)" என கூறினார்.





### மொஸார்ட்

பிரபல இசை அமைப்பாளர் மொஸார்ட் தான் இறக்கும் போது, "மரணத்தின் ருசியானது இதழ் களுக்கு மேலே உள்ளது, பூமிக்கு மேல் அல்ல" என்று கூறினார்.

### ஸ்டீவ் ஜாப்ஸ்

அப்பிள் நிறுவனதின் முத ன்மை செயலாளர் ஸ்டீவ் தான் இறக்கும் போது, "ஓ வாவ்... ஓ வாவ்... ஓ வாவ்" என்று கூறி னார்.





### பாப் மார்லி

பிரபல ரெக்கே பாடகர், பாட லாசிரியர், அமைதியை விரும்பிய மனிதர், "பணத்தால் வாழ்க்கையை வாங்க முடியாது" என கூறினார்.

### ஜாக் டேனியல்

பிரபல விஸ்கி நிறுவன வியா பாரி ஜாக் டேனியல் தான் இறக்கம் தறுவாயில், "ஒரு கடைசி ட்ரின்க் ப்ளீஸ்" என்று கூறினார்.



### காந்தி

கோட்சே துப்பாக்கியால் சுட்ட போது. கீழே விழுந்த நொடியில் காந்தி கூறிய கடைசி வார்த்தை "ஹே ராம்"





### அன்னை திரேசா

"இயேசுவே உன்னை நேசி க்கிறேன். இயேசுவே உன்னை நேசிக்கிறேன்.." என்று கடைசியாக அன்னை திரேசா கூறினார்

### இந்திராகாந்தி

இந்திராகாந்தி தான் இறக்கும் முன்னர் கடைசியாக கூறிய வார் த்தை, "நமஸ்தே"



---








மனைவி:-உங்க அம்மா சொல்றதைக் கேளுங்க!
கணவன்:-உனக்கு கோபம் வராதா?
மனைவி:-நான் என்ன சொல்றேன்னா... அம்மா சொல்லுறதைக் கேளுங்க,நான் சொல்றதைச் செய்யுங்க...


என்னங்க!நேற்று நான் இங்கேயிருந்து வாங்கின ஒரு கிலோ துவரம் பருப்பு வீட்டிலே சென்று பார்த்தப்போ 800 கிராம் தானே இருந்தது?
நீங்க நடந்துதானே வீட்டுக்கு போனீங்க? நடந்தா வெயிட் குறையும்னு உங்களுக்குத் தெரியாதா?







நீதிபதி டென்ஷன் ஆகும்படி தலைவர் அப்படி என்ன சொன்னார்?
எந்த ரி.வி.ஷோவிலும் உங்களைப் பார்த்த மாதிரி ஞாபகம் இல்லையேன்னு சொன்னார்.



மனைவி:-என்னங்க இன்றைக்கு நம்ம கல்யாண நாள்... கோழி அடிச்சு குழம்பு வைக்கட்டுமா?
கணவன்:-நான் செஞ்ச தப்புக்கு அதுக்கு ஏன் தண்டனை கொடுக்கிற...?
மனைவி:-



டாக்டர்! எப்பவுமே என் மனைவி என்னைத் தூக்கியெறிஞ்சுதான் பேசுவா!
அதுக்காக இரத்தக்காயம் ஏற்படுற அளவுக்கா தூக்கி வீசுவாங்க?





மாமூல் கொண்டு போய்க் கொடுத்தியே இன்ஸ்பெக்டர் என்ன சொன்னார்?
உன் நேர்மை எனக்குப் பிடிச்சிருக்குன்னார்!



என்னங்க!உங்க பொண்டாட்டி கோவிச்சுட்டு ஜன்னல் வழியா போறாங்க...?
அவ படிதாண்டா பத்தினீங்க..!



நீ திருடினியா?
நான் அரசியல்ல இருக்கேன் சார்!
சரி,சரி,ஊழல் ஏதாவது பண்ணீங்களா?



என்னய்யா லாரியில தொண்டர்களுக்கு பதில் எருமை வந்திருக்கு...!
டீ குடிச்சிட்டு வண்டி எடுத்தப்போ மாறிப்போச்சு தலைவா!



நீங்க கோவிலுக்குப் பாத யாத்திரை போவதற்கு பாங்குல ஏன் லோன் கேட்குறீங்க?
கால்நடைக்கு லோன் தருவதாக சொன்னாங்களே!

# இதமான நெருடல்

பாடசாலையிலிருந்து சளைத்துக் களைத்து வீடு வந்து சேர்ந்தாள் சாந்தி. கூடவே ஆண்டு ஒன்றில் கல்வி பயின்று கொண்டிருக்கும் அவளது தலைமகன் நிலவனும் வந்திருந்தான். நடைவாசலில் பாதணிகளைக் கழற்றிவிட்டு வீட்டினுள் நுழைய முற்பட்டவளது காதுகளின் மாமியாரின் வசைபா டும் வார்த்தைகள் தெள்ளத் தெளிவாக வந்து விழுந்தன.

ம்... உலாத்து முடிஞ்சு வந்திட்டாலாக்கும். சாந்தமே உருவான சாந்திக்கு எதிர்த்துப் பேசும் வல்லமை கிடை யாது. தனக்குள்ளேயே மருகிக் கொண்டாள்.

நான் வேலைக்குப் போகாட்டி வீடே பட்டினிதான். அதுக்குள்ள... மனிசியின்ரை வாயைப்பார். அவ பெத்துவைச்சிருக்கிறாஒரு பிள்ளை. நாலு காசு சம்பாதிக்க துப்பில்ல. நாக்கு வளைப்பிற்கு குறைவி ல்லை.

எதையும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் தன் இளைய மகளைத் தேடினாள்.

மாமி நிலா எங்கை? நித்திரையாய்ப் போனாளோ?

ஓ... அவள் இதுவரைக்கும் என் னைப் படாத பாடுபடுத்திப்போட்டு இனித் தாய் வந்து சுகமாய் இருக் கட்டுக்கும் எண்டு நினைச்சாளா க்கும். இப்ப... இப்பதான் நித்தி ரைக்குப் போனவள்.

சரி மாமி இவரையும் வீட்டில காணயில்ல. சாப்பிட்டிட்டாரோ?

அவன் நேரத்தோடயே சாப்பிட்டிட்டு எங்கையோ போயிட்டான்.

ஏதோ தொழிலுக்குப் போனது மாதிரி பெருமையாய்ச் சொல்லுது மனுசி.

நினைத்துக்கொண்டவளாய் கால் முகம் கழுவப் போனாள். நிலவனும் முகம் அலம்பி வர சாந்தி உணவு பரிமாறப்போனவள். மாமி உங்களுக்கும் போட்டுத் தரட்டே? என வினவினாள்.

வயதுபோனநேரத்தில... மூண்டு மணிக்குச் சாப்பிட்டால்... எனக்கு சாப்பாடுசெமிக்குமே. நான் வேளை க்கே சாப்பிட்டிட்டன். நான் ஒருக்கா கமலம் வீட்டுப் பக்கம் போட்டு வாறன்.

சொல்லிக்கொண்டே போய் விட்டாள்.

சாந்திக்கு சற்று நிம்மதியாயிருந்தது. காலையில் சமைத்து வைத்துவிட்டுப் போன சோறும் கறிகளும் சில்லென்று இருந்தது. இருந்தாலும் பசிக்களைப்பை போக்க அதுவே அமிர்தமாகத் தோன்றியது. நிலவனும் சாப்பிட்டு முடிய இருவருமாகச் சற்றுநேரம் கண்ணயரவெனப் போய்ப் படுக் கையில் விழுந்தார்கள். உடற்சோ ர்வு அவளை உறக்கத்தில் ஆழ்த்தியது.

கணவனின் குரல் அவளைத் திடுக்கிட்டு எழ வைத்தது. மகாராணிக்கு என்ன பகல் நித்திரை. எழு ம்பித் தேத்தண்ணி போடு. மாமி யார் வீட்டில இல்லாதது சாந்திக்குத் தென்பைத் தந்தது. என்னை என்ன மகாராணி மாதிரியே வைச்சிரு க்கிறியள். உழைக்கிறதும் நான் தான். இந்த வீட்டுக்கு சமையல் காரியும் நான்தான். அதுக்கிடை யில என்ன கிண்டல் வேண்டிக் கிடக்கு.

உழைக்கிற திமிர் உனக்கு. அதுதான் நீ எங்களை அலட்சியம் செய் யிறாய். கையை ஓங்கியவாறு அவளை நெருங்கினான். சாந்தி அசையா மல் நின்றாள்.

உங்களை விரும்பி நான் கலியாணம் செய்ததுக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்.

அவளை முந்திக்கொண்டு கண் களில் நீர் வழியத் தொடங்கியது. மனைவியின் முகத்தை ஏறிட்டு நோக்கிய திலீபனது கைதானாகத் தாழ்ந்தது.

திலீபன் என்ற பெயரை மட்டும் வைச்சிட்டினம். அந்த ஈகையாளி எங்கே... இந்தச் சுயநலவாதி எங்கே... பொருமிய உள்ளத்தைக்கட்டுப்படுத்திய வாறு தேநீர் தயாரிப்பதற்காக சமையலறையைநோக்கிநடந்தாள் சாந்தி.

தேநீரைக் கணவனிடம் நீட்டிய வாறு சொன்னாள். நீங்கள் உழைக்க வெளிக்கிட்டால்...நான்வேலையை விட்டிடுவன். நானும் உழைக்காட்டி எங்கட பிள்ளையள் பட்டினி கிடக்க வேண்டியதுதான். பிள்ளைகளைப் பெத்தால் மட்டும் போதாது. பேணி வளர்க்கவேணும். குடும்பம் என்று இருந்தால் பொறுப்பாய் நடந்து கொள்ளவேணும்.

என்னை இப்ப என்னதான் செய்யச் சொல்லுறாய்.

ஏதாவது ஒரு வேலையைத் தேடுங்கோ. எங்கை வேலைக்குப் போனாலும் இரண்டொரு மாதத்தோடு சரி நிண்டு நிலைக்கிறியள் இல்லையே. அதுதான் உங்கட பொறுப்பில்லாத குணம்.

சுட்டிக்காட்டினாள் சாந்தி. தனது பலவீனத்தை முதன்முதலாக உண ர்ந்து கொண்ட திலீபன் மனைவி யிடம் சரணடைந்தான்.

கடையில நிக்கிறதெண்டது என க்குச் சரிவராது. அவங்கள் முதலா ளிமார் நேரத்துக்கு ஒரு கதை கதை ப்பாங்கள்.

அப்படியெண்டா ஒண்டு செய்யுங்கோ... நான் எனது சம்பளத்தில லோன் எடுத்து ஒரு ஓட்டோ வாங் கித்தாறன். அதில ஹயர் ஓடி உழை க்கத் தயாரோ நீங்கள்.

திலீபன் குழந்தைபோல் தலையை மட்டும் ஆட்டினான்.

அடுத்தமாதமே திலீபனை ஒரு ஓட்டோவுக்குச் சொந்தக்காரன் ஆக் கிவிட்டாள் சாந்தி. கணவனிடம் கண் டிப்புடன் உத்தரவும் போட்டு விட் டாள்.


என்னுடைய சம்பளம் லோனுக்கு கழிபட்டுப்போக மிகுதி செலவுக்குக் காணாது. இனி உங்களுடைய உழைப்பில்தான் வீட்டுச்சீவியம் போக வேணும்.

திலீபனுக்கு புதுத்தென்பு பிறந்து விட்டது. எப்படியும் நாலுகாசு உழைத்து வீட்டைக் காப்பாற்ற வேண் டும் என்ற ஆர்வம் தன்னாலே பிறந்துவிட்டது. இப்போதெல்லாம் நண்பர்கள் கூட்டத்தை நாடுவதி ல்லை.

வீட்டில் எந்தவொரு பொருள் வாங்கினாலும் இது உங்கட உழைப்பிலதான் வாங்கினது எனக்கூறி அவனை உற்சாகப்படுத்துவாள். பிள்ளைகளும் அப்பா எனக்கு அது வேணும் இதுவேணும் என்று கேட்டு அவனுடன் ஒட்டிக்கொண்டனர். திலீ பனுக்கும் புத்துணர்ச்சி பொங்கி வழிந்தது.

தீபாவளிப் பண்டிகைக்கு இன்னும் சில நாட்களே இருந்தன. மாலையில் வீட்டிற்கு வந்த திலீபன் சாந்தியை அழைத்தான்.

சாந்தி இதிலை ஐயாயிரம் ரூபாய் இருக்குது. தீபாவளிக்கு இந்த முறை என்னுடைய உழைப்பில எல்லோருக்கும் உடுப்பு வேண்டவேணுமெ ன்பது என்னுடைய விருப்பம். சாந்தி மிகவும் மனம் மகிழ்ந்தாள். மறு நாளே கடைக்குப் போய் வீட்டிலு ள்ள அத்தனை பேருக்கும் துணி மணி வாங்கினாள். முதலில் மாமியர்ரிடம் அவளுக்கென வாங்கிய சாறியைக் கொடுத்தாள்.



மாமி இந்த முறை தீபாவளிக்கு இந்தச் சாறியை நீங்கள் உடுக்க வேணும். உங்களுடையமகன்உழைத்து வாங்கித்தந்தது. என்ன மாமி உங்களுக்கு சந்தோசம்தானே.

கைகள் நடுங்க சாறியை வாங்கிக்கொண்ட மாமியாரின் கண்களில் நீர் பனித்திருப்பதை சாந்தி கவனித்தாள். இப்பொழுதெல்லாம் மாமியார் அவளை கரித்துக்கொட்டு வதில்லை. மகனின் கை ஓங்கியி ருப்பதில் அவளுக்குத் திருப்தியே.

சாந்தியின் இளையமகள் நிலாவும் வளர்ந்து முன்பள்ளிக்குப் போகத் தொடங்கிவிட்டாள். முன்னர்போல அவள் பாட்டியைப் பாடாய்ப்படுத்து வதுமில்லை. எங்காவது வெளியில் போக விரும்பினால் மனைவி பிள்ளைகளை திலீபன் ஓட்டோவில் கூட் டிப் போவான். பொறுப்பாக நடந்து கொள்ளும் மகனைப் பார்த்து தாயார் நிறைவடைவாள். கோயில் திருவி ழாக்களுக்கு அம்மாவையும் அழை த்துச் செல்வான்.

எம்மவர்களில் சிலர் தங்கள் உள் ளத்துக்குள் புதைந்து கிடக்கும் ஊமை த்தாபங்களை... ஏக்கங்களை... மூடி மறைத்து அதன் விளைவாக பிறர் மீது குறை சொல்வதும் குற்றஞ்சாடுவதும் மனித இயல்புகளில் ஒன்று தான். பொறுமையைக் கடைப்பி டித்து அதைக்களையும் திறன் சாந் தியைப் போன்றவர்களிடம்தான் அமைந்திருக்கிறது. மாறாக எதற்கெடுத்தாலும் வாயில் வரும் வார்த்தைகளைக் கொட்டி வாக்குவாதம் நீண்டுஅதனால்குடும்பத்தில்பல்வேறு தாக்கங்கள் ஏற்படலாம். புத்தி சாதுரி யமாக சாந்தியைப்போல் பொறுமை காத்து அதில் வெற்றி காண்பதே நல் வாழ்க்கையின் அம்சமாகும்.

கொந்தளிப்புகள்ஏதுமின்றி அமைதியாகப் பயணித்துக்கொண்டிருந்தது அவர்களது வாழ்க்கையெனும் படகு. திடீரென ஒருநாள் மயங்கி வீழ்ந்த மாமியாரை கணவனின் ஓட்டோவில் வைத்தியசாலைக்குக் கொண்டு போனாள் சாந்தி. மயக்கத்திலிருந்து விழித்தெழுந்தவள் தனது இடதுபக்க அவயவங்களின் செயற் பாட்டை இழந்துவிட்டாள். சில நாட் கள் வைத்தியசாலையில்

## சிறுகதை

வைத்தி ருந்து விட்டு வீட்டிற்குக் கொண்டு வந்தார்கள்.

படுத்த படுக்கையாய்க் கிடக்கும் மாமியாரைக் கவனிக்கவேண்டும். பிள்ளைகள் நிலவன், நிலாவைப் பாடசாலைக்கு அனுப்பவேண்டும். அத்துடன் தானும் வேலைக்குப் போகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்துக்குள் அகப்பட்டுத் தத்தளித்துப் போனாள் சாந்தி. திலீபன் அவளுக்கு ஆலோசனை கூறினான்.

சாந்தி நாங்கள் அம்மாவைப் பார்க்கிறதுக்கு உதவிக்கு ஒரு ஆளை வைப்பமே.

அது சரிவராதப்பா படுக்கையில இருக்கிறவையைப் பராமரிக்கிற தெண்டால் கூடக்குறையக் காசு கேட்பினம் எங்களால குடுக்க முடி யுமே!

அங்கலாய்ப்புடன் கூறினாள் சாந்தி. இப்ப நாங்க ரெண்டு பேரும் உழைக்கிறபடியால் ஒரு மாதிரி சமாளிக்கலாம் எண்டு நினைக்கிறன்.

அப்பிடியெண்டால் ... ஒண்டு செய்வம் நாங்கள் ரெண்டு பேரும் காலையில அவவைக் குளிப்பாட்டி எல்லாம் செய்து விட்டு எட்டு மணியில இருந்து ரெண்டு மணி வரைக்கும் அவவைப் பாத்தாக் காணும்.

சரி சாந்தி நான் ஆரையும் விசாரிச்சுப் பார்க்கிறன். அதுவரைக்கும் பள்ளிக்கூடத்துக்கு லீவு போட்டால் சரி.

மாதம் 10 ஆயிரம் சம்பளம் பேசி ஒரு அம்மாவை வேலைக்கு சேர்த்தார்கள். மாதம் ஒன்று உருளும் முன்னே மாமியாரின் புலம்பலோ பலமாக இருந்தது. அந்த அம்மாவின் மீது ஆயிரம் குறைகள். அதைக் கேட்பதற்கு சாந்தியின் மனதுக்கு சங்கடமாயிருந்தது.

சாந்தி தீர யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்தாள். பரிசாரகத்துக்கு வந்தவளை வேலை யிலிருந்து நிறுத்திவிட்டாள். தினமும் தானே மாமியாரைப் பராமரித்து வரத் தொடங்கினாள். நாட்கள் நகர்ந்தன். சாந்தி பாடசாலைக்குப் போவதை நிறுத்திவிட்டாள். மாமியாருக்கோ தன்னைச் சாந்தி கவனித்துக்கொள்வதில் மகா திருப்தி.

திலீபன் ஒருநாள் சாந்தியிடம் வினவினான். சாந்தி பாடசாலைக்கு தொடர்ந்து லீவு போட்டால்... படிக்கிற பிள்ளையளின்ரை கதி... பாவமெல்லே பிள்ளைகள்!

அவைக்கு வேற ரீச்சர் போட்டிருப்பினம். அப்படியெண்டா

நான் பென்சனுக்கு எழுதிக் குடுத்திட்டனப்பா. இனி நான் பாடசாலைக்குப் போகவே தேவையில்லை. நிம்மதியாய் இருந்து பிள்ளையளையும் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி மாமியையும் பாத்துக் கொண்டு இருப்பன். சாந்தியின் வார்த் தைகளில் நிறைவு தெரிந்தது.

படுக்கையிலிருந்து இவற்றைக்கேட்டுக் கொண்டிருந்த மாமியாருக்கு மனதில் நெருடல். நான் சாந்தியை வார்த்தைகளால எந்தளவுக்கு வதைத்திருக்கிறன். அவளோ என்னைப் பார்க்கிறதுக்காக தன்ரை வேலையையே விட்டிட்டாள். அவளது இதயத்தில் துளிர்த்த நெருடல் ஒரு புறம் வேதனையை ஏற்படுத்தினாலும் மறுபுறம் இதமாக இருந்தது.

மலரன்னை






உலகில் அளவில் பிரபலமான விளையாட்டுகள் பட்டியலை சொல்லுங்கள் என்றால் கடகடவென சொல்லிவிடும் விளையாட்டு ஆர்வலர்களுக்கு கூட , இந்த விளையாட்டுகள் பற்றி கேட்டால் கொஞ்சம் யோசிக்கதான் செய்வார்கள். ஆனால் சில நாடுகளில் இந்த விளையாட்டுகளை உற்சாகமாக விளையாடுகின்றார்கள். வேடிக்கை, மகிழ்ச்சி, த்ரில் என பல சுவாரஸ்யங்களை கொண்ட இந்த விளையாட்டுகளின் பெயர்களை கூட அறிந்திருப்பது அரிதுதான்.

அப்படி சில வித்தியாச விளையாட்டுகளின் பட்டியல் இங்கே....

**டக்ரா- Takraw**

வொலிபோல் விளையாட்டின் சிறு மாற்றம் தான் டக்ரா. இந்த விளையாட்டு, தென் கிழக்கு ஆசிய நாடுகளில் இப்போது பிரபலமாகி வருகிறது. வொலிபோல் விளையாட்டில், கையால் மட்டுமே பந்தை தொட்டு அடிக்க வேண்டும். ஆனால் இந்த விளையாட்டில், கைகளுக்குப் பதிலாக கால்களை பயன்படுத்தி விளையாட வேண்டும். கைகளை மட்டும் பயன்படுத்தாமல் கால், பாதம், முட்டி, நெஞ்சு போன்ற உறுப்புகளை பயன்படுத்தி எதிராளிக்கு பந்தை தள்ள வேண்டும். வொலிபோல் விளையாட்டு போல் இந்த விளையாட்டிலும், வலை கட்டப்பட்டு இருக்கும். அந்த வலைக்கு இருபுறமும் வீரர்கள் நின்று விளையாட வேண்டும். மியன்மார், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் உள்ள இளைஞர்களை அதிகமாக கவர்ந்து வரும் விளையாட்டாக இது இருந்து வருகிறது.

**செஸ் பொக்சிங் - chess boxing**

பொக்சிங் விளையாட்டை டி.வியில் பார்த்து இருப்போம். செஸ் விளையாட்டை நமது வீடுகளில் விளையாடி இருப்போம். ஆனால் செஸ் பொக்சிங் விளையாட்டை இதுவரை கேள்விப்பட்டு இருக்கிறோமா?. செஸ் மற்றும் பொக்சிங் இரண்டையும் இணைத்து விளையாடுவதே இந்த விளையாட்டு. இந்த விளையாட்டை விளையாடும் வீரர்களுக்கு இரண்டு விளையாட்டிலும் நல்ல பயிற்சி அவசியம். உடல் வலுவும் தேவை, மூளை பலமும் தேவை.

பொக்சிங் ரிங் அருகே செஸ் போர்ட் இருக்கும். போட்டியில் மோதும் இரண்டு வீரர்கள், முதலில் நான்கு நிமிடங்கள் செஸ் விளையாட வேண்டும். அவர்கள் காதுகளில் ஹெட்போனை மாட்டிக்கொள்ள வேண்டும். செஸ் விளையாடி கொண்டிருக்கும்போதே நடுவர்கள், "ஸ்டார்ட்...!" என்று மைக் மூலம் சொன்னதும், இவர்கள் செஸ் விளையாட்டை நிறுத்திவிட்டு, ரிங்க்குக்குள் சென்று, முரட்டுத்தனமாக பொக்சிங் விளையாட வேண்டும். நடுவர் அடுத்த உத்தரவை கொடுத்ததும், பொக்சிங் விளையாட்டை நிறுத்திவிட்டு, செஸ் விளையாட்டை ஆரம்பிக்க வேண்டும். செஸ்சில் செக் வைத்து, பொக்சிங்கில் யார் அதிக புள்ளி வாங்குகிறார்களோ அவர் தான் இந்த விளையாட்டில் வெற்றி பெற்றவர். இந்த விளையாட்டிற்கு தற்போது ஐரோப்பிய நாடுகளில் ரசிகர்கள் அதிகரித்து வருகின்றனர்.


**போஸாபோல் - bossa ball**

பேஸாபோல் பற்றி நாம் கேள்விபட்டு இருப்போம். அது என்ன போஸாபோல் ? பிரேசில், ஜேர்மன்,நெதர்லாந்து போன்ற நாடுகளில் இது போட்டி ஆட்டமாக இல்லாமல், பொழுதுபோக்கு விளையாட்டாக விளையாடப்படுகிறது. கடற்கரை பகுதியில் தான் இந்த விளையாட்டு விளையாடப்படும். மேடு பள்ளங்களுடன் கூடிய, காற்று நிரப்பிய விரிப்புதான் இந்த விளையாட்டிற்கான மைதானம். அந்த விரிப்பில் துள்ளிக் குதித்து, பந்தைப் பிடித்து எதிராளிக்கு தள்ள வேண்டும். குதிப்பதற்கு ஏதுவாகவும், தாவிப் பிடிக்கும் விதத்திலும், அந்த விரிப்பு அமைக்கப்பட்டு இருக்கும். ஆனால் இந்த விளையாட்டு விளையாடுவதற்கு ஒரு கண்டிசன் உள்ளது. அது ஒன்றும் இல்லை. முதலில் உங்களுக்கு ஜிம்னாஸ்டிக் விளையாட்டு தெரிந்து இருக்க வேண்டும் என்பதுதான்.


ஹார்ஸ் பேக்-Horseback cheese


நம் நாட்டின் கிராமப்புற விளையாட்டுகள் போல், இங்கிலாந்து நாட்டில் 200 ஆண்டுகளாக இந்த விளையாட்டு விளையாடப்படுகிறது. இந்த விளையாட்டு மைதானத்தின் பெயர் கூப்பர். அது மைதானம் அல்ல ஒரு மலை. மேடு பள்ளமாக ஒழுங்கற்று காணப்படும் இந்த மலையின் மேலிருந்து கீழாக, ஒரு பெரிய பாலாடைக் கட்டியை உருட்டி விடுவார்கள். அந்த பாலாடைக் கட்டியை விரட்டிக் கொண்டே , போட்டியில் பங்கேற்பவர்கள் மலையின் மேலிருந்து, கீழாக ஓடிவரவேண்டும். எந்தக் காரணம் கொண்டும் திரும்பிச் செல்லக் கூடாது. மேலிருந்து ஓடி வந்து கீழே இருக்கும் எல்லைக்கோட்டில் யார் முதலில் பாலாடைக் கட்டியை பிடிக்கிறாரோ அவரே வெற்றி பெற்றவர். அவருக்கு என்ன பரிசு தெரியுமா? எந்த பாலாடைக் கட்டியை துரத்தி வந்தோர்களோ அந்த பாலாடைக் கட்டிதான் பரிசாக தரப்படும்.

விநோதம், வேடிக்கை நிறைந்த இந்த விளையாட்டுகளை இப்போதே விளையாட வேண்டும் என்று ஆசைப்பட்டால், பாஸ்போர்ட் முதலில் எடுத்துவிடுங்கள்.








## காலத்தால் அழியாத கானங்கள் ...

திரைப்படம்: அரச கட்டளை
பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன், பி. சுசீலா
இசை: கே.வி.எம்.



புத்தம் புதிய புத்தகமே
உன்னை புரட்டி பார்க்கும் புலவன் நான்
பொதிகை வளர்ந்த செந்தமிழே
உன்னை பாட்டில் வடிக்கும் கவிஞன் நான்
பள்ளியறை என்னும் பள்ளியிலே
இன்று புதிதாய் வந்த மாணவி நான்
ஏட்டை புரட்டி பாட்டை படிக்கும்
வீட்டு புலவன் நாயகி நான்
பள்ளியறை என்னும் பள்ளியிலே...

அஞ்சு விரல் பட்டால் என்ன
அஞ்சுகத்தை தொட்டால் என்ன
தொட்ட சுகம் ஒன்றா என்ன
துள்ளும் உள்ளம் பந்தா என்ன
தொட்ட சுகம் ஒன்றா என்ன
துள்ளும் உள்ளம் பந்தா என்ன
செவ்விதழை கண்ணால் என்ன
தேனெடுத்து உண்டால் என்ன
கொத்து மலர் செண்டா என்ன
கொஞ்சும் மன்னன் வண்டா என்ன

புத்தம் புதிய புத்தகமே
உன்னை புரட்டி பார்க்கும் புலவன் நான்
ஏட்டை புரட்டி பாட்டை படிக்கும்
வீட்டு புலவன் நாயகி நான்
புத்தம் புதிய புத்தகமே...

கையணைக்க வந்தால் என்ன
மெய்யணைத்து கொண்டால் என்ன
கையணைக்க வந்தால் என்ன
மெய்யணைத்து கொண்டால் என்ன
முத்தமழை என்றால் என்ன
சொர்கம் ஒன்று உண்டா என்ன
முத்தமழை என்றால் என்ன
சொர்கம் ஒன்று உண்டா என்ன்
வெட்கம் வரும் வந்தால் என்ன
வேண்டியதை தந்தால் என்ன
வெட்கம் வரும் வந்தால் என்ன
வேண்டியதை தந்தால் என்ன
இன்னும் கொஞ்சம் சொன்னால் என்ன
இன்பம் இன்பம் என்றால் என்ன

புத்தம் புதிய புத்தகமே
உன்னை புரட்டி பார்க்கும் புலவன் நான்
ஏட்டை புரட்டி பாட்டை படிக்கும்
வீட்டு புலவன் நாயகி நான்
புத்தம் புதிய புத்தகமே...

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்பவர்கள**

K.டிசாந்-கிளிநொச்சி, தர்மசீலன், ரூபினி,டுஷி-நீராவத்தை, தர்ம சீலன், பாசனா,கருணிகா-மானிப் பாய், அருள்மொழி,தருணான்-சண்டிலிப்பாய், பத்மன்,காண்டீபன், தர்மினி-ஊறணி,பரந்தாமன், தேவரி குடும்பம்-கிளிநொச்சி, அருந்தவநாதன், மதனரூபி,தர்மசீலன்-யாழ்ப்பாணம்,

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஒவ்வொரு நாட்களுமே, மே 31 தான்

மே - 31, சர்வதேச புகைத்தலுக்கு எதிரான நாள். இது புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து சிந்திக்கும் நாள். மக்களை குறிப்பாக இளைஞர்களை சிந்திக்க வைக்கும் நாள். மக்களை விழிப்புறச் செய்யும் நாள். இளைஞர்கள் புதிதாக இப்பழக்கத்தினை பழகிக்கொள்வதை தடுக்கும் நாள். புகைப்போரை அப்பழக்கத்தினின்றும் மீட்கும் செயற்பாடுகளின் வினைத்திறனை அதிகரிக்கச் செய்யும் நாள். புகைத்தலுக்கு எதிராக மக்களை சுயாதீனமாக எழுச்சியுறச் செய்து, அவர்களையும் இதில் பங்களிக்கச் செய்யும் நாள். எனவே இந்நாளின் முக்கியத்துவம் உணர்ந்து, அதனுள் பொதிந்துள்ள உள்ளார்ந்த உண்மைத் தன்மை உணர்ந்து நாம் அனைவரும், இந்நாளினை அனுஷ்டிக்க வேண்டும். இது இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகவும் உள்ளது.

கற்றோர், மருத்துவர்கள், ஆசிரியர்கள், மதத்தலைவர்கள், சமயப்போதகர்கள், பிரசங்கம் செய்வோர், உள்ளூர் அரசியல்வாதிகள், ஊடகங்கள் என எம் சமூகத்தின் இருப்பில் அக்கறையுள்ள அனைவரும் இதில் பங்கெடுத்தல் வேண்டும். தமக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம், புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புக்களை மக்களிடத்தில் எடுத்துச்செல்லுதல் வேண்டும். குறிப்பாக இளைஞர்களை தெளிவுபடுத்தி விழிபபுறச் செய்தல் வேண்டும். ஊடகங்களில் புகை எதிர்ப்பு பிரசுரங்களை வெளியிடும் போது மிகவும் கவனம் செலுத்துதல் வேண்டும். இங்கு புகைந்து கொண்டிருக்கும் சிகரெட்டின் படத்தையோ, புகை பிடித்தல் போன்ற படங்களையோ, இரு விரல்களுக்கிடையில் சிகரெட் உள்ளது. போன்ற படங்களையோ பிரசுரித்தல் கூடாது, அவற்றை தவிர்த்தல் வேண்டும். அதற்கு பதிலாக மகிழ்ச்சியாக இருக்கும் சிறுவர்களின் படங்களையோ, புகையின் பாதிப்பை விளக்கும் படங்களையோ, காட்டூன்களையோ பிரசுரிப்பதே பொருத்தமானது. எமது வடபகுதியை பொறுத்தவரை ஒவ்வொரு நாட்களுமே மே-31 தான் என்பதே எனது கருத்தாகும்.

புகை, மது, போதை, எயிட்ஸ் நோய் என்பன நச்சுவட்டத்தின் கூறுகளே, ஆரம்பத்தில் புகையில் தொடங்குபவர், படிப்படியாக இவ் நச்சுவட்டத்தின் அடுத்த படிகளுக்கு இலகுவாக உந்தித்தள்ளப்படும் நிலையே தற்போது உள்ளது. இதன் விளைவாக தனிமை, மன வெறுமை, கல்வியில் நாட்டமின்மை, பாடசாலை இடைவிலகல், துஷ்பிரயோகம், சமூகத்தால் ஒதுக்கப்படல், சகபாடிகளால் கைவிடப்படல் என்று பல நெருக்கீடுகளுக்கு உட்பட்டு ஈற்றில் தற்கொலை முயற்சி, தற்கொலை என நிறைவுறுவதை காண்கின்றோம். சமூகத்தின் அத்திபாரங்கள் இன்று ஆட்டங் காணும் போது சமூகத்தின் நாளைய இருப்பு கேள்விக்குறியாகின்றது.


திரைப்படங்களில் அசௌகரியமான புகை, மது போன்றவற்றை மகிழ்ச்சியான ஒன்றாக காண்பிக்க முற்படுகிறார்கள். எதிர்பால் கவர்ச்சிக்காக - அசட்டுத்தன்மையான வீரர்களாக காண்பிப்பதற்காக இவற்றை பயன்படுத்துகின்றார்கள். இதனைப் பார்த்த இளைஞர்கள் இவற்றை நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிக்கப் பார்க்கின்றார்கள். பாவம்! கல்வி அறிவு கூடிய சமூகத்தில் இருந்து கொண்டும் தாம் கற்ற கல்வி, பகுத்தறியும் அறிவு கொண்டு உண்மைத்தன்மையை அறிய முடியாதவர்களாகவே இவர்கள் உள்ளனர். நிஜ வாழ்க்கை வேறு, திரைவிம்பம் வேறு என்பதை கூட உணர முடியாதவர்களாகவே உள்ளனர். காலை முதல இரவு வரை எமது வீடுகள் அனைத்தும் திரையரங்குகளாக மாறிய தன் விளைவே இது. சுய சிந்தையை இழந்து, சிந்தனைத் திணிப்புக்குள் சிக்குண்டு சரி எது, பிழை எது, நன்மை, தீமை எவை என புரியாது திக்குமுக்காடுகின்றார்கள்.

இத் திரைப்படங்கள் நம் இளைஞர்களை திசை திருப்பி, அவர்தம் வாழ்க்கைப் போக்கை மாற்றி அப்பாவி தந்தைமார்களின் உழைப்பை திருட வைக்கின்றன. அசௌகரியமான செயல்களுக்கு வீணே செலவு செய்து இளைஞர்கள் தம்மை அசிங்கப்படுத்திக் கொண்டும் மற்றையோரின் அருவருப்புக்கு ஆளாகிக் கொள்ளும் நிலையை இவை ஏற்படுத்துகின்றன.

புகையானது, பிள்ளைகளுக்கு பாசமான அப்பாவை இல்லாது செய்கின்றது. மனைவிக்கு அன்பான வாழ்க்கைத் துணையை இல்லாது செய்கிறது. உறவினர்களுக்கு உதவிடும் சகோதரனை இல்லாது செய்கிறது. நாட்டிற்கு நற்பிரஜையை இழக்க வைக்கின்றது என்பதை நாம் ஒவ்வொருவரும் நம் புத்தியில் இருத்துதல் வேண்டும்.

புகைத்தலினால் எமக்கு கிடைப்பது துர்நாற்றம் வீசும் வாய் அவலட்சணமான முகம், முதிய தோற்றம், காவி படிந்த பற்கள், ஆண்மைக் குறைபாடு புற்றுநோய்கள் மற்றும் சந்தோசமற்ற குழப்பமான குடும்ப வாழ்வு என்பனவையே. ஆண்மைக்குறைபாடு என்பது மிகமிக முக்கியமான பாதிப்பாகும். புகைத்தலினால் இளைஞர்கள் தம் ஆண்மையை இழக்கிறார்கள். திரைப்படங்களில் காண்பிப்பது போல், தம்மை செயற்திறன மிக்க ஆண்களாக காண்பிக்க முற்பட்டு, நாளடைவில் தம் ஆண்மைத்தன்மையை இழந்து விடுவது கவலையே.

புகைப்பவர்கள் உண்மையில் பாவமானவர்கள், அவர்கள் ஏமாற்றப்படுவதை உணராதவர்கள், தம் பகுத்தறிவை பயன்படுத்தும் திறனை இழந்தவர்கள். பிரச்சினைகளை மறக்கின்றோம் எனக்கூறி மேலும் பிரச்சினைகளுக்குள் ஆளாகின்றனர். சந்தோசமாக இருப்பதாக காண்பிக்க முற்பட்டு தம்மிடம் இருந்த சந்தோசத்தையும் தொலைக்கிறார்கள்.




தொலைக்காட்சி, நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் மூலம் எம் வீட்டில் நுழையும் பெரியதிரை, சின்னத்திரை நடிகர்கள் எமது பிள்ளைகளுக்கு புகை, மது பாவனையை கற்பிக்கின்றார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். சிறுவர்கள் மனத்தில் இத்தீய பழக்கங்கள் ஆழப் பதிந்து விடும். இவையே பதின்ம வயதில் வெளிக்காட்டப்படுகின்றன. மனத்தில் ஆழப்பதிந்த பழக்கங்களை அகற்ற பின்னைய காலங்களில் அதிக விலை கொடுக்க வேண்டி வருவதையே இப்போது நாம் நம் சமூகத்தில் பார்க்கின்றோம். இவ்வாறான தவறான காட்சிகள் வருகின்றபோதெல்லாம், சிறுவர்களுக்கு அத்தருணத்திலேயே அவற்றின் பாதிப்புக்கள் எடுத்துக்கூறுதல் நன்று. முடியுமாயின் தவறான காட்சிப்படுத்தல்கள் உள்ள நெடுந்தொடர்களையோ, படங்களையோ தவிர்த்து விடுதல் நன்று.

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் பிரகாரம், இளம் பெண்கள் சிகரெட் புகைக்கும் ஆண்களை விரும்புவதில்லை என்று தெளிவாக காண்பிக்கின்றது.

ஆனால் அதே இந்தியாவில் தயாரிக்கப்படும் திரைப்படங்கள், உண்மைக்கு மாறான தகவல்களை தானே எமக்கு காண்பிக்கின்றன. இப்போது புரிகின்றதா? நிஜம் என்பது சினிமாவில் காண்பிக்கும் பளபளப்பு அல்ல என்பது. உண்மைகள் எம்மை வந்தடையாது மறைக்கப்பட்டுள்ளன. கவர்ச்சி முலாம் பூசப்பட்டு திரைகளில் காண்பிக்கப்படும் பொய்களை நம்பாதீர்கள்.

ஒரு சிகரெட் புகைப்பதனால் ஒருவர் தன் வாழ்நாளில் 12 நிமிடங்களை இழந்து விடுகிறார். ஒருவர் தினமும் ஐந்து சிகரெட்டுக்கள் புகைப்பாரானால் அவரின் வாழ்நாளில் ஒரு மணித்தியாலத்தை ஒரு நாளில் குறைத்துக் கொள்கின்றார். ஒரு மாதமாக புகைப்பாரானால் ஒன்றே கால் நாட்களை இழந்து விடுவார். ஒரு வருடமாக புகைப்பாரானால் பதினைந்து நாட்களை இழந்து விடுவார்.

உலகில் சிகரெட் புகைத்து இறப்போரின் மொத்தத்தொகையில் 1/10 பங்கினர் மற்றையோர் புகைக்கும் புகையை சுவாசிப்பதினால் புகையிலுள்ள நிக்கோடினின் தாக்கத்தினால் இறக்கின்றனர். இதனை மறைமுகப் புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புக்கள் என சொல்கின்றனர்.

இவ்வாறு மறைமுகப் புகைத்தலினால் பாதிக்கப்படுவார்கள் யாரென பார்ப்போமானால் அன்பான மனைவி, பாசமான பிள்ளைகள், உற்ற நண்பர்களே இவ்வாறு பரிதாபமாக இறக்கின்றார்கள்.

கர்ப்பிணிப் பெண் ஒருவர் இப் புகையை சுவாசிப்பாரனால் அது அவரின் கருவில் பாதிப்புக்களை ஏற்படுத்தி பிறப்பு குறைபாடுகளுள்ள சிசுவை உருவாக்கலாம்.

உணவு கையாளும் நிலையங்களில் தொழில்புரிகின்ற புகைபிடிக்காத அப்பாவி இளைஞர்களும் மறைமுகப் புகைத்தலினால் மிக மோசமாக பாதிக்கப்படுகின்றனர்.

ஒரு உணவகத்தில் ஒரு நாளில் 30 பேர் வரை புகைத்து விட்டு செல்கின்றார்கள். என்றால், அங்கு பணிபுரியும் இளைஞர்கள் இப்புகையினை சுவாசித்து தம் வாழ்நாளில் 06 மணித்தியாலங்களை ஒரு நாளில் இழந்துவிடுகின்றான். வருடத்திற்கு தம் வாழ் நாளில் 90 நாட்களை அதாவது மூன்று மாதங்களை இழந்து விடுகின்றான். பாவம்! அவன் 05 வருடங்கள் தொடர்ந்தும் அக்கடையில் பணி புரிவானானால் தன் வாழ் நாளில் கிட்டத்தட்ட ஒரு வருடத்தை பறி கொடுத்து விடுவான்.

எனவே இது விடயத்தில் உணவு விடுதியாளர்கள் கூடுதலான கவனம் செலுத்தி தமக்கு விசுவாசமாக தொழில் புரிகின்ற இளைஞர்களின் வாழ்வினை கருத்தில் எடுத்து அவர்களினதும் தனதும் எதிர்கால நன்மைகளை கருத்திற்கொண்டு புகைப்பொருட்களை விற்பனை செய்வதை நிறுத்திக் கொள்ளுதல் வரவேற்கத்தக்கது.

"நன்றே செய்க அதனை இன்றே செய்க"

**வைத்தியர் பொ. ஜெசிதரன்**
**சுகாதார வைத்திய அதிகாரி**

சினிமா செய்தி

# அந்தக் குழந்தையே நான்தான்

## சந்திரமுகி பொம்மி

## பிரகர்ஷிதா ஜாலி பேட்டி



**கொக்கரக்கோ சேவல் வந்து என்ன பேரு கூவுது ?**
**வேல் வேல் வேல்முருகா வேல்..**



இந்தப் பாட்டைக் கேட்டதும் வேலன் நாடகம் ஞாபகம் வருதா? அந்த வேலன் நாடகத்துல நடிச்ச இந்த வேலாயி- தான், 'ஏ பொம்மி... ஏஏ பொம்மி...' என்று ரஜினி சந்திரமுகியில் அழைத்த குழந்தை. இப்ப என்ன பண்ணுது அந்தக் குழந்தை? சென்னை மயிலாப்பூரில் ஷாப்பிங்ல பிஸியாயிருந்த பொம்மியை மடக்கிப் பிடித்தோம். ஐயோ அக்கா என் பேர் பிரகர்ஷிதா என்றார், சந்திரமுகியில் பார்த்த அதே குழந்தை சிரிப்புடன்...

**உங்களை இப்போ டி.வில பார்க்கமுடியலையே?**

கடைசியா சிம்ரன் மேடம் பொண்ணா அனுவும் நானும் சீரியல்ல நடிச்சேன். அப்போ நான் சிக்ஸ்த் படிச்சிட்டு இருந்தேன். தொடர்ந்து நிறைய வாய்ப்புகள் வந்தது. ஒரு நாள் அம்மா நடிக்க போறியா இல்ல படிக்கப்போறயியான்னு கேட்டாங்க. நான் படிப்பு தான்னு முடிவெடுத்துட்டேன்.

**அது சரி.. அதுக்குன்னு இவ்ளோ பெரிய இடைவெளியா ?**

ஒரு தடவ நான் கபாலீஸ்வரர் கோயில் போயிருந்தேன். அங்க ஒரு 6 வயசு பாப்பா, அம்மாவைத் தொலைச்சுட்டு அழுதுட்டு இருந்துச்சு. அந்தக் குழந்தைய தூக்கிட்டு அவங்க அப்பா அம்மாவைத் தேடினேன். கடைசியா சிவன் சந்நிதியில அவங்க அம்மா சாமி கும்பிட்டுட்டு இருந்தாங்க. குழந்தையை பதறி வாங்கினவங்க, என்னைப் பார்த்து நீதானே சந்திரமுகியில நடிச்சன்னு கேட்ட கேள்வியை இப்ப வரைக்கும் மறக்க முடியல. குழந்தை காணாம போன பதற்றம் கூட அவங்க முகத்துல பார்க்கலை. என்னவோ அந்த நிமிடம், கொஞ்ச நாள் ஃபீல்டுக்கு பிரேக் விடலாம்னு தோணுச்சு அவ்வளவு தான்.

**இப்போ என்ன பண்றீங்க ?**

எம்.ஓ.பி வைஷ்ணவ் காலேஜ்ல பிஎஸ்சி எலக்ட்ரானிக் மீடியா செகண்ட் இயர் படிக்கிறேன். அடுத்து பிஜி படிக்கணும். ஸ்கிரிப்ட் எழுதுறதுக்கான முயற்சிகள் பண்ணிட்டு இருக்கேன்.

**காலேஜ்ல உங்களுக்கு ஃபேன்ஸ் இருக்காங்களா?**

நானே போய் யார் கிட்டயும் சொன்னதில்லை. யாரும் அப்படி கண்டுபிடிச்சாலும் சிரிச்சிட்டே போய்டுவேன்.

**சரி, உங்க எதிர்கால திட்டம் தான் என்ன?**

சின்ன வயசுல டாக்டர் ஆகணும்னு நினைச்சேன். இப்போ சினிமா தான் கனவே. இயக்குநர் ராஜ்குமார் ஹிரானி மாதிரி பெரிய இயக்குநர் ஆகணும். என் படத்துல மக்களை சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கணும். ஹாலிவுட் "ரூம்" மாதிரி ஒரு படம் பண்ணனும்.

**நீங்க நடிச்சதுலயே பிடிச்ச படம் அல்லது சீரியல் ?**

கண்டிப்பா சந்திரமுகி படத்துல நடிச்ச பொம்மி கேரக்டர் தான். கொஞ்ச நேரம் வந்தாலும் நல்ல ரீச். எல்லாரும் பொம்மிதான் என் பேருன்னு நினைச்சி பொம்மி பொம்மின்னு கூப்பிட்டாங்க .

**உங்க ட்ரீம் பாய், கேர்ள்?**

கங்கனா ரனாவத், ட்ரீம் பாய்னா ஃபவாத் கான், மேடி

**உங்க குடும்பம் பத்தி?**

என் பாட்டிதான் டானிக், டேப்லட் எல்லாம். என் கனவுக்கு அவங்க தான் வழிகாட்டி. ராஜராஜேஸ்வரி சீரியலில் முருகனா வந்து உபதேசம் கொடுப்பீங்கல்ல, அப்படி ஒரு

**மெசேஜ் சொல்லுங்க?**

யாருக்காகவும் உங்க கனவை விட்டு கொடுக்காதீங்க. கனவை நோக்கி ஓடுங்க. சிறந்த இயக்குநராக வாழ்த்துகள் பொம்மி...

ஸாரி.. ஸாரி.. பிரகர்ஷிதா!



# ஒரு நாள் கூத்து

## திரைவிமர்சனம்

தமிழ் சினிமா சில காலங்களாகவே பெண்களுக்கு மரியாதை தரும் படங்களை கொடுத்து வருகின்றது. இறைவியை தொடர்ந்து பெண்கள் வாழ்க்கையை மையப்படுத்தி இன்று உலகம் முழுவதும் வெளிவந்துள்ள படம் தான் ஒரு நாள் கூத்து. அட்டகத்தி தினேஷ், மியா ஜார்ஜ், நிவேதா, ரித்விகா, கருணாகரன், ரமேஷ் திலக் என பல நட்சத்திரங்கள் நடிப்பில் அறிமுக இயக்குநர் நெல்சன் இயக்கியுள்ள படம் தான் ஒரு நாள் கூத்து.

**கதைக்களம்**

படத்தின் ஆரம்பத்திலேயே ஒரு பரபரப்பான விபத்துடன் தொடங்குகிறது. யாருக்கு விபத்து என தெரிவதற்குள் ப்ளாஷ்பேக் ஆரம்பிக்கின்றது. அட்டகத்தி தினேஷ் மற்றும் நிவேதா ஐடியில் பணிபுரிந்து ஒருவரை ஒருவர் காதலிக்கின்றனர். அவ்வப்போது செல்லமாக சண்டை, ஈகோ மோதல் பின் சந்தோஷம் என ஜாலியாக செல்கிறது இவர்கள் காதல். ஆனால், திருமண பேச்சு எடுத்தால் தினேஷ் தன் குடும்ப சூழ்நிலை கூறி பின் வாங்குகிறார்.

அதேபோல் படித்துவிட்டு பல வருடமாக திருமணமே ஆகாமல் இருக்கும் மியா ஜார்ஜ், இந்த வருடமாவது திருமணம் ஆகிவிடுமா என்ற ஏக்கத்தில் வாழ்கிறார். RJ வாக ரித்விகாவும் கிட்டத்தட்ட மியா ஜார்ஜ் போல் திருமணத்திற்கு ஏங்கும் கதாபாத்திரம். இந்த மூன்று கதாபாத்திரங்களின் விருப்பமும் நிறைவேறியதா என்பதை இயக்குநர் கொஞ்சம் ஜாலியாகவும், கொஞ்சம் எமோஷ்னலாகவும் கூறியிருப்பதே ஒரு நாள் கூத்து.

**படத்தை பற்றிய அலசல்**

என்ன தமிழ் சினிமா திருந்திவிட்டதா, பெண்களை பற்றி பேசும் படங்கள் தொடர்ந்து வருகிறதே, இதற்காகவே நெல்சன் அவர்களுக்கு பூச்செண்டு கொடுத்து வரவேற்கலாம். அட்டக்கத்தி தினேஷ்-நிவேதா காதல், இன்றைய ட்ரண்ட் ஐடி காதலை அழகாக காட்டியுள்ளார். நிவேதா, தினேஷை விடவும் முடியாமல், வீட்டிலும் சமாளிக்க முடியாமல் நன்றாக நடித்துள்ளார். ஆனால், தினேஷ் இன்னும் எத்தனை நாட்களுக்கு தான் இதே ரியாக்ஷனை கொடுப்பீர்கள்?.

படத்தில் பலரையும் கவரும் கதாபாத்திரம் மியா ஜார்ஜாக தான் இருக்கும். அத்தனை அழகு, வசனம் குறைவு, தன் முகபாவனைகளாலே கவர்கிறார். தன் அப்பாவின் பேச்சை மீற முடியாமல் ஒரு கூட்டிற்குள் அடைந்த பறவை போலான தன் கதாபாத்திரத்தை மிகவும் யதார்த்தமாக நடித்துள்ளார்.

ரமேஷ் திலக் மிகவும் ஜாலியான பையன், டேக்இட் ஈசி பாயாக கலக்குகிறார். இந்த படத்தில் கொஞ்சம் டீசண்டாக இருக்கிறார், இப்படியே நடிங்க ரமேஷ். ரித்விகாவும் எப்போதும் ஒரு சோகமான முகம், இறுதியில் ஒரு முடிவை துணிந்து எடுத்துவிட்டு, இதற்கு தானா இந்த திருமணம் எல்லாம் என்று பேசும் இடம் கிளாஸ்.

ஆனால், இத்தனை அழகாக சென்ற படத்தில் வேண்டுமென்றே டுவிஸ்ட் வைக்கிறேன் பாருங்கள் என்பது போல் இருக்கிறது கிளைமேக்ஸ் நெல்சன். யதார்த்தத்தை விட்டு மிகவும் விலகி நிற்கின்றது, அதிலும் கிளைமேக்ஸில் ரமேஷ் திலக் செய்வது, அவரின் கதாபாத்திரமும் அந்த இடத்தில் ஏதோ டுவிஸ்ட் வைக்க வேண்டும் என்பதற்காக அவரை பயன்படுத்தியது போல் உள்ளது. யதார்த்த லாஜிக் மீறல் என்று கூறலாம்.




கருணாகரன் இனி சீரியஸ் படம் தான் நடிப்பேன் என்று முடிவு எடுத்துவிட்டார் போல. ஆனாலும் நன்றாக நடிக்கின்றார், தொடர்ந்து இதுபோலவும் நடியுங்கள், சார்லீ இந்த கலைஞனை யாரும் மறக்க வேண்டாம், ஸ்கீரினில் வந்தாலே யதார்த்தமாக சிரிக்கவும் வைக்கிறார், சிந்திக்கவும் வைக்கிறார்.

ஜஸ்டின் பிரபாகரன் இசையில் தினேஷ்-நிவேதாவிற்கு வரும் டூயட் பாடல் இன்னும் பல வருடங்களுக்கு ஹிட் மெலோடி லிஸ்டில் இடம்பெறும். பின்னணி இசையில் ஒரு சில காட்சிகளில் இசையே வசனத்தை விட ஆக்கிரமிப்பு அதிகம். கோகுலின் ஒளிப்பதிவு மூன்று கதைகளையும் நன்றாக வித்தியாசப்படுத்தி காட்டுகின்றது.

**க்ளாப்ஸ்**

படத்தின் முதல் பாதி, அத்தனை செண்டர் ஆடியன்ஸுகளுக்கும் பிடிக்கும்படி உள்ளது. திருமணம் என்பது சாதாரணம் இல்லை. அதேநிலையில் உங்கள் இஷ்டத்திற்கு பெண்கள் திருமண விடயத்தில் விளையாடாதீர்கள் என்பது போன்ற கருத்துக்களை அழுத்தமாக கூறியிருக்கிறார்கள்.

பாலசரவணனின் காமெடி பல இடங்களில் சிரிப்பை வரவைக்கின்றது. இரண்டாம் பாதியிலும் பயன்படுத்தியிருக்கலாம்.

**பல்ப்ஸ்**

முதல் பாதியில் இருந்து விறுவிறுப்பு இரண்டாம் பாதியில் இல்லாமல் போனது. மியா ஜார்ஜ் அப்பா எப்படிப்பட்ட மாப்பிள்ளையை தான் விரும்புகிறார், எதற்காக அவரின் திருமணத்திற்கு சம்மதிக்காமல் இருக்கிறார் என்பதை அழுத்தமாக கூறவில்லை.

பெண்கள் பற்றிய படம் இருந்தாலும் பல இடங்களில் பாலசரவணன் 'இந்த பொண்ணுங்களே இப்படி தான்' என்று பேசுவது தேவையா?

மொத்தத்தில் திருமணம் என்பது சாதாரண விஷயமில்லை. இதில் எத்தனை கஷ்டம் உள்ளது. அதிலும் பெண்கள் எத்தனை கஷ்டத்தை கடந்து வருகிறார்கள் என்பதை கூறியதற்காகவே ஒரு நாள் கூத்தை ரசிக்கலாம்.

# காலத்தை இழுத்தடிக்கச் சான்றிதழ்; காணாமற்போனவர்களின் கதி என்ன?




காணாமற்போனவர்களின் உறவினர்கள் எதிர்கொள்ளும் மன உளைச்சலை காணாமற்போகச் செய்ய இலங்கையில் இன்னும் அர்ப்பணிப்புடன் எந்தவிதச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை.

மாறாக காலத்தை இழுத்தடிக்கும் முயற்சிகளையே அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. காணாமற்போனவர்களைக் கண்டறிய ஆரம்பிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஆணைக்குழு காணாமற்போனவர்களைக் கண்டறிய ஆக்கபூர்வமான எந்தவித நடவடிக்கையிலும் ஈடுபடாமல், நட்டஈடு வழங்குவதிலும் மரணச்சான்றிதழ் வழங்குவதிலுமே அக்கறை காட்டியது.

சமுர்த்தி நிவாரணம் வழங்குவதாகவும் வீட்டுத்திட்டத்தில் உள்வாங்குவதாகவும் வாக்குறுதியளித்து மரணச்சான்றிதழை வழங்க முயற்சிகளை மேற்கொண்ட போதும் காணாமற்போனவர்களின் உறவினர்களின் உறுதியான நிலைப்பாட்டால் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை.

இப்போது காணாமற்போனவர்கள் என்ற சான்றிதழை வழங்க அரசாங்கம் அமைச்சரவையில் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கு வழங்கப்படவுள்ள இந்தச் சான்றிதழ் மூலம் உறவினர்களைத் தேடும் உறவுகளுக்கு ஆறுதல் கிடைக்கப் போவதில்லை. ஆனால், காலத்தை இழுத்தடிப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் அரசுக்கு கிடைத்துள்ளது.

இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் கருத்தொன்றை முன்வைத்துள்ளார். “கடத்தப்பட்டு காணாமற்போனவர்கள் தொடர்பாக இராணுவத்தினர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை இராணுவத்தினர் தாமாகவே முன்வந்து ஏற்று விசாரணை செய்வார்கள் என ஒருபோதும் நம்பவில்லை”

இவ்வாறு சந்திரிகா கூறுவதிலிருந்து ஒன்று புலப்படுகின்றது. இலங்கை இராணுவம் காணாமற்போனவர்கள் விவகாரம் தொடர்பாக எந்தவிதமான முன்னேற்றங்களையும் செய்யவிடப்போவதில்லை. காணாமற்போனவர்கள் தொடர்பாக இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் அனைத்தும் காலத்தை இழுத்தடிக்கவும் காணாமற்போனவர்கள் தொடர்பாக சர்வதேச ரீதியாக வரும் அழுத்தங்களிலிருந்து அரசு தப்பித்துக் கொள்ளவும் மேற்கொண்ட நடவடிக்கையே.

காணாமற்போனவர்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாக சர்வதேச நாடுகளுக்கும் ஐ.நாவுக்கும் விளக்கமளிக்க தற்போது



காணாமற்போனவர்கள் என்ற சான்றிதழை வழங்க முற்பட்டுள்ளது அரசு.

தேர்தல் காலங்களில் காணாமற்போனவர்களின் விவகாரத்தை முக்கிய பிரசாரப் பொருளாகக் கையாலும் தமிழ் அரசியல் வாதிகளும் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் காணாமற்போய் விடுவதால் எப்போதும் காணாமற்போனவர்கள் தொடர்பான கோரிக்கை தமிழர் தாயகத்தில் இருந்து கொண்டே இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டுடன் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் காணாமற்போன தமது உறவினர்களை மீட்டுவிட வேண்டும் என்று பல வழிகளில் அவர்களின் உறவுகள் முயற்சிகளை மேற்கொண்டனர்.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், ஐக்கிய நாடுகள் சபையின் (முன்னாள்) உயர் ஆணையர் நவநீதம்பிள்ளை உள்ளிட்ட சர்வதேச தலைவர்கள் வடபகுதிக்கு விஜயம் மேற்கொண்ட சந்தர்ப்பங்களில் கவனயீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

மகிந்த ஆட்சிக்காலத்தில் மக்களின் வேண்டுகோள்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்ட நிலையில் அவரையும் மக்கள் நிராகரிக்க முற்பட்டதன் விளைவாக மைத்திரி-ரணில் தலைமையிலான கூட்டு அரசு உருவானது.

நல்லாட்சி அரசு என்று பெயர் சூட்டிக்கொண்ட இந்தக் கூட்டு அரசின் மீது தமிழ் மக்கள் அதீத நம்பிக்கை வைத்தனர். இந்த அரசை உருவாக்கியதில் பங்காளிகளாகத் தமிழர்கள் உரிமை கோரும் நிலையையும் பெற்றுக் கொண்டனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தமிழர்களின் எதிர்பார்ப்பை சிதறடிக்கும் வகையில் நல்லாட்சி அரசின் செயற்பாடுகளும் அமைந்துள்ளன.

மத்திய அரசு என்றால் அது இப்படித்தான் இருக்கும். மகிந்தவும் மைத்திரியும் வேறு நபர்களே ஆனாலும் அரசின் கொள்கை ஒன்றுதான். ரணில் பிரதமராகயிருந்தாலும் எதிர்க்கட்சித் தலைவராகயிருந்தாலும் தமிழர் நலனில் அக்கறையின்றியே செயற்படுவார். தமிழர்களுக்கு பிரச்சினை ஏற்படும் போது மௌனமாக இருப்பார் பிரச்சினைகளைத் தீர்க்க முற்பட்டால் எதிர்ப்பார்.

தமிழர்கள் நிரந்தரத் தீர்வைப் பெற்று சிங்களவர்களுக்கு இணையாக வாழ வேண்டும் என்று கருதுவதில் தவறேதும் இல்லை. தனிநாட்டுக் கோரிக்கையை தமிழர்கள் கைவிடவேண்டும். ஆனால் தமிழர்கள் எதிர்பார்க்கும் சுதந்திரமான வாழ்க்கையை ஏற்படுத்திக்கொடுக்க தயாரில்லை.

யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழர்கள் உரிமைகள் அனைத்தையும் இழந்து ஏதிலிகளாக சொந்த நாட்டுக்குள்ளேயே அவல வாழ்க்கையை வாழ்கின்றனர்.

இது தமிழர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையா? தமிழர்களை சிங்கள அரசுகள் அனைத்தும் நிந்திப்பதற்கு என்ன காரணம்? தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவதற்கு தடையாகவுள்ள காரணங்கள் என்ன? இதை அரசு வெளிப்படுத்த வேண்டும்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்சு பெற்ற தமிழர் தரப்புக்கு உரிமைகளை கொடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு அரசைச் சார்ந்துள்ளது.

தமிழினத்துக்காக தம்மையே அர்ப்பணித்து உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு போராடியவர்களைப் பயங்கரவாதிகள் பட்டியலில் இணைத்து படுகொலைக்குட்படுத்திவிட்டு எஞ்சியவர்களை அடிமைகளாக வைத்திருக்க நினைப்பது ஜனநாயக விரோதமானது.

அதுவும் அந்த மக்களின் ஜனநாயக உரிமைகளை கபட நாடகமாடிப் பெற்றுவிட்டு நட்டாற்றில் விடுவது நல்லாட்சிக்கு நன்மை பயக்காது.

தமக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கோடு பிள்ளைகளைப் போராட்டகளத்துக்கு அனுப்பி வைத்த பெற்றோர் உயிரிழந்தவர்களை மறக்க முடியாது காணாமற்போனவர்களையும் காண முடியாது கவலையுடன் கண்ணீர் மல்க வேண்டுவது கண்டும் கண்டு கொள்ளாது இருப்பது முறையல்ல.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடருக்கு முன்பாக ஒவ்வொரு ஆண்டும் காணாமற்போனவர்கள் தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்து பாசாங்கு காட்டி விட்டு அக்கூட்டத் தொடர் முடிந்ததும் நழுவுதல் நல்லாட்சிக்கு அணி சேர்க்காது.

**காண்டீபன்**

# facebook

## ஜோடிக் காக்கை



**ஓர்** ஊரில் பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு நாள் தூங்கி எழுந்ததும் விடியற் காலையில் ஜோடியாக உள்ள காக்கைகளைக் கண்டால் அன்றைக்கு நல்ல அதிர்ஷ்டம் உண்டாகும் என்று கேள்விப்பட்டான்.

தான் ஜோடிக் காக்கைகளைக் காலையில் எழுந்ததும் காண வேண்டும் என்ற எண்ணம் கொண்டான்.

அவ்வாறு எண்ணம் கொண்ட அப்பணக்காரன் தன் வேலைக்காரனை அழைத்து நீ விடியற் காலையில் ஜோடிக் காக்கைகளைப் பார்த்து வந்து என்னை எழுப்பு என்று கூறினான்.

அவ்வேலைக்காரன் மறுநாள் விடியற்காலையில் ஓர் இடத்தில் ஜோடிக் காக்கைகள் இருப்பதைப் பார்த்தான். உடனே ஓடிச்சென்று தன் எஜமானனை எழுப்பினான்.

அப்பணக்காரன் படுக்கையிலிருந்து எழுந்து சென்று பார்க்கும்பொழுது அங்கே ஒரு காக்கை மட்டும் இருந்தது. மற்றொரு காக்கை பறந்து போய்விட்டது.

ஒரு காக்கையை மட்டும் பார்த்த பணக்காரன் கோபம் கொண்டு மற்றொரு காக்கை பறந்து செல்வதற்கு முன்னால் என்னை வந்து ஏன் எழுப்பவில்லை என்று சொல்லிக் கொண்டே வேலைக்காரனை அடித்தான்.

அப்போது அந்த வேலைக் காரன எஜமானனே விடியற்காலையில் ஜோடிக் காக்கைகளைப் பார்த்ததால் எனக்கு உண்டான அதிர்ஷ்டத்தைப் பார்த்தீர்களா? உங்களிடம் அடிவாங்கியதுதான் அதிர்ஷ்டம் என்று கூறினான்.

அதைக் கேட்ட பணக்காரன் ஆமாம் என்று சொல்லி அடிப்பதை நிறுத்தி விட்டான். உண்மை உணர்ந்து அவனிடம் மன்னிப் புக் கேட்டான்.

## வீட்டுக் காவலாளி

**ஒரு** செல்வந்த முதலாளியின் வீட்டில் ஒருவர் காவலாளியாக வேலை பார்த்து வந்தார். முதலாளி தினமும் வீட்டுக்கு வரும் போது ஓடோடிச் சென்று வீதிக்கதவை திறந்து அவருக்கு வணக்கம் சொல்வது அவனது வழக்கம். ஆனாலும் ஒரு நாளேனும் அந்த முதலாளி பதில் கூறியதும் கிடையாது. காவலாளி முகத்தை ஏறெடுத்து பார்ப்பதும் கிடையாது.

ஒரு நாள் பசியோடிருந்த அந்தக் காவலாளி வீட்டுக்கு வெளியே உள்ள குப்பைத்தொட்டியில் வீசப்பட்ட உணவுகள் ஏதும் இருந்தால் எடுத்து சாபபிடுவோம் என குப்பைத்தொட்டியை கிளரும் போது முதலாளி அதனைக் கண்டார். ஆனாலும் வழக்கம் போல எதையுமே கண்டுகொள்ளாமல் சென்றுவிட்டார்.

அடுத்த நாள் அதே இடத்தில் காவலாளி உணவைத் தேடும் போது புதிதாக தயாரிக்கப்பட்ட சுத்தமான உணவுகள் ஒரு பையினுள் காணப்பட்டன காவலாளி சந்தோஷத்தில் எங்கிருந்து வந்தது என்றெல்லாம் பார்க்காமல் எடுத்துச் சென்றான்.

இவ்வாறே தினமும் அதே இடத்தில் ஒரு பையிருக்கும், அந்த பை நிறைய உணவுப்பொருட்கள் இருக்கும். அவனும் அதை தவறாமல் எடுத்து தன் மனைவி, குழந்தைகளுக்கு கொடுத்து வந்தான். இருந்தாலும் எந்த முட்டாள் இப்படி தினமும் பொருட்களை வாங்கி இங்கே விட்டுச் செல்கிறான் என மனதுக்குள் ஒரு நகைப்புடன் கூடிய கேள்வியும் வேற.

திடீரென ஒரு நாள் முதலாளி இறந்துவிட்டார். வீடு நிறைய முதலாளியின் உறவினர்களும், நண்பர்களும் வந்தனர். அன்று அதே இடத்தில் உணவுப்பொதியை தேடினான். உணவு இருக்கவில்லை. ஒரு வேளை பார்க்க வந்தவர் யாரேனும் எடுத்திருக்க முடியும் என நினைத்து விட்டு விட்டான். இரண்டாம் நாள் பார்க்கிறான், அந்த இடத்தில் உணவுப்பை இல்லை. மூன்றாம் நாள், நான்காம் நாள் என பார்க்கிறான். உணவுப்பை இருக்கவில்லை.

இப்படியே சென்றதால் அந்தக் காவலாளிக்கு தன் குடும்பத்துக்கு உணவளிக்க பெரும் சிரமமாய் போயிற்று. உடனே தனது முதலாளியம்மாவிடம் போய் சம்பளத்தை உயர்த்தவும் இல்லையாயின் வேலையை விட்டு விடுவதாகவும் கூறினான். அதற்கு முதலாளியம்மா மறுத்துவிட்டார்.

வேறு வழியில்லாமல் வீதியோரம் எடுக்கும் உணவுப்பை கதையையும், அது இல்லாததால் தன் குடும்பம் படும் அவஸ்தையையும் சொன்னான். உடனே முதலாளியம்மா கேட்டார் எப்போதிலிருந்து உணவுப்பை இல்லாமல் போனதென்று. அதற்கு அவனும முதலாளி இறந்த நாளிலிருந்து என சொன்னதும், முதலாளியம்மா "ஓ" என அழத்தொடங்கினார். இதனைப் பார்த்து கவலையடைந்த காவலாளி சம்பள உயர்வு வேண்டாம், நான் இங்கேயே வேலை செய்கிறேன், அழுவதை நிறுத்துங்கள் என கூறினான்.

அதற்கு முதலாளியம்மா, நான் அதற்கு அழவில்லை. என் கணவர் தினமும் ஏழு பேருக்கு உணவளித்து வந்தார். அதில் ஆறு பேரை ஏற்கனவே இனம் கண்டுவிட்டேன். ஏழாம் நபரைத்தான் இத்தனை நாளாய் தேடிக்கொண்டிருந்தேன். ஏழாவது நபர் நீதான் என தெரிந்து



கொண்டதும் சந்தோஷத்தில் அழுகிறேன் என்றாள். நான் தினமும் தவறாமல் வணக் கம் சொல்லியும் ஏறெடுத்தும் கூட பார்க்காத நம்ம முதலாளியா இப்படி நமக்கு உணவு தந்தார் என நம்பி யும் நம்பாமலும் யோசித்தபடியே அவன் சென்றான்.

அடுத்த நாளிலிருந்து முதலாளியின் மகன் தினமும் காவலாளியின் வீடு தேடி வந்து உணவுப்பையை காவலாளியின் கையிலே கொடுத்துச் செனறான். காவலாளி நன்றி சொல்லியும் முதலாளி மகன் அதற்கு பதில் சொல்லாமலே செல்வான், அவனது தந்தையைப் போல.

ஒரு நாள் இப்படித்தான் முதலாளியின் மகன் வீடு தேடிவந்து கையில் உணவுப்பையை கொடுக்கும் போது வழக்கம் போல நன்றி சொன்னான் காவலாளி. அதற்கு அங்கிருந்து எந்த பதிலும் இல்லை. பொறுமையை இழந்த காவலாளி மிகவும் உரத்த குரலில் நன்றி சொன்னான். திரும்பிப் பார்த்த அந்த சிறுவன் எனக்கும் என் தந்தையைப் போல் காது இரண்டும் கேட்காது என்று சொல்லிவிட்டு திரும்பிப் போனான்.

நாமும் இவ்வாறு தான் அடுத்தவரது நிலைமைகள் புரியாது பார்த்த மாத்திரத்திலே அவர்களை தவறாக முடிவெடுத்துவிடுகிறோம். அடுத்தவரது நடவடிக்கைகளுக்கு பின்னால் ஒளிந்துள்ள உண்மைத்தன்மையை அறியாமல் இந்தக் கதையிலிருந்து இரண்டு விடயங்களை எடுத்துக் கொள்ளலாம்

01. எதையும், யாரையும் பார்த்த மாத்திரத்திலே நம்பி முடிவெடுக்கக்கூடாது.

02. நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதர்களும் வெவ்வேறு விதமான போராட்டக் களத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 749

Search for people, places and things · Nagendram · Home

### சாயுமில்லர்




### சத்தியசீலன்



### கீர்த்தி கரன்




### வின்ஜக்சன்




### கேதா ஒலிவண்ணன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 37

## ஞாபகமறதி நோய் (Dementia)



மறதி என்பது வயோதிபத்தின் ஒரு இயல்பு என்பது எம்மில் பலரது கணிப்பாகும். அதனால் ஞாபக மறதியை இயல்பாகக் கருதி பெரும்பாலானோர் உதாசீனப்படுத்தி விடுகின்றனர். ஞாபகமறதி என்பது ஒரு நோய் என் பதைச் சிலரே அறிந்து வைத்திருக்கிறார்கள்.

மேலைத்தேய நாடுகளில் பெரும்பாலானவர்கள் இப்போது இந்நோயின் தாக்கத்தை பூரணமாக அறிந்து அந்நோயின் ஆரம்ப அறிகுறிகள் தென்பட்ட உடனேயே வைத்தியரை நாடி அது பற்றிய விளக்க அறிவைப் பெற் றுக் கொள்வதுடன் தேவையான சிகிச்சையையும் ஆரம்பித்து விடுகிறார்கள்.

மறதி நோயும் நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், இதய நோய்கள் போன்றே தவிர்க்கக்கூடிய அல்லது கட்டுப் பாட்டில் வைத்திருக்கக் கூடிய ஒரு நோய்தான். ஆனால் இந்த நோய் முக்கியமாக மூளையைப் பாதிப்பதால் பலரும் இதனை ஒரு நோயாகவே உணர்வதில்லை.

மறதி நோய் **(Dementia)** என்பது சிதைவடையும் மனம் என்று பொருள்படும். வயது கூடும் போது இந்த நோயால் பாதிப்படையும் சாத்தியக் கூறும் படிப்படியாக அதிகரிக்கும். ஐக்கிய இராச்சியத்தில் 65 வயது முதல் 69 வயதுக்கு இடைப்பட்டோரில் இந்நோயினால் பாதிக்கப் படக்கூடியோரின் சாத்தியக்கூறு **(Prevalence)** 1.3 வீதம் ஆகும். இந்த விகிதாசாரம் படிப்படியாக அதிகரித்து 95 வயது உள்ளவர்களில் 32.5 வீதம் வரை செல்லும். உலகளாவிய ரீதியில் 60 வயதுக்கு மேலானவர்களில் மறதி நோயால் பாதிக்கப்படுவோரின் வீதம் 3.9 ஆகும். ஞாபக சக்தியை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. குறுகிய கால நினைவாற்றல் (Short Term Memory )
2. நீண்டகால நினைவாற்றல் (Long Term Memory)

### குறுகிய கால நினைவாற்றல்

ஞாபகமறதி நோயால் பாதிக்கப்படும் பெரும்பாலானோரில் குறுகிய கால நினைவாற்றலே முதலில் பாதிப்புக்குள்ளாகும் இவர்கள் அறிந்தவர்களின் பெயர்கள் சமீபத்தில் நடந்த சம்பவங்கள், கணக்கு, வழக்குகள் என்பவற்றை மறந்து விடுவார்கள். இதனால் இவர்கள் குழப்பமடைந்தவர்களாகவும் இலகுவில் பதற்றமடைபவர்களாகவும் இருப்பார்கள். சில வேளைகளில் மனத் தளர்ச்சிக்கும் **(Depression)** ஆளாவார்கள்.

### நீண்டகால நினைவாற்றல்

நீண்ட காலமாக நினைவாற்றலை வெளிப்படை யான நினைவாற்றல் **(Explicit) Memory /Declarative memory)** நடைமுறை நினைவாற்றல் அல்லது உள்ளக நினைவாற்றல் **(Implicit Memory / Procedural Memory)** என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

### வெளிப்படையான நினைவாற்றல்

1. உபகதை நினைவாற்றல் **(Episode Memory)** - இதில் ஞாபக சக்தி சம்பவங்களையும் அதனோடு சம்பந்தப்பட்ட இடம், நேரம், உணர்ச்சி மற்றும் சூழ்நிலை அறிவு போன்றவற்றையும் தீர்மானிக்கிறது.

2. பொருள் நினைவாற்றல் **(Semantic Memory)** - இது கருத்து சார்ந்த அறிவு அர்த்தங்களின் ஞாபகம். பொதுவாக வாழ்க்கை முழுவதும் கற்ற விடயங்கள் பற்றிய அறிவு. உதாரணமாக நிறங்களின் பெயர்கள், எழுத்துக்களின் ஒலிகள், பொருள் அல்லது விலங்குகளின் பெயர் கள் என்பவற்றின் ஞாபகமாகும்.

### நடைமுறை நினைவாற்றல்

இந்த வகை ஞாபக சக்தியானது எம்மையறியாமல் நாம் இயல்பாகச் செய்யும் அன்றாட நடவடிக்கைகளை உதாரணமாக சைக்கிள் ஓடுதல் "கைப்பழக்கம்" போன்ற வற்றை நினைவில் இருத்துதலைக் குறிக்கும்.

ஞாபக மறதி நோயின் தாக்கத்தால் இந்த நீண்ட கால நினைவாற்றலும் நாளடைவில் பாதிப்படையக் கூடும். ஆரம்பத்தில் ஞாபக மறதியால் அவதிப்படுபவர் காலக் போக்கில் படிப்படியாக மொழியாற்றல், சிந்திக்கும் திறன், கற்கும் ஆற்றல், அவதானம் உட்பட்ட நீண்டகால ஞாபக



சக்தியை இழக்க ஆரம்பிப்பார். படிப்படியாக அவரது செயற் பாட்டு நினைவாற்றலும் பாதிக்கப்படும். எனவே பலசரக்கு கடையில் சமான்கள் வாங்குதல், மணத்தைப் பயன்படுத் துல், பொது போக்குவரத்து சேவையை பயன்படுத்துதல் போன்ற பல நாளாந்த கடமைகள் இதனால் பாதிப்படையும்.

அன்றாட அடிப்படை நடவடிக்கையான உணவுண் ணல், மலசல கூடத்தைப் பாவித்தல், குளித்தல், சுகாதாரம் ஆகிய செயற்பாடுகள் கூட நாளடைவில் பாதிக்கப்படக் கூடும். அவதானம் குறைவடையும் குடும்பத்தின் புதிய உறுப்பினர்களையும் குழந்தைகளையும் அடையாளம் காண்பதில் நோயாளி சிரமப்படுவார். அவரது வழமை யான குணநலன் மாற்றமடையக் கூடும். மிகவும் அன்பான, அமைதியான, கனிவான மனிதராக அதுவரைகாலமும் சமூகத்தில் வாழ்ந்த அவர் மிகவும் ஆவேசமான கோபக் காரனாக மாறவும் அதேவேளையில் வாழ்க்கை முழுவதும் சண்டைக் காரனாகவும் இருப்பவர் படிப்படியாக அமைதியான நபராக மாறவும் இந்நோய் இடமளிக்கும்.

### மறதி நோய்க்கான காரணிகள்

மறதி நோய் என்பது உடலில் சில தற்காலிக மாற்றங் களால் அல்லது நிரந்தரமான மாற்றங்களால் ஏற்படு கின்றது. முதலில் தற்காலிக மாற்றங்களை எடுத்துக் கொள்வோம். தற்காலிக காரணிகளால் ஏற்படும் ஞாபக மறதியானது சிகிச்சையின் பின்பு மாறக்கூடியது. எனவே சரியான மருத்துவ பரீட்சிப்பும் சிகிச்சையும் இன்றியமை யாதன. உதாரணமாக பின்வரும் தற்காலிக ஞாபக சக்திக் குறைபாட்டுக்கான காரணிகளை குறிப்பிடலாம்.

1. சித்த பிரமை **(Delirium)**

குறியை உடைய எவராவது பெரும்பாலும் வயோதிபப் பருவத்திலுள்ளவர்களுக்கு கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில் சித்தப்பிரமை ஏற்படுவதை அவதானிக் கலாம்.

1) தோற்று நோயால் அல்லது நுண்கிருமிகளின் தாக்கத்தால்
2) எலும்பு முறிவால்
3) சத்திரசிகிச்சையின் பின்பு அல்லது கடும் உபாதையால் அவதியுறும் போது
4) மதுபானப் பாவனையால் அல்லது அப்பழக் கத்தை விடும் போது இதனை அவதானிக்கலாம். பாதிப் புற்றவர் நிதானமிழந்து (Confused) நேரம் இடம் மற்றும் மக்களை அறியாதவராய் மாயத்தோற்றங்களை உணர்கின்றவராய் இருப்பார்.

இவர்களது நோய் அறிகுறியானது நோய்க்கான காரணி சிகிச்சையளிக்கப்படுமிடத்து இலகுவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

2. மனத்தளர்ச்சி **(Depression)**

இந்நோயானது வயோதிப வயதில் பொதுவானது. இன்று இலகுவில் சிகிச்சை அளிக்கப்படக்கூடிய மன நோயும் ஞாபக மறதி நோய் போலவே குணம் காட்டும்.

3. வைரஸ் என்செப்லைட்டிஸ் **(Viral Encephalitis)** மூளைக்காய்ச்சல் **(Memintis Hiv** சிபிலிஸ் **(syohilis)** போன்ற நுண்ணுயிர் தொற்றுக்கள்.

4. மூளை வீக்கம் **(Encephalopathy)**
5. வலிப்பு **(Epilepsy)**
6. மூளைக்கட்டிகள்
7. வலிப்பு நோய்க்கான மருந்துகள் உள்ளிட்ட சில வகை மருந்துகளின் உபவகைகள் **(side effects)**
8. மூளைச்சவ்வுக்குக் கீழான இரத்தக் கசிவு **(Subdural Heamarage)**
9. இயல்பு அழுத்த மூளையில் நீர் சேரல் **(Normal Preasure Hydrocephalus)**

- தொடரும்

வைத்திய கலாநிதி ஸ்ரீ.நகுலேஸ்வரன்
முதியோர் மனநல விசேட வைத்திய நிபுணர்,
ஐக்கிய இராச்சியம்.